பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 27 வியாழக்கிழமை (13-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:350

# ஜனாதிபதி - பிரதமர் சந்தித்துப் பேசியும் சமாதான முன்னெடுப்பு பற்றி முடிவில்லை

## கூட்டறிக்கை விடவும் மீண்டும் சந்திக்கவுமே இருவரும் நேற்று இணக்கம் கண்டனர்

கொழும்பு,நவம்பர்13

நாட்டின் அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

தேசிய நல்லிணக்க அரசு அமைக்கும் தனது திட்டம் குறித்துப் பேசவே இந்தச் சந்திப்புக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். எனினும், இந்தச் சந்திப்பில் தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது குறித்தோ சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுப்பது குறித்தோ விடயங்கள் ஏதும் பேசப்படவில்லை என்று அறியவந்தது.

ஆக, இச்சந்திப்புக் குறித்துக் கூட்டறிக்கை விடவும் மீண்டும் அடுத்த வாரத்தில் சந்திக்கவுமே இருவரும் இணக்கம் கண்டனர்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ஆரம்பமான இந்தப் பேச்சுக்கள் பிற்பகல் 2 மணிவரை நீடித்தன. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான பேச்சுக்கள் இணக்கமாகவும் சிநேகபூர்வமான சூழ்நிலையிலும் நடைபெற்றன என்று அறிவிக்கப்பட்டது.

இப்பேச்சுக்களை அடுத்து நேற்று ஐதேமுன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் தலைவர்கள் சகிதம் பிரதமர் ரணில், ஜனாதிபதியை அடுத்த வாரத்தில் மீண்டும் சந்தித்துப் பேச்சு நடத்துவாரென நேற்றைய பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டது.

கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைக்கும் யோசனை குறித்து ஆராய பிரதமர் ரணிலை ஜனாதிபதி சந்திரிகா நேற்றைய பேச்சுக்கு அழைத்திருந்த போதிலும், அந்த யோசனை குறித்து அங்கு ஆராயப்படவில்லையெனத் தெரிகிறது. சமாதான முன்னெடுப்புக் குறித்தும் முடிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

ஜனாதிபதியுடனான பிரதமரின் சந்திப்பு முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகவிருந்தது. ஆயினும், ஜனாதிபதி சந்திரிகா அரை மணிநேரம் தாம

(16ஆம் பக்கம் பார்க்க)



நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைலாகு கொடுத்து வரவேற்கின்றார்.

## ஜனாதிபதி - நோர்வேக்குழு நேற்று சந்தித்துப் பேச்சு

கொழும்பு,நவ.13

இலங்கைக்கு வந்திருக்கும் நோர்வே அனுசரணையாளர் குழு நேற்று மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

சமாதான நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதியுடன் அவர்கள் கலந்துரையாடினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நோர்வேத் தரப்பில் அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், விசேட அனுசரணையாளர் எரிக்சொல்ஹெய்ம், இணைப்பாளர் தோமஸ் ஸ்ரோன்குஸ்லண்ட் ஆகியோர் இச்சந்திப்பில் பங்குபற்றினர்.

ஜனாதிபதிக்கு உதவியாக பங்குபற்றிய குழுவில் அவரின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் இடம்பெற்றிருந்தார்.

நேற்றைய பேச்சுக்களின் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

நேற்றுமுன்தினம் மாலை பிரத

(16ஆம் பக்கம் பார்க்க)

## நோயாளரை ஏற்றிச் சென்ற பஸ் மற்றொரு பஸ்ஸுடன் மோதியது!

### 2 நோயாளிகள், 5 பயணிகள் காயம்

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்புக்கு ஏற்றிக்கொண்டு கிளம்பிய பஸ் வண்டியும் குருநாகலில் இருந்து பயணிகளை ஏற்றிவந்த மற்றொரு பஸ் வண்டியும் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் கண்டி வீதியில் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் நோயாளிகள் இருவர் உட்பட ஏழுபேர் காயமடைந்தனர்.

வைத்தியசாலையில் இருந்து 15 நோயாளர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட பஸ், கண்டிவீதியில் சுண்டிக்குளி பெந்தகொஸ்தே சபைக்கு முன்பாக, குருநாகலில் இருந்து யாழ். நகர் நோக்கி வந்துகொண்டிருந்த பஸ்ஸுடன் மோதியது. இதனால் இரண்டு பஸ்களிலும் பயணம் செய்தவர்களில் ஏழுபேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

மேலதிக சிகிச்சைக்காக கொழும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## 19ஆம் திகதி 'பட்ஜெட்' சமர்ப்பிப்பு

அடுத்த வருடத்திற்கான வரவு - செலவுத்திட்டம் 19ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நாடாளுமன்றச் செயலாளர் சிறியாணி விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்ற அவைத் தலைவர் அலுவலகம் இது தொடர்பாக அவருக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்படவிருந்த உத்தேச வரவு - செலவுத்திட்டம் கடந்த மூன்றாம் திகதி நாடாளுமன்றம் ஜனாதிபதியால் ஒத்திவைக்கப்பட்டதன் காரணமாகத்தான் சமர்ப்பிக்கப்படவில்லை.

எதிர்வரும் 19ஆம் திகதி நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி, ஐக்கிய தேசிய முன்னணி அரசின் வரவு - செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8)

## ஹெல்கிஸன் - பிரபா இன்று வன்னியில் சந்தித்துப் பேச்சு

கொழும்பு,நவ.13

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், சமாதான சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரை இன்று புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் சந்திக்கிறார்.

இன்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில் புலிகளின் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் தங்கன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

தென்னிலங்கையின் அரசியல் நிலைவரம் நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இவ்வேளையில், புலிகளின் தலைவருடனான இச்சந்திப்பு முக்கியத்துவம்வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

சமாதான முன்னெடுப்புக்களில் தமது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ள விடுதலைப் புலிகள், ஜனாதிபதியின் நடவடிக்கைகளினால் சமாதான முன்னெடுப்புக்கள் பாதிப்படையலாம் என்று கருதுவதாகத் தெ

(16ஆம் பக்கம் பார்க்க)

## மதவாச்சியில் மினிவான் மரத்துடன் மோதி விபத்து!

### யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஐவர் காயம்

யாழ்ப்பாணம்,நவ.13

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்துகொண்டிருந்த மினிவான் ஒன்று மதவாச்சிப் பகுதியில் நேற்று அதிகாலை 4மணியளவில் வீதியைவிட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. அந்த வானில் பயணம் செய்தவர்களில் ஐந்து பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தோர் உடனடியாக மதவாச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். பின்னர் அவர்களில் இருவர் அங்கிருந்து யாழ்.ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டனர்.

அவர்களது பெயர் விவரம் வருமாறு:-

கந்தையா சரவணமுத்து (வயது 72 - சரசாலை வடக்கு) அவரது மனைவியான சரவணமுத்து சிவபாக்கியம் (வயது 65).

காயமடைந்து மதவாச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவோரின் பெயர் விவரங்கள் தெரியவரவில்லை. (ஐ-6-15-139)

## திருகோணமலை சிறையிலிருந்து நான்கு கைதிகள் துணிகர மீட்பு!

### நேற்று அதிகாலை சிறைக்குள் சிலர் புகுந்தனர் எனத் தகவல்

கன்னியா,நவ.13

திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நான்கு சந்தேகநபர்கள் நேற்று அதிகாலை அங்கிருந்து தப்பிவிட்டனர். சிறைச்சாலைக்குள் புகுந்த சிலர் அவர்களை மீட்டுச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 4 மணியளவில் சிறைச்சாலைக்குள் புகுந்த சிலர், சிறைக் கதவை உடைத்து நான்கு சந்தேகநபர்களையும் கூட்டிச்சென்று விட்டனர் என்று திருகோணமலை பொலிஸ் அதிகாரி துய சமரவீர தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இந்நால்வரும் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கேபிரகாஷ், மாட்டின் றோமியஸ், மகேந்திரராஜா, சுரேஷ்குமார் ஆகியோரே இவ்வாறு தப்பியுள்ளனர் என்று விளக்கமறியல்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இச்சம்பவம் சிறைச்சாலை அதிகாரிகளைப் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இதற்கிடையே, சிறைச்சாலை ஆணையாளர் றூமி மர்சூக்கின் பணிப்புரையின்பேரில் அநுராதபுரத்திலிருந்து சிறைச்சாலை உயர்மட்டக் குழு ஒன்று திருகோணமலை விளக்கமறியல்சாலைக்கு நேற்றுக் காலை விரைந்தது. கைதிகள் தப்பிச் சென்றது தொடர்பான பூர்வாங்க விசாரணைகளை அந்தக் குழு மேற்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று புளியங்குளத்துக்கு விஜயம்

கிளிநொச்சி,நவ.13

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று புளியங்குளத்திற்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் சோதனைச்சாவடிகளைப் பார்வையிட்டார்.

நேற்றுக்காலை வவுனியா அரச அதிபர் கே.கணேஷுடன் படையினரின் ஓமந்தை முன்னரங்கக் காவலரண்களுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்ததன் பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளின் சோதனைச்சாவடி பகுதிக்குச் சென்று அங்கு மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகளைப் பார்வையிட்டார். அப்பகுதியில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

ஓமந்தை இராணுவச் சோதனைச்

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மின்கம்பிகள் மீது சாய்ந்துவிழக்கூடிய மரக்கிளைகளை அகற்ற உதவுக!

## மின்சார சபை அதிகாரி வேண்டுகோள்

உயர் மின் வலுக்கொண்ட மின்சாரக் கம்பிகளுக்கு மேல் முறிந்துவிழக் கூடிய அல்லது சாய்ந்து விழக்கூடிய நிலையில் மரங்கள் மற்றும் மரக் கிளைகள் காணப்பட்டால் அதுகுறித்து அருகிலுள்ள மின்சார சபை அலுவலகங்களுக்குத் தெரியப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

தற்போது மழைகாலம் என்பதால் உயர் மின் வலுக்கொண்ட மின்சாரக் கம்பிகளுக்கு மேல் ஊரவிப்புத் தன்மைகொண்ட மரக்கிளைகள் முட்டுப்பட்டால் அதன்மூலம் மின் ஒழுக்கு ஏற்பட்டு உயிராபத்துகள் ஏற்படக் கூடிய அபாயம் உண்டு எனவும் -

எனவே, அவ்வாறான மரக்கிளைகளை வெட்டிவிடுவதற்காக அது குறித்து தகவல் தருமாறும் -

மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதேவேளை -

மரக்கிளைகள் மின்கம்பிகளுக்கு மேல் முட்டுவதால் ஏற்படக்கூடிய மின் ஒழுக்குகள் மற்றும் அதனால், ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் குறித்து பெரும்பாலான பொதுமக்கள் உரிய அக்கறையின்றி இருக்கின்றனர்.

இதனால், அத்தகைய மரக்கிளைகளை வெட்டுவதற்கு மின்சார சபை ஊழியர்கள் செல்லும்போது அவர்கள் அதனை வெட்டவிடாது வீண் தகராறுகளில் ஈடுபடுகின்றனர்.

தமது பயன்தரு மரங்களைத் தறிப்பதற்கு ஏற்படக்கூடிய நஷ்டம் குறித்து கவலைப்படுகின்ற அவர்கள், மின் ஒழுக்குகளினால் ஏற்படக்கூடிய பெரும் ஆபத்துக்களை உணராமல் இருக்கின்றனர்.

எனவே, இது குறித்து மக்கள் விழிப்படையவேண்டியது அவசியமாகும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-4)

# யாழ். படைத் தலைமையகத்தில் 'பொப்பி மலர்' தின வைபவம்

## தளபதி பொன்சேகா தலைமையில்

யாழ்ப்பாணம்,நவ.13

'பொப்பி மலர்' தினத்தை ஒட்டிய விசேட நிகழ்ச்சிகள் பலாலியில் உள்ள யாழ். பாதுகாப்பு தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

பலாலியில் உள்ள படைத் தலைமையகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் உயிரிழந்த இராணுவத்தினரின் நினைவுத் தூபிக்கு அருகில் நடைபெற்ற விசேட நிகழ்ச்சியில் வடபகுதி படைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உட்பட உயர் படை அதிகாரிகள் கலந்துகொண்டு நினைவுத் தூபிக்கு பொப்பி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர் என்று பாதுகாப்பு தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முதலாம், இரண்டாம் உலகப் போர்களின்போதும் தமது உயிர்களைத் தியாகம் செய்த படையினர் மற்றும் இலங்கையின் பாதுகாப்புக்கும் சமாதானத்துக்காகவும் செயற்படும்போது உயிரை அர்ப்பணித்த படையினர் மற்றும் பொலீஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்காக பொப்பி மலர் தினத்தில் பாதுகாப்பு தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# ஜனாதிபதி ஒத்திவைத்த நாடாளுமன்றை கூட்டும் அதிகாரம் சபாநாயகருக்கில்லை!

## எதிர்க்கட்சிகள் கடிதம் மூலம் அறிவிப்பு

கொழும்பு,நவ.13

ஜனாதிபதியால் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றக் கூட்டத் தொடரை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன் கூட்டும் அதிகாரம் சபாநாயகருக்கு இல்லை. ஆனும் கட்சியினரின் வற்புறுத்தலின்பேரில் குறிப்பிட்ட திகதிக்கு முன் நாடாளுமன்றத்தைக் கூட்ட முயற்சிப்பது அரசமைப்புக்கு முற்றிலும் முரணானதாகும் என்று எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக சபாநாயகரிடம் அறிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சிகள் இணைந்து இது தொடர்பான கடிதம் ஒன்றை நேற்று சபாநாயகரிடம் கையளித்தன. சுதந்திரக்கட்சி சார்பில் மஹிந்த ராஜபக்ஷவும், ஜே.வி.பி. சார்பில் விமல் வீரவன்ஸவும், நு.ஆ. சார்பில் பேரியல் அஷ்ரப்பும், மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் தினேஸ் குணவர்த்தனவும், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ராஜா கொலுரேயும் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

# பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி மீளக் கையளிக்கும் எண்ணமில்லை!

## பொ.ஐ.மு. பேச்சாளர் அமுனுகம தகவல்

கொழும்பு,நவ.13

பாதுகாப்பு அமைச்சை மீளக் கையளிக்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை. நாடு சுதந்திரம் பெற்ற காலம்முதல் பாதுகாப்பு அமைச்சு நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர், ஜனாதிபதி ஆகியோர் வசமே இருந்துள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம எம்.பி. நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

உள்துறை அமைச்சு எப்போதும் பாதுகாப்பு அமைச்சுடனேயே இருந்துள்ளது. ஆனால், ஐ.தே.க. முன்னணி அரசு 2001ஆம் ஆண்டு பதவிக்கு வந்ததும் சூசகமாக உள்துறை அமைச்சை உருவாக்கியது. முப்படைகளுக்குப் பொறுப்பான பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றாலும் பொலீஸ் திணைக்களத்தை அரசு வைத்துக்கொள்ளும் எண்ணத்துடனேயே உள்துறை அமைச்சொன்றை அரசு உருவாக்கியது.

தமக்குள்ள அதிகாரம் குறித்து ஜனாதிபதி உயர்நீதிமன்றத்திடம் ஆலோசனை கோரியபோது, ஐந்து நீதியரசர்கள் பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியின் பொறுப்பிலேயே இருக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளனர்.

ஊடகத்துறை மாபியாவை ஒழிக்கவே மக்கள் தொடர்பாடல் அமைச்சின் கீழ் வந்த ஊடகத்துறையையும் ஜனாதிபதி பொறுப்பேற்றார். கடந்த காலத்தில் ஜனாதிபதியின் கருத்தை மக்கள் அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு, ஊடகத்துறை மாபியா திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது.

# வடக்கு-கிழக்கு சர்வஜன வாக்கெடுப்பு மேலும் ஓராண்டுக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,நவ.13

வடக்கு-கிழக்கு தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பை அடுத்த ஆண்டுவரை ஒத்திவைப்பதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒரேநிர்வாக மாகாணங்களாக இருக்க வேண்டுமா? அல்லது தனித்தனி நிர்வாக மாகாணங்களாக இருக்கவேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்காகவே இந்த சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவிருக்கிறது.

ஒவ்வொரு தடவையும் ஒத்திவைக்கப்பட்டுவந்த இந்த வாக்கெடுப்பு இறுதியாக எதிர்வரும் 17ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அதனை இப்பொழுது ஜனாதிபதி மீண்டும் ஒத்திவைத்திருக்கிறார்.

இதன்படி, கிழக்கு மாகாண சர்வஜன வாக்கெடுப்பு அடுத்த ஆண்டு நவம்பர் 17ஆம் திகதிக்கும், வடக்கு மாகாண சர்வஜன வாக்கெடுப்பு அடுத்த ஆண்டு டிசெம்பர் முதலாம் திகதிக்கும் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

### கலந்துரையாடல் ஒத்திவைப்பு

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த கலந்துரையாடல் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறும் எனவும் - நாளைய தினம் நடைபெறாது எனவும் முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். அன்றைய தினம் பிற்பகல் 2.45மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கலந்துரையாடல் நடைபெறும். (எ-10)

# பிரம்மகுமாரிகள் நிலைய ஆன்மீகக் கருத்தரங்கு.

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ். பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம், 'வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்களிப்பு' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்றை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடத்தவுள்ளது.

திருமதி பகீரதி கணேசதுரை தலைமையில் இடம்பெறும் இக் கருத்தரங்கில் உளநலத்துறை தொடர்பாக சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெறும்.

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கிப் பிரிவு டாக்டர் ஆர்.சிவசங்கர், வலிகாமம் கல்வி வலய ஆசிரியர் நிலைய முகாமையாளர் த.சிவகுமாரன், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ம-9)



சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம், கடல் வாழ் ஆரோக்கிய உணவும் போஷாக்கும் என்ற செயலமர்வு யாழ்.நாவலர் மண்டபத்தில் நேற்று நடத்தியது. தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்த எம்.டி.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த வள ஆளணி அலுவலர் செல்வி கே.வேல்விழி இதில் கருத்துரை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

### பல்கலையில் கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை மற்றும் சமூக அரசறிவியல் துறை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள நக்ரும் சமாதான நடவடிக்கைகளின் மீதான பிரதிபலிப்புகள் என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் நெப்ராஸ்கா வெஸ்லியன் பல்கலைக்கழக பேராசிரியர் றொபேட் சி.ஒபெஸ்ற் மற்றும் கலாநிதி வி.நித்தியானந்தம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கவுள்ளனர். (எ-9)

# சு.க-ஜே.வி.பி. கூட்டணி குறித்து விரைவில் அறிவிப்பு

சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையிலான கூட்டணி குறித்து முக்கிய செய்தியொன்று இவ்வாரம் வெளியிடப்படுமென்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம நேற்று தெரிவித்தார்.

செய்தியாளரொருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்த அவர், சு.க - ஜேவி.பி கூட்டுத் தொடர்பான பேச்சு முடிவடையும் நிலையில் இருக்கிறது.இது தொடர்பாக அவ்விருகட்சிகளின் செயலாளர்களும் இணைந்து அறிக்கையொன்றை விடுப்பார்கள் எனவும் கூறினார்.

ஜே.வி.பியினர் நேற்று மாலையும் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர் என்று அறியப்படுகிறது.

# மழை தொடரும் சாத்தியம் இருப்பதாக மீண்டும் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் தொடர்தைனால் வடகீழ் பருவக்காற்றுடனான மழை இன்னும் சில தினங்களுக்கு தொடரலாம் என திருநெல்வேலியில் இயங்கிவரும் வானிலை அவதானிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து பேரிடர் அவதானிப்பு நிலையத்தின் தொழில்நுட்ப அலுவலர் தெரிவித்ததாவது:-

கடந்த 2001ஆம் ஆண்டு ஆயிரத்து 945.1 மில்லிமீற்றர் மழையும் - 2002 ஆம் ஆண்டு ஆயிரத்து 413.5 மில்லிமீற்றர் மழையும் பதிவாகியுள்ளது.

இவ்வருடம் ஆரம்பமுதல் நேற்று புதன்கிழமை வரை 1000.9 மில்லிமீற்றர் மழையும் பதிவாகியுள்ளது. கடந்த முதலாம் திகதி முதல் 247.5 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,நவ.13

வல்வெட்டித்துறை - நாரந்தனை கிழக்கு நொச்சிபுலம் ஸ்ரீஞானவைரவர் ஆலய புனராவர்த்தன பஞ்ச குண்டபஷ பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.16 மணிமுதல் 9.45வரையிலான சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 8மணிமுதல் மாலை 4மணி வரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

# பெற்றோல், ம.எண்ணெய், டீசல் எரிபொருள்களின் விலை அதிகரிப்பு

பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் என்பவற்றின் விலைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டிருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இதன்படி ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ஒரு ரூபாவாலும், மண்ணெண்ணெய், டீசல் என்பவற்றின் விலைகள் ஐம்பது சதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஒரு லீற்றர் டீசலின் விலை 30 ரூபா 53 சதத்திலிருந்து 31 ரூபாவாகவும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 23 ரூபாவிலிருந்து 23 ரூபா 50 சதமாகவும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறே ஏனைய எரிபொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

# கிராம அலுவலர்கள் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சி

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ். மாவட்டத்திலுள்ள கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 19ஆம் திகதிமுதல் இருதினங்கள் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வில் 'கிராம அலுவலர்களின் கடமைகளும் அலுவலக முகாமைத்துவமும்' என்ற தலைப்பில் கரவெட்டி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் வே. வீரபத்திரபிள்ளையும், 'மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளில் கிராம அலுவலர்' என்ற தலைப்பில் யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளையும், 'கிராம அபிவிருத்தியில் பெண்களும் சிறுவர்களும்', என்ற தலைப்பில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகமும் 'பிரதேச மூல வளங்களை இனங்காணலும் தேவை மதிப்பீடும்' என்ற தலைப்பில் யாழ். செயலக பிரதித் திட்டப்பணிப்பாளர் நா.சிவபாதசுந்தரமும் 'நுண்கருத்திட்டம் தயாரித்தல்' என்ற தலைப்பில் உதவித் திட்டப் பணிப்பாளர் வை.சத்தியசீலன் ஆகியோரும் கருத்துரையாற்றுவர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் 'திட்டங்களை அமுல்படுத்தலும் கண்காணித்தலும்' என்ற தலைப்பில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் (நியாப்) க.பாலகிருஷ்ணனும், 'சட்டமுறையிலான பணிகளும் சட்டமும் ஒழுங்கும் பேணுதலும்' என்ற தலைப்பில் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும் 'பாதிக்கப்பட்ட மக்களின் உளவியல் பங்கும் வழிவூட்டலும்' என்ற தலைப்பில் குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தைச் சேர்ந்த திருமதி ரஞ்சித் நந்தகுமாரும் 'கிராம அபிவிருத்தியில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு' பற்றி உதவித் திட்டமிடற் பணிப்பாளர் வ.சாம்பசிவமும் 'காணி சட்டங்களும் இயற்கை பேணலும் - சட்டங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம்' என்ற பொருளில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஞானசேகரமும் 'கிராம அலுவலர் அறிந்திருக்கவேண்டிய நிதிய ஏற்பாடுகள்' என்ற பொருளில் மேலதிக மாவட்ட செயலர் நிதிக்கிளை சு.சண்முகரடணமும் - உரையாற்றவுள்ளனர்.(ம-5)

# ஈராக்கிய ஆட்சிக் குழுவின் நிர்வாகி அமெரிக்க விசாரணைக் கூண்டில்!

ஈராக் இடைக்கால ஆட்சிக்குழுவை வழிநடத்தும் அமெரிக்க நிர்வாகி போல் பிறீமர், அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களின் விசாரணைக் கூண்டில் நிறுத்தப்பட்டார்.

நேற்று உடனடியாக அமெரிக்காவுக்கு வருமாறு அவருக்குத் தகவல் பறந்தது. அங்கு, அவரிடம் ஈராக்கின் இன்றைய நிலை குறித்து துருவித்துருவி விசாரணை நடந்தது.

இராஜாங்கச் செயலர் கொலின் பவல், பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டோலீசாரைஸ் மற்றும் உயர் அதிகாரிகள் அவரிடம் விசாரணை நடத்தினர்.

இடைக்கால ஆட்சிக்குழுவின் செயற்பாடுகளில் விரக்தியடைந்துள்ள அமெரிக்க நிர்வாகம் அங்கு ஏற்பட்டுள்ள கடும் நெருக்கடியை உடைப்பது எப்படி என்பது குறித்து ஆராய்ந்துவருகிறது.

இந்நிலையில், போல் பிறீமர் திடீரென அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டதும் அங்கு அவரிடம் விசாரணை நடந்ததும் உலகின் கவனத்தை ஈர்ந்துள்ளது.

வெள்ளை மாளிகையில் வைத்தே போல் பிறீமர் விசாரிக்கப்பட்டார்.

ஈராக்கின் அரசியல் யாப்பை தயாரிப்பதற்குரிய கால அட்டவணையை வகுப்பது மற்றும் தேர்தல் நடத்துவது குறித்தும் போல் பிறீமரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

தனது பதவியை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் இடைக்கால ஆட்சிக் குழுவினரின் செயற்பாடுகள் போதுமானவையல்ல என்று போல் பிறீமர் விசாரணையில் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

பிறீமர் மீதான விசாரணையை அடுத்து, இடைக்கால ஆட்சிக்குழு கலைக்கப்பட்டு புதிய ஆட்சி அமைப்பு உருவாக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

ஆனால், எதிர்வரும் ஜூனில் ஈராக்கில் பொதுத் தேர்தல் நடத்துவது என்றும் அதுவரை ஆப்கானிஸ்தானில அமைக்கப்பட்டது போன்று அரசு ஒன்றை அமைத்துவிட அமெரிக்கா எண்ணியுள்ளதாகவும் அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஈராக்கின் ஆட்சிக் குழு உறுப்பினர்களில் பலர் அமெரிக்க அரசிடம் சலுகைகளைப் பெறுவதில் கவனமாக உள்ளனர். ஆனால், தமது செயற்பாடுகளை முன்னெடுக்க அவர்கள் தயக்கம் காட்டிவருகின்றனர் என்று அமெரிக்கா கூறுகிறது.

ஆனாலும், இடைக்கால ஆட்சிக் குழு கலைக்கப்படமாட்டது என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# ஈராக்கில் குண்டுத் தாக்குதல் 14 இத்தாலியர்கள் உயிரிழப்பு!

பக்தாத்,நவ.13

ஈராக்கின் தெற்கு நகரான நஸீரியாவில் நேற்று நடத்தப்பட்ட வாகனக் குண்டுத் தாக்குதலில் இத்தாலியப் பொலீஸார் 14 பேர் கொல்லப்பட்டனர் மேலும் பலர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இத்தாலியத் தலைநகர் ரோமில் நேற்று அதிகாரிகள் இத்தத்தகவலை வெளியிட்டனர். அதேசமயம், இந்தத் தாக்குதலில் எட்டு ஈராக்கியர்களும் கொல்லப்பட்டதாக கட்டாரை தளமாகக் கொண்டு இயங்கும் அல்ஜெஸீரா தொலைக்காட்சி தெரிவித்தது.

கொல்லப்பட்ட பொலீஸாரில் 11பேர் துணைப்பொலீஸ் படையைச் சேர்ந்தவர்கள் என்றும் நால்வர் இராணுவச் சிப்பாய்கள் என்று ரோமில் அதிகாரிகள் கூறினர்.

ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்த்தப்பட்ட பின்னர் இத்தாலியப் படையினர் தாக்குதலுக்கு இலக்காகியமை இதுவே முதற்தடவை. இத்தாலியப் பொலீஸார் தங்கியிருந்த வளாகத்தின் முன்வாயிலில் ஊடறுத்து நுழைந்த குண்டு பொருத்தப்பட்ட வாகனம் அங்கிருந்த தலைமையக் கட்டடத்தை மோதி வெடித்தது.

பெரும் சத்தத்துடன் வெடித்த குண்டினால் அருகிலிருந்த கட்டங்களும் பலத்த சேதமடைந்தன. ஈராக்கில் போர் முடிந்துவிட்டதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவித்த பின்னர் அங்கு உயிரிழந்த அமெரிக்க மற்றும் கூட்டுப்படையினரின் எண்ணிக்கை 153 ஆக அதிகரித்துள்ளது.

ஈராக்கின் புனரமைப்புப் பணிகளுக்கென இத்தாலி 2ஆயிரத்து 300 துருப்பினரை அங்கு அனுப்பியுள்ளது. அவர்களில் 340 பேர் நஸீரியாவில் தளம் அமைத்துள்ளனர்.

# இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு ரஷ்யாவில் உற்சாக வரவேற்பு

ரஷ்யாவுக்குச் சென்ற இந்தியப் பிரதமர் வாஜ்பாயிற்கு அந்நாட்டு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது.

பிரதமர் வாஜ்பாய் ரஷ்யா, கசகஸ்தான், சிரியா ஆகிய மூன்று நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் பொருட்டு நேற்றுமுன்தினம் காலை புதுடில்லியிலிருந்து தனி விமானம் மூலம் ரஷ்யாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோ விமான நிலையத்தில் பிரதமர் வாஜ்பாயை ரஷ்யத் துணைப் பிரதமர் போரிஸ் அல்யோசின், துணை வெளியுறவு அமைச்சர் அலெக்ஸாண்டர் லோசுகோவ், இந்தியத் தூதர் கே.ரகுநாத், உயர் அதிகாரிகள் ஆகியோர் உற்சாகமாக வரவேற்றனர்.

விமான நிலையத்தில் பிரதமர் வாஜ்பாய்க்கு முப்படைகளின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

வரவேற்பு முடிந்து பிரதமர் கார் மூலம் விமான நிலையத்தில் இருந்து 15கி.மீ தூரத்தில் வனப்பகுதியில் அமைந்துள்ள நோவாகரேவா என்கின்ற இடத்திற்குச் சென்றார். அங்கு பிரதமர் வாஜ்பாயை ரஷ்ய ஜனாதிபதி புட்டின் வரவேற்றார்.

அதைத் தொடர்ந்து பிரதமர் வாஜ்பாய்க்கு, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் இரவு விருந்து கொடுத்தார்.

இச்சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையேயான இராணுவ ஒத்துழைப்பு, சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரிடுதல், ஈராக் பிரச்சினை ஆகியவை குறித்து ஆராயப்பட்டன.

ரஷ்யப்பயணத்தை முடித்து அவர் நேற்று கசகஸ்தான் புறப்பட்டுச் சென்றார்.



பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் (மத்தி), பிரதமர் அஹமட் குரே (இடது), நாடாளுமன்ற சபாநாயகர் ரபிக் அல்-நட்ஷா ஆகியோர் புதிய அரசின் நாடாளுமன்ற அமர்வை ஆரம்பித்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

# மாலைதீவில் ஆறாவது தடவையாக அப்துல் கையும் ஜனாதிபதியானார்!

மாலைதீவின் ஜனாதிபதியாக அப்துல் கையும் (வயது-65) ஆறாவது முறையாக நேற்றுமுன்தினம் பதவியேற்றார்.

ஆசிய நாடுகளில் நீண்டகாலம் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் என்ற பெருமைக்குரிய இவர், கடந்த ஜூனில் நடந்த தேர்தலில் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பதவியேற்பு வைபவத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றினர்.

தேர்தலில் இவருக்கு 90.28 சதவீத ஆதரவு கிடைத்தது. ஆனாலும், மனித உரிமை அமைப்புக்கள் தேர்தல் நடந்தமுறை குறித்து விசனம் வெளியிட்டிருந்தன.

வாக்குச்சீட்டில் இவரது பெயர் மட்டுமே இருந்தது. இவர் மீண்டும் ஜனாதிபதியாக வேண்டுமா? வேண்டாமா? என்ற கேள்வி மட்டும் அதில் இருந்தது. இதனால், இந்தத் தேர்தலை அங்கீகரிக்க முடியாதென அந்த அமைப்புக்கள் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1978 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்ற இவர், ஏனையோரை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அனுமதிப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் நிலவிவருகிறது.

(ம)

உலக அரங்கில்

# பிரதமர் அஹமது தலைமையிலான அரசு பலஸ்தீனத்தில் நேற்று பதவியேற்றது

ரமளா,நவ.13

பலஸ்தீனத்தில் பிரதமர் அஹமத் குரே தலைமையிலான புதிய அரசு சம்பிரதாயபூர்வமாக நேற்றுப் பதவியேற்றது.

புதிய அரசில் 24 பேர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேலுடன் தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சை மீண்டும் முன்னெடுப்பது என்று புதிய அரசு உறுதியளித்திருக்கிறது.

பலஸ்தீனத்தில் புதிய அரசு பதவியேற்பதை முன்னிட்டு, மேற்குக் கரை காஸாபகுதிகளில் இஸ்ரேல் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளது.

இதற்கான உத்தரவை இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் விடுத்தார். கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதால், பயங்கரவாதச் செயல்கள் அதிகரிக்கலாம் என்றும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

பலஸ்தீனத்தின் புதிய அரசுக்கும் இஸ்ரேல் காட்டியிருக்கும் ஆதரவான சமிக்ஞை இதுவென கூறப்படுகிறது.

இதையடுத்து, கடந்த மூன்று மாதங்களாகத் தடைப்பட்டுள்ள பேச்சை மீண்டும் ஆரம்பிக்க இரு தரப்பும் ஆர்வம் காட்டிவருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒகஸ்ட் மாதம் ஜெருசலேமில் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பின், இரு தரப்புக்குமிடையில் நடத்துவந்த பேச்சு தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரதமர் குரே தலைமையிலான அரசின் திட்டங்களுள் இஸ்ரேலுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளும் திட்டமும் உள்ளது என்று கூறப்படுகிறது.

பலஸ்தீன நகரங்களில் இருந்து இஸ்ரேலியப் படையை வெளியேற்றல், மேற்குக் கரையில் யூதக்குடியேற்றங்களை நிறுத்துதல், இஸ்ரேலுக்கும் - பலஸ்தீனத்திற்கும் இடையே தடுப்புச் சுவர் அமைப்பதைத் தடுத்து நிறுத்துதல் என்பன புதிய அரசின் திட்டங்களாகும் என்று வெளியுறவு அமைச்சராகப் பதவியேற்றுள்ள சாத் தெரிவித்துள்ளார்.

## ஜோர்ஜிய ஜனாதிபதி எச்சரிக்கை!

ரிப்ளிசி,நவ.13

தன்னைப் பதவி விலகுமாறு ஆர்ப்பாட்டம் செய்பவர்களுக்கு ஜோர்ஜிய ஜனாதிபதி எட்வேர்ட் ஷிவார்நட்ஸே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் அவர் சூளுரைத்திருக்கிறார்.

ஜனாதிபதியின் இந்த எச்சரிக்கையை அடுத்து ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துவரும் குழுக்களை அரச சக்திகள் சில பின்தொடர்கின்றன என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

# வெனிசுலா சிறையில் கலவரம்; ஏழு கைதிகள் கொடூரக்கொலை!

கரகாஸ்,நவ.13

வெனிசுலாவில் சிறைக்கைதிகளிடையே நேற்றுமுன்தினம் கலவரம் மூண்டது. காவலாளிகளின் துப்பாக்கிகளைப் பறித்து சுட்டும் கத்தியால் குத்தியும் அவர்கள் கடுமையாக மோதினர். கலவரத்தில் ஏழு கைதிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவின் பொலிவர் மாகாணத்தில் உள்ள சிறைச்சாலை ஒன்றிலேயே இந்தக் கலவரம் மூண்டது. உடனடியாக அங்கு விரைந்த பொலீஸார் கலவரத்தை கட்டுப்படுத்தினர்.

சிறைச்சாலையில் இரு கோஷ்டிகளிடையே ஏற்பட்ட வாக்குவாதமே கலவரமாக மூண்டது. கலவரம் மூண்டவுடன் சிறைக்கதவுகளை உடைத்துக் கொண்டு கைதிகள் வெளியேறினர்.

சிறைச்சாலை வளாகத்தின் பல பகுதிகளிலும் நின்று கைதிகள் ஒருவரை ஒருவர் கடுமையாகத் தாக்கிக் கொண்டனர் என்று சிறைச்சாலை, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கலவரத்தில் இருவரின் தலைகள் துண்டிக்கப்பட்டன. ஏனைய ஐந்துபேர் துப்பாக்கிக் குண்டுதுளைத்து இறந்தனர்; பலர் காயமடைந்தனர்.

அங்கு கலவரம் தொடராமல் இருக்க படையினரின் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

கடந்த மாதமும் இதே சிறையில் கைதிகளிடையே மோதல் வெடித்தது. அதில் மூவர் கொல்லப்பட்டனர். இங்கு கைதிகளிடையே மோதல் நடப்பதும் அது கலவரமாக மாறுவதும் வாடிக்கையாகிவிட்டது என்று சிறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

2001ஆம் ஆண்டு முதல் கடந்த மாதம் வரை இந்த சிறைச்சாலையில் 240 கைதிகள் கலவரங்கள் மூலம் கொல்லப்பட்டுள்ளனர்.

(ம)

# வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஏழு பேர் டொமினிக்கன் குடியரசில் சுட்டுக் கொலை!

டொமினிக்கன் குடியரசில் நடந்த பொது வேலைநிறுத்தத்தில் ஏற்பட்ட கலவரத்தால் கடந்த இருபத்திநான்கு மணித்தியாலங்களில் ஏழு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பெற்றோலிய விலையைக் குறைக்கும் படியும், அரச வைத்திய சாலைகளில் வசதிகளை அதிகரிக்கும் படியும், வெளிநாட்டு கடன்கொடுப்பனவுகளுக்கு முடிவு கட்டும்படியும் தெரிவித்தே வேலை நிறுத்தப் போராட்டம் நடந்தது.

போராட்டத்துக்கு தடையாக இருந்த படையினருக்கும், போராட்டத்தில் ஈடுபட்டோருக்கும் இடையில் திடீரென கலகம் மூண்டது.

இதில் படையினரின் தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்; பலர் கைது செய்யப்பட்டனர்.

எட்டு மில்லியன் மக்களைக் கொண்ட டொமினிக்கன் குடியரசு ஐரோப்பிய, வட அமெரிக்க சுற்றுலாப் பயணிகளுக்கு மிக விரும்பத்தக்க சுற்றுலாமையமாக விளங்கிவருகிறது.

அங்கு போராட்டங்கள் நடந்தால் சுற்றுலாத்துறை வருமானம் பாதிக்கும் என அரசு எச்சரிக்கை செய்தது. அதையும் மீறி போராட்டம் நடந்தியதாலேயே மோதல் கலவரம் வெடித்தது என அரசு அறிவித்துள்ளது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோர் வீதிகளில் டயர்களை தீயிட்டு எரித்தனர். பாத்திரங்களில் அடித்துச் சத்தம் எழுப்பினர். அத்துடன், அங்கு நின்ற படையினர் மீது கற்களை வீசியுள்ளனர். இதனால் ஆத்திரமுற்ற படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று அரசு கூறியுள்ளது.

கொல்லப்பட்டவர்கள் அனைவரும் இருபது வயதுக்கு உட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 525 |
| திகதி | 11.11.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல. 4324618-4339665

வெற்றி இலக்கங்கள் **06 09 18 21**



லக்கினம் மேடம்

ஜக்பொட் பரிசு ரூபா. 3,176,400/- வெல்லப்படவில்லை.

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **3,919,450/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 332,774 | 10 | 3,327,740 |
| 2 இலக்கங்கள் | 30,555 | 20 | 611,100 |
| 1 இல + லக்கினம் | 30,231 | 30 | 906,930 |
| 2 இல + லக்கினம் | 2,825 | 100 | 282,500 |
| 3 இலக்கங்கள் | 809 | 500 | 404,500 |
| 3 இல + லக்கினம் | 71 | 5,000 | 355,000 |
| 4 இலக்கங்கள் | 05 | 100,000 | 500,000 |
| 4 இல + லக்கினம் | - | 3,176,400 | - |
| மொத்தம் | 397,270 | - | 6,387,770 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,387,770/-

தொடர் இல. 5314982க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 நவம்பர் 14ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**4328149-6-00**
**4339380-1-81**
**4335590-3-07**
**4331041-1-65**
**4325727-6-53**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விதியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

**புதிய கல்வியாண்டுக்கான விரிவுரைகள் 2003/2004**

முகாமைத்துவ கற்கைகள் வணிகப்பீட 2ஆம் வருட (Part-I) மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டின் (2003/2004) விரிவுரைகள் 01.12.2003 இல் ஆரம்பமாகும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம். (சி-31261) (25-13-16)



## உடனடி வேலைவாய்ப்புகள்

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) மேற்பார்வையாளர் - (Supervisor for Multiduty)
2) வரவேற்பாளர் - (கணக்கியல் அறிவுடன் ஆண்/பெண்) (Receptionist cum Accounts Assistant with computer Knowledge)
3) சமையலாளர் - (கீழைத்தேய மேலைத்தேய உணவு தயாரித்தல்) Cook (Western & Eastern)
4) உணவு பரிமாறுபவர் - (Waitors)
5) காவலாளி - (Watcher)
6) அறை உதவிப்பணியாளர் - (Room boys)

மேற்படி பதவி நிலைகளுக்கு தகுதியுடைய விண்ணப்பதாரிகள் சுயவிவரக் கோவை, கல்விச் சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் 16.11.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரையிலான நேரத்தில் நேரில் சமுகந்தரவும்.

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**BASTIAN HOTEL,**
37, Kandy Road,
Jaffna.

(24652) (34-13-16-25)



# நிதர்சன நிறுவனத்தின் 15ஆம் ஆண்டு நிறைவில்

ஈழத் தமிழரின் வாழ்வியலாகவும் தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தின் வரலாறாகவும் ஒளிரும்

## ஒளிவீச்சு காண்பியச் சஞ்சிகை





- தொடுவானம்
- நீதி கேட்கும் நெடுந்தீவு
- தசாப்தம் கடந்து நிற்கும் கடற்புலிகள்
- வித்தாகி வீழ்ந்த களப்படப்பிடிப்பாளர்கள்
- விடுதலைத் தீப்பொறி
- சமகாலப் பார்வை
- காஞ்சிரங்குடாப் படுகொலையின் நினைவில்
- கொள்ளை போகும் கடல் வளம்
- தமிழீழப் பெண்கள் எழுச்சி நிகழ்வு
- பிரச்சினை(குறும்படம்)

ஆகிய அம்சங்களுடன்




புதுமெருகும், புதுப்பொலிவும் துலங்க 10 வருடங்களாய் ஒளிவீசி 100 வது சிறப்பிதழாக வெளிவரப்போகிறது.

100வது சிறப்பிதழ் இன்று வெளிவருகின்றது.

தொடர்பு முகவரி
நிதர்சனம்
1002, திருநகர்,
கிளிநொச்சி.

விளம்பர அனுசரணை:
**தமிழீழ வைப்பகம்**
தமிழரின் காப்பகம்

(C/31021) UTHAYAN Graphics

உதயன்

# நிலைமை இன்று தெளிவாகும்

இலங்கைக்கு வந்திருக்கும் நோர்வே அனுசரணையாளர் குழு நேற்றும் முன்தினமும் கொழும்பில் பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து அரசியல் நிலைமைகள் மற்றும் சமாதான பேச்சுக்கள் குறித்து பல சுற்றுக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது.

இரண்டு தசாப்தகால இனப்போருக்கு அமைதித் தீர்வைக்காணும் சமாதான முயற்சிகளில் அனுசரணைப் பொறுப்புக்கு நோர்வே தரப்பு அழைக்கப்பட்டு சுமார் 5 ஆண்டுகளாகிவிட்டன. இந்தக் காலத்தில் சமாதான முயற்சிகளில் பல ஏற்ற இறக்கங்களை - நெருக்கடிகளை - அவர்கள் சந்தித்துள்ளனர். அந்த வரிசையில் இப்போது ஏற்பட்டிருப்பது மிக முக்கியமான - புதுமையான - அரசியல் சிக்கல்.

சமாதானப் பேச்சுக்களில் ஒரு தரப்பாக அரசையும் மறுதரப்பாக தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாகப் புலிகளையும் கொண்டு இந்த சமாதான முயற்சிகளை முன்னெடுத்தனர் நோர்வேத் தரப்பினர்.

சமாதான நடவடிக்கைகள் கொஞ்சம் முன்னேறுவதற்கு முன்னரே மூன்றாந்தரப்புப் பிரச்சினை வந்தது. முஸ்லிம்கள் மூன்றாந்தரப்பாகப் பேச்சுக்களில் இணைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தல் எழுந்தது. பேச்சுகளில் பங்குபற்றும் முதல் இரண்டு தரப்புகளுள் ஒன்றான புலிகளின் பக்கத்திலிருந்து இக்கோரிக்கைக்கு - உடனடியாக - சாதகமான பதில் வராத சூழ்நிலையில், இந்த மூன்றாந்தரப்புப் பிரச்சினையை நோர்வே அனுசரணையாளர்கள் எவ்வாறு சுமுகமாகத் தீர்க்கப்போகிறார்கள் என்ற கேள்வியும் எதிர்பார்ப்பும் எழுந்தது.

அந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முன்னரே - மூன்றாந்தரப்பு பங்குபற்றுவது பற்றிய சிக்கலுக்கு விடைகாண்பதற்கு முன்னரே - முதல் இரு தரப்புகளுள் ஒன்றான அரசுப் பக்கத்தில் நெருக்கடி எழுந்துவிட்டது.

இலங்கை அரசுப் பக்கத்தில் சமாதானப் பேச்சுக்களைக் கையாளவேண்டிய தரப்பு யார் என்பது தான் புதிதாகத் தோன்றியுள்ள பிரச்சினை.

தற்போதைய சமாதானப் பேச்சுக்களுக்கு அடிப்படையாக அமைந்திருப்பது அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம். அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் முக்கியமானது அதில் குறிப்பிடப்பட்டுள்ள யுத்தநிறுத்தம் தொடர்பான ஏற்பாடுகள்.

இந்த யுத்தநிறுத்த ஏற்பாடுகளை பேச்சுக்களில் பங்குபற்றும் இருதரப்பும் சுமுகமாகக் கடைப்பிடிக்க வேண்டும். அப்படிக் கடைப்பிடித்தால்தான் யுத்தநிறுத்தம் பேணப்படும்; சமாதான சூழல் நிலவும்; அமைதிப் பேச்சுக்கள் தொடரும்.

யுத்தநிறுத்த ஏற்பாட்டை அரசு தனது பக்கத்தில் செவ்வனே கடைப்பிடிப்பதாயின், அதனோடு தொடர்புடைய அரச இயந்திரங்கள் அரசுத் தரப்பின் கைகளில் - அரசின் கட்டுப்பாட்டில் - அரசின் கண்காணிப்பில் - இருக்கவேண்டும். ஆனால், பாதுகாப்பு அமைச்சு, உள்துறை அமைச்சு போன்றவற்றை அரசின் தலைமையிடம் இருந்து ஜனாதிபதி பிடுங்கிக் கொண்டுவிட்டதால் அவை இப்போது, சமாதான முயற்சிகளின் பங்காளியான அரசுத்தரப்பிடம் இல்லை.

இதனால் கைகள் கட்டப்பட்ட நிலைக்கு அரசுத் தரப்பு தள்ளப்பட்டுவிட்டது. இந்த யதார்த்தத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நன்கு உணர்ந்துள்ளார். எனவேதான், பறித்த முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி திருப்பித் தங்களிடம் தராவிட்டால், ஜனாதிபதியே சமாதான முயற்சிகளைத் தொடரலாம் என அவர் அடித்துக் கூறிவிட்டார்.

இனி இலங்கைப் பக்கத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கப் போவது யார்? பிரதமர் ரணில் தலைமையிலான அரசா? இல்லை ஜனாதிபதியா? ஜனாதிபதிதான் பேச்சுக்களை தொடரப் போகின்றாராயின் பேச்சில் சம்பந்தப்பட்ட ஏனைய தரப்புக்கள் - புலிகள் இயக்கம், உதவி வழங்கும் நாடுகள், சர்வதேச சமூகம் போன்றவை - அந்த ஒழுங்கை ஏற்றுக்கொள்ளுமா? - இவையே இப்போது முக்கிய கேள்விகளாக எழுந்துள்ளன.

கிளிநொச்சியில் இன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நோர்வே அனுசரணையாளர்கள் சந்தித்துப் பேசுகின்றார்கள். அந்த விரிவான பேச்சுக்களின் பின்னர் தமிழ்ச்செல்வன், செய்தியாளர்களைச் சந்திப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய அரசியல் நெருக்கடி நிலைமை தொடர்பான எதிர்காலப் போக்குகள், அவை சம்பந்தமான புலிகளின் நிலைப்பாடு போன்றவை இன்று ஓரளவு தெளிவாகுமென எதிர்பார்க்கலாம்.

## காலத்தின் பதிவு



வீழ்ந்து விடவில்லை நாங்கள்....

படம்: பிரேம்

# தமிழரின் போர்க்கால வாழ்வு பற்றி நோர்வே பல்கலை. மாணவி ஆய்வு

மாதகல்,நவ.13

கடந்த இரண்டு தசாப்த காலமாகக் கொடிய போரின் மத்தியில் வாழ்ந்தவர்கள் வடக்கு - கிழக்கு வாழ் தமிழர்கள். அவர்கள் போரின் மத்தியிலும் எப்படி தமது பொருளாதாரத்தை, கல்வியை, பண்பாட்டைக் கட்டிக்காத்தார்கள் என்ற விடயங்கள் தற்போது ஆய்வுக்குரிய விடயங்களாகியுள்ளன.

இத்தகைய ஆய்வுகளுக்காக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து மாணவர்கள் குடாநாட்டுக்கு வருகை தருகின்றனர். அந்த வகையில் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றைச் சேர்ந்த மாணவியான பீா அமீன், தற்போது யாழ். குடாநாட்டில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். 'குடாநாட்டு சமூகமும் பாதுகாப்பும் வளப் புனர்நிர்மாணமும்' என்ற தலைப்பில் அவர் ஆய்வுகளைச் செய்துள்ளார்.

குடாநாட்டு மீனவ சமூகத்தினரைச் சந்தித்து போர்க்காலங்களில் எப்படி அவர்கள் தமது பொருளாதார நிலைமைகளைச் சமாளித்துக்கொண்டார்கள்? பின்னர் எப்படித் தங்களது தொழிலைத் தொடர்ந்தார்கள்? பிள்ளைகளின் கல்விக்கு எப்படி உதவினார்கள்? என்பன போன்ற விடயங்கள் பற்றி அவர் மீனவர்களிடம் கேள்வி கேட்டு ஆய்வுகளை மேற்கொள்கிறார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான வி.பி.சிவநாதன், கலாநிதி சூசை ஆனந்தன் ஆகியோர் நோர்வே மாணவியின் ஆய்வுக்கு உதவி வருகின்றனர்.

பீா அமீன், நோர்வே பல்கலைக்கழகத்தில் கற்றுவருகின்றபோதிலும், அவர் பலஸ்தீனத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-95)

# ரெலிகொம் நிறுவன சித்தன்கேணி காணி விவகாரம் சுமுகமாக தீர்ப்பு

வலி.மேற்கு,நவ.13

ரெலிகொம் நிறுவனத்துக்குச் சொந்தமான சித்தன்கேணியில் அமைந்துள்ள காணி தொடர்பாக நிறுவனத்துக்கும் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலைக்கும் இடையே நீண்டகாலமாக நிலவிவந்த பிரச்சினை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வலி.மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்திலேயே இப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது. காணிப்பிரச்சினை தொடர்பாக இரு சாராரின் சம்மதத்துடனும் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ரெலிகொம் நிறுவனத்துக்குச் சொந்தமான கட்டடத்தையும் கட்டடம் அமைந்துள்ள காணியையும் 'மேற்படி பாடசாலைக்குக் கையளிப்பது எனவும் - மிகுதிக் காணியை ரெலிகொம் நிறுவனத்துக்குக் கையளிப்பது எனவும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட வலி.மேற்கு பிரதேச செயலர் வி.என். மோகன்ராஸ் உட்பட சம்பந்தப்பட்ட அனைவராலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி பாடசாலையினால் ரெலிகொம் நிறுவனத்துக்குச் சொந்தமான காணியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கொட்டகைகளை அகற்றி இம்மாத இறுதிக்குள் காணியை ஒப்படைக்க வேண்டும் என்றும் - முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரு சாராரின் சம்மதத்துடனும் பிரதேச செயலர் மேற்கொண்ட இந்த நடவடிக்கையின் காரணமாக நீண்டகாலமாக நிலவி வந்த பிரச்சினை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் பல தரப்பினர் முன்பு ஈடுபட்டபோதும் அது பயனளிக்காமை குறிப்பிடத்தக்கது.

(ம-10-175)

**நாளை**

ஐப்பசி 28

வெள்ளிக்கிழமை

(14.11.2003)

திதி : பஞ்சமி

பிற்பகல் 4.10 வரை

நட்சத்திரம்: புனர்பூசம்

பின்னிரவு 3.17 வரை

சுபநேரம்: 6.07-7.37

ராகுகாலம்: 10.37-12.07

(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

குழந்தைகள் தான் ஏழைகளின் செல்வம்.

# கடலாமை பிடித்தவருக்கு ரூ.500 அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்ட கடலாமையை உயிருடன் பிடித்த அனலைதீவு வாசிக்கு யாழ். நீதிமன்றம் 500 ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

பண்ணைக் கடலில் நேற்றுக் காலை தான் பிடித்த கடலாமையுடன் வந்து கொண்டிருந்த அனலைதீவைச் சேர்ந்த இருன்ரன ஒபியே என்பவரைக் கைதுசெய்த யாழ். பொலிஸார், அவரை யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவருக்கு 500 ரூபாவை அபராதமாக நீதிவான் விதித்தார். பிடித்து வரப்பட்ட கடலாமையை மீண்டும் கடலில் விடுமாறு பணித்ததோடு, அது தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் யாழ். பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ம-5)

# மாவீரர் தினத்தையொட்டி வலிகாமத்தில் பதாதைகள்

வலி.வடக்கு,நவ.13

மாவீரர் நாளையொட்டி வலிகாமம் பிரதேசத்தில் பதாதைகள் கட்டப்பட்டுள்ளன.

பிரதான வீதிகளிலும் கிராமங்களிலும் உள்ள முக்கிய சந்திகளிலும் இந்தப் பதாதைகள் கட்டப்பட்டு வருகின்றன.

மாவீரர் நாளை எழுச்சிகரமாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவீரர்களின் பெற்றோர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை அந்தந்தப் பகுதி சனசமூக நிலையங்கள் மற்றும் பொது நிறுவனங்களில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

குறிப்பிட்ட நாள்களில் அந்தந்தப் பகுதிகளில் மாவீரர்களானவர்களின் திருவுருவப் படங்களும் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளன. (ம-86)

# கல்வி மேம்பாட்டுப் பேரவை வலய ரீதியாகவும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.13

கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அலுவலகங்கள் ஒவ்வொரு கல்வி வலயத்துக்கும் தனித்தனியே ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

யாழ். கல்வி வலயத்துக்கான அலுவலகம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொடர்ந்து பேரவை பற்றிய அறிமுகம், 2004 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள கல்வி மேம்பாடு தொடர்பான அறிமுகம் ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து ஏனைய கல்வி வலயங்களிலும் இந்த அலுவலகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ். மாவட்ட அலுவலகம் யாழ். கல்வி வலய வளாகத்தில் ஏற்கனவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10-7)

# சிங்களக் கலைஞனின் உள்ளத்திலிருந்து

# சிங்கள - தமிழ் இலக்கிய ஒன்றுகூடல்

**அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கலைஞர்களின் ஒன்று கூடலில் காடையர்களால் மேற்கொள்ளப்பட்ட அசம்பாவிதங்கள் குறித்து சில சிங்களப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளைச் சாடுகிறார் பிரபல சிங்கள நாவல் இலக்கிய கர்த்தாவான ஜயதிலக கம்மல்லவீர. அவரது உளக் குமுறலின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

நமது நாட்டில் வெளிவரும் பத்திரிகைகள் சிலவற்றில் பத்திரிகையாளனாகக் கடமையாற்றிய அனுபவம் காரணமாக, ஒரு கலைஞனது பொறுப்புத் தொடர்பான புரிந்துணர்வு என்னிடம் நிறையவே உள்ளது. விசேடமாக, செய்தியொன்றை வழங்கும் வேளையில், தன்னால் வழங்கப்படும் அச்செய்தி முற்றுமுழுதாக உண்மையான செய்தி என்பதைச் சகல வழிகளிலும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது அப்பத்திரிகையாளனது கடமை. அவ்விதமே பொதுமக்களைக் கோபம் அடையச் செய்யும் வகையிலோ, அவர்களது உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் வகையிலோ அமையதக்க விடயங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகள், கடிதங்கள் மற்றும் விளம்பரங்கள் ஆகியவற்றைப் பிரசுரத்துக்கெனத் தயாரிக்கும் வேளையில் பத்திரிகையாளனொருவன் பாரிய சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டியது அவசியம் என்பதை அவன் மறக்கக் கூடாது. இவற்றில் முக்கியமாகக் குறிப்பிட்டதொரு இனத்தினரது அல்லது மதத்தைப் பின்பற்றுபவர்களது மனதைப் புண்படுத்தாத வகையில் செய்திகள் வழங்குவது தொடர்பாக மிகுந்த கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகும்.

கடந்த மாதம் 29ஆம் மற்றும் 30ஆம் திகதிகளில் கொழும்பு புதிய நகரமண்டபத்தில் இடம்பெற்ற சிங்கள மற்றும் தமிழ்க்கலைஞர்களின் ஒன்று கூடல் நிகழ்வு மற்றும் அந்நிகழ்ச்சி இடம்பெற்ற வேளையில் ஏற்பட்ட அசம்பாவிதச் சம்பவங்கள் ஆகியவை தொடர்பாக சில செய்திப் பத்திரிகைகளும், அப்பத்திரிகைகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும் நடந்து கொண்ட விதம் குறித்து எனது மனதில் எழுந்த வெறுப்புணர்வை வெளிப்படுத்தும் நோக்கத்திலேயே நான் இக்கட்டுரையை எழுத முயன்றேன். இச்சம்பவம் இடம்பெற்ற தினத்துக்கு மறுநாள் வெளிவந்த செய்திப் பத்திரிகைகளில் 'லக்பிம' மற்றும் 'லங்காதீப' ஆகிய இரு பத்திரிகைகளும் அச்சம்பவம் குறித்து நியாயமான, உண்மையான செய்திகளை வெளியிட்டிருந்தமை பற்றி முதலில் இங்கு குறிப்பிட்டாக வேண்டும் ஆனால், "இவ்விதமாகத்தான் சிங்கள தமிழ்க் கலைஞர்களின் ஒன்று கூடல் நிகழ்ச்சி குழப்பம் மிக்க சச்சரவாக மாற்றமுற்றது" என்ற தலைப்பில் இம்மாதம் 2ஆம் திகதி 'லக்பிம' என்ற சிங்களப் பத்திரிகை ஞாயிறு இதழில் 'நூவன் ஹன்கந்த' என்ற பத்திரிகையாளர் எழுதிய கட்டுரையில் தவறான செய்திகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், அக்கட்டுரைக்கு குணசேன விதானகே என்பவர் தெரிவித்த கருத்தையும் பிரசுரித்ததன் மூலம் அப்பத்திரிகை, பத்திரிகை நடுநிலைத் தன்மைக்கு மாசுகற்பித்துள்ளது.

குறிப்பிட்ட ஒன்றுகூடல் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்யும் நடவடிக்கைகளில் நானும் சம்பந்தப்பட்டிருந்ததாக வெளியான தகவல் முற்றுமுழுதாகத் தவறான செய்தியாகும். ஒரு கலைஞன் என்ற வகையில் எனக்கு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றே நான் அந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். சிங்கள நாவல் இலக்கியம் தொடர்பான கருத்தரங்கில் பங்கேற்குமாறு என்னை ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர்.

இனங்களுக்கிடையே பிரிவினை உணர்வை உருவாக்கும் முயற்சிக்கு எப்போதும் எதிர்ப்புத் தெரிவித்துவரும் நான், அழைப்பு விடுக்கப்படாதிருந்தாலகூட சிங்கள மற்றும் தமிழ்க் கலைஞர்கள் இணையும் எந்தவொரு நிகழ்ச்சியிலும் பங்குகொள்ளும் வழக்கத்தைக் கொண்டுள்ளேன்.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் நான் சில கலைஞர்களுடன் இணைந்து யாழ்ப்பாணம் சென்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்க் கலைஞர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி, நான்கு நாள்களை அவர்களுடன் செலவிட்டுத் திரும்பியது எவருடைய அழைப்பின் பேரிலோ அல்லது எவருடைய பாதுகாப்பின் கீழோ அல்ல. அது சுயேட்சையாகவும் சுதந்திரமாகவும் மேற்கொள்ளப்பட்ட பயணமாகும்.

இவ்விதம் வேறு பல சிங்களக் கலைஞர்களும் அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்துக்குச் சென்று அங்குள்ள தமிழ்க் கலைஞர்களையும், ரசிகர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். அது மட்டுமன்றி, தமது கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றியதையும், வடபகுதி வாழ் தமிழ் மக்களின் உணர்ச்சி பூர்வமான வரவேற்பாலும் உபசரிப்பாலும் மகிழ்ச்சியடைந்தமையையும் பற்றி நான் கேள்விப்பட்டுள்ளேன்.

இந்நிகழ்ச்சிக்கான அழைப்பைப் பெற்றுக்கொண்ட வேளையில், இதனை ஒழுங்கு செய்யும் இளைஞர் குழுக்களின் எதிர்பார்ப்பு என்ன? என்பது பற்றியும் இந்நிகழ்ச்சியில் எத்தனை பேர் பங்குகொள்ளவுள்ளனர் என்பது பற்றியும் மட்டுமே அறிந்து கொள்ள விரும்பினேனேயன்றி, விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆதரவாளர்களும் அந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவுளனரா என்பது குறித்து அறிந்து கொளவதில் நான் அக்கறை செலுத்தியதில்லை.



நமது நாட்டின் அரசியல் நிர்வாகம் பற்றி நான் அறிந்துள்ள வகையிலும் யாழ்ப்பாணம் சென்றிருந்த வேளையில் பொதுமக்களுடன் கலந்துரையாடித் தெரிந்து கொண்ட வகையிலும் உலகத்தில் இன்று பலம்மிக்க ஆயுதம் தாங்கிய கெரில்லா அமைப்பொன்றின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வாழ்ந்துவரும் பொதுமக்களின் மனச்சாட்சியின் படியான உண்மையான மன உணர்வுகளைத் தெரிந்துகொள்ள முடிந்தது.

1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனக்கலவரத்துடன் நேரடித் தொடர்பு கொண்டவர்கள் எனப் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பௌத்த பிக்குகளின் கைகளால் பிரித் நூல் வாங்கி கையில் கட்டிக்கொண்டு, சமூக சேவகர்கள் எனத் தம்மைக் காட்டிக் கொள்ள விரும்பும் கூட்டத்தினர், குறிப்பிட்ட தமிழ்க் கலைஞர்களையும் புத்திஜீவிகளையும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் குற்றம் சுமத்துவதை எவ்விதம் சிங்களப் பொதுமக்களால் நம்பமுடியும்?

எந்தவித இனமத பேதங்களுமின்றி வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளையும் மலையகப் பிரதேசத்தையும் சேர்ந்த கலைஞர்களுக்கு இச்சிங்கள தமிழ்க் கலைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டதாக இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்த 'ஹிரு அமைப்பினர்' தெரிவித்திருந்தனர்.

அவ்வாறாயின், அத்தமிழ்க்கலைஞர்களிடையே விடுதலைப் புலிகளின ஆயுதப் பலத்துக்கு தலைதாழ்த்துவோர் மட்டுமன்றி, விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ்மக்களின் விடுதலைக்காகவே போராடி வருகின்ற தென்ற கருத்தைக் கொண்டவர்களும இருந்திருக்கக் கூடும். இருந்தபோதிலும், அவர்கள் எமது கருத்துக்களைச் செவிமடுப்பதற்கும் தமது கருத்துக்களை எமக்கு எடுத்துக் கூறுவதற்கும் இந்நிகழ்ச்சியில் பங்குபற்ற முன்வந்தார்களேயன்றி, சிங்கள மக்களைக் கொன்று குவித்து அவர்களது இரத்தத்தை ருசி பார்க்கும் நோக்கத்துடன் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வரவில்லை.

நாம் யாழ்ப்பாணம் சென்றிருந்த வேளையில், எம்மை வரவேற்றுக் கலந்துரையாடிய கலைஞர்களில் சிலா, விடுதலைப் புலிகள் அமைப்பின் கொளகைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதத்திலான கருத்துக்களை வெளியிட்டனரேயொழிய, எம்மீது உடல் ரீதியான தாக்குதல் மேற்கொள்ளவோ, அன்றிக் கூச்சலிட்டுக் குழப்பம் விளைவிக்கவோ எத்தனித்ததில்லை என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியமாகும்.

இந்த நாட்டில் அமைதியான வாழ்வை மேற்கொள்ள விரும்பும் சகல சிங்களப் பொதுமக்களும் இவ்வித கலாசார நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுவது குறித்து நிச்சயம் மகிழ்ச்சியடைவர் என்பது எனது கருத்தாகும்.

தற்போதைய அரசு கடைப்பிடித்து வரும் பொருளாதார, அரசியல் மற்றும் கலாசாரக் கொள்கைகள் குறித்து எமக்கு உடன்பாடு இல்லாதபோதிலும், கடந்த இரு வருடங்கள் வரையான காலப் பகுதியில் யுத்தம் இடம்பெறாது இருக்கிறது. இது குறித்து நாம் மகிழ்ச்சியடையாதிருப்போமானால் நாங்கள் இரத்ததாகம் கொண்டவர்களாக இருக்கிறோம் என்றே அதனைக் கருதமுடியும்.

காலையில் பாடசாலைக்குச் சென்ற தமது பிள்ளைகள் மற்றும் தொழில் நிமித்தம் வேலைத் தலங்களுக்குச் சென்ற தமது கணவர், மகன் மற்றும் மகள் ஆகியோர் குண்டு வெடிபுச் சம்பவமெதிலும் சிக்கிக்கொள்ளாது, பாதுகாப்புடன் வீடு திரும்ப வேண்டுமென பயத்துடனும், சந்தேகத்துடனும் காத்திருந்த வேளைகளை மறக்காதிருக்கும் எத்தனையோ தாய்மார்கள் இன்று அமைதியான சூழ்நிலையில் மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்திச் செல்லத்தக்கதாய் அமைந்துள்ளதல்லவா?

தற்காலிக யுத்தநிறுத்தமாக அமைந்துள்ள போதிலும், கடந்த இரண்டு வருடங்கள் வரையான காலப் பகுதியில் நாட்டில் யுத்த சூழல் எதுவுமின்றி வாழக்கூடிய நிலைமை உருவானமைக்கான காரணம், அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் ஒன்றாக அமர்ந்து பேச்சுகளை ஆரம்பித்தமையல்லவா?

**வியெஸ்ரீ**

அரசு பொதுமக்களுக்குச் செய்யும் ஏனைய பாதக நடவடிக்கைகள் பற்றிய எமது அதிருப்தியை ஒரு பக்கம் தள்ளி வைத்துவிட்டு, இந்த யதார்த்த உண்மையை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டுமல்லவா?

இவ்வித பண்பாட்டின் காரணமாகவே, இருபது ஆண்டுகளுக்கு மேலாக இருவேறு துருவங்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்த இவ்விரு இனத்தவர்கள் மத்தியில் நாம் சார்ந்துள்ள இக்கலைத்துறையினூடாக ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் பணியில் எம்மை அர்ப்பணிக்க முன்வந்துள்ளோம்.

அதற்கான சந்தர்ப்பம் வாய்த்துள்ள இவ்வேளையில் போர் தவிர்ப்பு நிலைமையை முடிந்த வரையில் தொடர்ந்து கடைப்பிடிக்கவும், யுத்தத்தை முற்றுமுழுதாக நிறுத்திவிடத்தக்க சூழ்நிலையை உருவாக்கவும், இனங்கள் மத்தியில் புரிந்துணர்வை அதிகரிக்கச் செய்யத்தக்க நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலும் செயற்பட வேண்டியது கலைத்துறை சார்ந்த எமது முக்கிய பொறுப்பாகுமல்லவா?



ஆனால், சில தேசிய பத்திரிகைகள் இனவாத அமைப்புக்களின் கருத்துக்களைத் தேடித்தேடிப் பிரசுரிப்பதன் மூலம் நாட்டில் சமாதானம் உருவாக்கும் நோக்கில் செயற்படும் கலைஞர்களுக்கு எதிராகப் பொதுமக்களைக் கிளர்ந்தெழச் செய்யும் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன.

இதனை சிங்கள தமிழ்க் கலைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் இடம்பெற்ற தரமற்ற சம்பவங்கள் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன. இப்பத்திரிகைகளின் நோக்கத்தின் பிரதிபலிப்பே அந்நிகழ்ச்சியில் இடம்பெற்ற வேண்டத்தகாத சம்பவங்களாகும். இந்நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள் ஜனநாயக ரீதியில் வழங்கிய சந்தர்ப்பத்தை - பாதுகாப்புக் கெடுபிடிகளற்ற சூழ்நிலையை - பயன்படுத்தி நிகழ்ச்சி இடம்பெற்ற மண்டபத்தினுள் உள் நுழைந்த கோஷ்டியினரின் கைகளில சைக்கிள் செயின் மற்றும் கத்தி போன்ற தாக்குதல் ஆயுதங்கள் காணப்பட்டன. அவ்விதம் உள் நுழைந்தவர்கள் கோஷமெழுப்ப ஆரம்பித்ததையடுத்து, மண்டபத்துக்கு வெளியில் கூடியிருந்த 150 பேர் வரையிலான குழப்பக்காரர்களும் அவர்களுடன் இணைந்து தமது பண்பாட்டை மறந்து, நிகழ்ச்சி இடம்பெற்ற மண்டபத்தில் ஏற்றப்பட்டிருந்த கொடியைத் தீயிட்டுக் கொளுத்தியதுடன், மண்டபத்தை நோக்கிக் கல்வீச்சு நடத்தியமையும், தமது எதிர்ப்பை அமைதியான வகையில் வெளிப்படுத்த முயலவில்லை என்பதையும் புகைப்படங்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளமுடிகிறது.

சம்பவங்கள் இவ்விதம் இடம்பெற்றிருக்கையில் சில பத்திரிகைகளைச் சேர்ந்த செய்தியாளர்கள் அவற்றையெல்லாம் குறிப்பிடாது இது ஏற்பாட்டாளர்களின் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் காரணமாக இடம்பெற்ற நிகழ்வுகள் என்ற விதத்தில் செய்திகளை வழங்கியிருப்பது பத்திரிகைத் தர்மமாகுமா?

அன்று எந்தவொரு தமிழ்க் கலைஞருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் ஏற்பாட்டாளர்களால் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருக்காவிட்டால், அதன் விளைவு பாரதூரமானதாக அமைந்திருக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் கிடையாது.

இந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் பங்கேற்காத போதிலும், அமைதியான சமுதாய சூழலை உருவாக்குவதன் பெறுமதியை உணர்ந்து கொண்டுள்ள ஏனைய பல கலைஞர்கள், புத்திஜீவிகள் மற்றும் பௌத்த துறவிகள் போன்றோர் அந்நிகழ்வில் இடம்பெற்ற அசம்பாவிதச் சம்பவங்கள் குறித்துத் தமது அதிருப்தியையும் கண்டனத்தையும் வெளியிட்டிருந்தனர். ஆனால், அவற்றைக் கணக்கில் எடுக்காது, அதிகாரத்தில் இருக்கும் தரப்புக்கு ஆதரவு தெரிவிப்பதன் மூலம் பதவியையும் பல சலுகைகளையும் பெறவிழையும் மனப்பாங்கு கொண்ட பத்திரிகையாளர் நூவன் ஹன்கந்த இந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சி தொடர்பாக வெளியிட்ட செய்திகள் மூலம் தனது பொறுப்பற்ற தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

அதேபோன்று இந்நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு இவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து நிதியுதவி வழங்கப்படுவதாக நூவன் ஹன்கந்த வெளியிட்ட செய்தியில் எவ்வளவு தூரம் உண்மைத் தன்மை உள்ளதென்பதை மீண்டுமொரு தடவை அவர் சிந்தித்துப் பார்த்தல் அவசியமாகும்.

இதனிடையே நாட்டில் வாழும் சமாதானத்தை விரும்பும் நிராயுதபாணிகளான பிரஜைகளின் வாழ்க்கை, அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவதை நினைவுறுத்த விரும்புகின்றேன். நாட்டின் கலைஞர்களுக்கு கடுங்கோட்பாட்டு அமைப்புக்களால் வெளிப்படையாகவே கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு வருகின்றன. இந்தவகையில் அவர்கள் கொலை செய்யப்படவேண்டியவர்களின் பட்டியலொன்றையும் தயாரித்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

1988-89 காலப் பகுதியில் நிலவிய 'பயங்கரயுகம்' மீண்டும் உருவாவதற்கு உறுதுணை புரியாதிருக்குமாறு பொறுப்புமிக்க பத்திரிகைத் துறை சார்ந்த கலைஞர்களை வேண்டிக் கொள்வோம். நீங்கள் பேனாவைக் கையிலெடுக்கும் சகல சந்தர்ப்பங்களும், உங்களது பொறுப்பற்ற தன்மையால் இரத்தம் சிந்தும் நிலைமையை உருவாக்க வழிவகுக்கும் நிலையை ஏற்படுத்தும் என்பதனை மனதில்கொள்ள வேண்டியது அவசியமாகும். ✪

பொதுசன நூலகம்

# உயிர்கொல்லி எய்ட்ஸை உலகிலிருந்து விரட்டுவோம்



யாழ். மாவட்டத்தில் எய்ட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அகதிகள் புனர்வாழ்வு நிறுவன விழிப்புணர்வுக் குழுவினால் இந்தக் கட்டுரை வெளியிடப்படுகின்றது

இந்தக் கட்டுரையை அடிப்படையாக வைத்து எய்ட்ஸ் தொடர்பான பொது அறிவுப் போட்டி ஒன்றையும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தவுள்ளது. போட்டிக்கான வினாக்கள் நாளைய உதயனில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் வெளியிடப்படும். வினாக்களுக்கு விடையளித்து போட்டியில் வெல்வோருக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மனித இனத்தின் ஆரோக்கியமான வாழ்வைச் சிதறடிக்கும் எய்ட்ஸ் எனும் மாற்றமுடியாத நோய் பற்றிய விழிப்புணர்வை யாழ். மாவட்டத்தில் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் கடந்த ஒருவருட காலமாக மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது.

இதில் இதுவரை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 35ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்குபற்றி விழிப்புணர்வைப் பெற்றுள்ளனர். யாழ். மாவட்டத்தில் எய்ட்ஸ் நோயாளிகள் பலர் இனங் காணப்பட்டுள்ளமையும், இனிவருங் காலங்களில் இதன் பரவுதல் வேகம் அதிகரிக்கும் என்பதையும் சுகாதாரத் திணைக்களத்தின் தகவல்கள் அறிவுறுத்துகின்றன.

எனவே, யாழ். மாவட்டம் மட்டுமன்றி ஒட்டுமொத்த மக்களுமே எய்ட்ஸ நோய் பற்றிய சரியான அறிவைப் பெறுவதன் மூலமே, தமது நாளாந்த வாழ்க்கையை பாதுகாப்பானதாக்கி இதன் தாக்கத்திலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளலாம் என்பது உண்மையே!

கொடிய அரக்கன் எய்ட்ஸ் எனும் நோயிலிருந்து எம்மையும் எமது சமுதாயத்தையும் காப்பாற்றி ஆரோக்கியமான வாழ்வைக் கட்டியெழுப்புவோம்!

இன்றைக்கு உலகில் 42 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களுக்குத்தொற்றி அவர்களை மரணத்தின் வாயிலை நோக்கி அழைத்துச்செல்லும் எய்ட்ஸ எனும் கொடிய உயிர்கொல்லி நோய 1981ஆம் ஆண்டு அமெரிக்க விமானச் சிப்பந்தி ஒருவரில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.

தென்னாபிரிக்காவிலிருந்தே உற்பத்தியாகி இருக்க வேண்டும் எனக் கருதப்படும் எய்ட்ஸ்நோய் இன்று உலகளாவிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதனால் டிசெம்பர் 1, உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு நாளாக நினைவு கூரப்படுகின்றது.

### எய்ட்ஸ்"ம் அதன் காரணியும்

எய்ட்ஸ் எனப்படுவது "மனிதனின



நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைவதால் பெறப்படும் பல்வேறு நோய்களின் கூட்டு" எனக் குறிப்பிடலாம். இதன் ஆங்கிலப்பதம்

A - Acquired
I - Immuno
D - Deficiency
S - Syndrome

எய்ட்ஸ் நோய்க்குரிய காரணி நுண்ணங்கிகளில் ஒன்றான ஒரு வகை வைரசு ஆகும். இதனை Hiv என அழைப்பர். Hiv என்பது 'மனித நிர்ப்பீடன சக்தியை குறைக்கும் வைரசு' எனப்படும்.

H - Human
I - Immune deficiency
V - Virus

Hiv ஆனது மனிதனது குருதித் தொகுதியை அடைந்து அங்கு நிணநீர்க் குழியங்களிலுள்ள '$T_4$' வகையான கலங்களை அழிப்பதோடு, தானும் பெருக்கமடைகின்றது.

Hiv தொற்று ஏற்பட்ட நபரை வெளிப் பார்வையில் கண்டுபிடித்துவிடமுடியாது. Hiv தொற்று ஏற்பட்டு 8-12 வருடங்களின் பின்பே எய்ட்ஸ் நோய்க்கான அறிகுறிகள் வெளித் தெரியத் தொடங்கும். அதுவரையில் அவர் காவியாக (Hiv Positive) இருப்பார்.

Hiv தொற்றுக்குள்ளானவருடைய நோய் எதிர்ப்புசக்தி மிக இழிவான நிலையை அடையும் போது (80-85% ஆல் குறையும்போது) நோய் நிலைமை உண்டாகும். அப்போது பின் வரும் அறிகுறிகளில் கணிசமானவை தென்படும்.

- ✪ காரணமின்றிய கடும் சோர்வு.
- ✪ சுரப்பிகள் வீங்குதல் (கழுத்து, அக்குள் பகுதிகள்).
- ✪ காரணமின்றிய தொடர் வயிற்றோட்டம் (ஒரு கிழமைக்கு மேலாக நீடிக்கும்).
- ✪ தொடர்ச்சியான காய்ச்சலும், இரவில் கடுமையாக வியர்த்தலும்.
- ✪ சடுதியான உடல் நிறை குறைவு(மாதாந்தம்10%).
- ✪ பசியின்மை
- ✪ தலைமுடி அசாதாரணமாக உதிர்தல்.
- ✪ தோல் வியாதிகள்
- ✪ வாயைச் சூழ புண்கள், இளஞ சிவப்பு பொக்குளங்கள்.

### எய்ட்ஸ் தொற்றுதல்

Hiv எனும் கிருமி எமது உடலின் குருதித் தொகுதியை சென்றடைந்து பெருக்கத்திற்கு உள்ளாகின்றது. இவ்வாறு ஒரு மனிதனுக்கு Hiv தொற்றும் வழிமுறைகளை பிரதானமாக நான்காக வகைப்படுத்தலாம்.

I) Hiv தொற்றுள்ளவருடான பாதுகாப்பற்ற பாலியல் உறவுகள்.

II) Hiv பரிசோதிக்கப்படாத குருதி மாற்றீடு.

III) தொற்று நீக்கப்படாத மருத்துவ உபகரணப் பாவனை.

IV) Hiv தொற்றுள்ள தாயிடமிருந்து குழந்தைக்கு.

இப்பிரதான வழிகளின் மூலம் Hiv கிருமிகள் இன்னொருவரை அடைந்து மற்றவருக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

### எய்ட்ஸிலிருந்து பாதுகாப்பு

மேற்கூறிய நான்கு வழிகளையும் தடைசெய்வதன் மூலம் Hiv கிருமி தொற்றுவதை தவிர்த்துக்கொள்ளலாம்.

அதாவது -

I) ஒருவனுக்கு ஒருத்தி எனும் கட்டுப்பாட்டுடன் சீரான குடும்ப உறவை பேணுதல், தவறும் பட்சத்தில் ஆண், பெண் உறைகளை (Condom) உரிய முறையில் அணிந்து பாதுகாப்பான பாலுறவில் ஈடுபடல்.

II) எமக்கோ எமது உறவினருக்கோ குருதி ஏற்றப்படும் சந்தர்ப்பத்தில் ஏற்றப்படும் குருதி Hivக்காக பரிசோதிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்தல்.

III) மருந்தேற்றுவதற்கு புதிய ஊசிகளை அல்லது உரிய முறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட ஊசிகளைப் பயன்படுத்த அனுமதித்தல்.

IV) தொற்றுள்ள தாய் கர்ப்பந்தரிக்காதிருத்தல்.

இந்த வழிமுறைகளைக் கைக்கொள்ளல் வேண்டும்.

### சாதாரணவழிகளில் தொற்றுவதில்லை

Hiv ஆனது மேற்கூறிய தொற்றும் வழிகளைத்தவிர சாதாரணமான தொடர்புகளால் தொற்றுவதில்லை.

- ✪ சாதாரணமாக முத்தமிடுதல்.
- ✪ கை குலுக்குதல், தொடுதல், கட்டியணைத்தல்.
- ✪ சாப்பிடும், குடிக்கும் பாத்திரங்களைப் பாவித்தல்.
- ✪ நுளம்பு மற்றும் பூச்சிக் கடிகளினால்.
- ✪ நீச்சல் தடாகம், குளம், ஆறு, கடல் போன்றவற்றில் குளித்தல்.
- ✪ மலசல கூடங்களைப் பாவித்தல்.
- ✪ இருமுதல், தும்முதல் மூலம்.
- ✪ ஆடைகளை மாற்றிப்பாவித்தல்.
- ✪ ஒரே அலுவலகத்தில் பணியாற்றுதல்.
- ✪ நண்பர்களாக இருத்தல்.

போன்றவவை தொற்றாத வழிமுறைகளாகும்.

### Hiv தொற்றை உறுதிசெய்தல்

Hiv தொற்றுடையவர் தாமாக முன்வந்து Hivக்கான தொற்று உண்டா எனப் பரிசோதிக்க தனது குருதியை வைத்தியசாலையில் வழங்குதல் வேண்டும்.

இதற்காக போதனாவைத்தியசாலைகளில் உள்ள பாலியல் நோய்த்

(10 பக்கம் பார்க்க)

# குழந்தைகளுக்குத் தாய்ப்பாலே மகத்துவமான முதலுணவு

நமக்குப் பொருந்துகிறதோ இல்லையோ? மேலைநாட்டு நாகரிகத்தைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் பெண்கள் நம்மில் இன்று மலிந்து விட்டனர். உடல் மினுமினுப்புக் குறைந்துவிடும் - கவர்ச்சி போய்விடும் - அழகு கெட்டுவிடும் என்றெல்லாம் கூறித் தம் மகவுக்கு பாலூட்டும் மகத்தான கடமையைக் கூடப் பல தாய்மார்கள் புறக்கணித்து வருகின்றனர். தாய்ப்பால் ஊட்டுவதன் மகத்துவத்தைத் தாய்மார்கள் தெளிவாக உணர்ந்தாக வேண்டும். அதுவே, எதிர்காலத்தின் கண்களாக விளங்கப் போகும் மழலையர்க்கு நலம் பயக்கும்.

தாய்ப்பாலில் நீர், பால்புரதங்கள், இலக்டோஸ் வெல்லம், கனியுப்புகள்,




விற்றமின்கள் மற்றும் பல்வேறு நோய்களை எதிர்ப்பதற்கான வஸ்துகள் என்பன அடங்கியுள்ளன.

### தாய்ப்பாலும் மாப்பாலும்

தாய்ப்பாலில் குழந்தையின் உடல் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் ஏற்ற அளவுகளில் சத்துப்பொருள்கள அடங்கியுள்ளன. இதன் காரணமாகத் தாய்ப்பால் குழந்தைக்கு இயல்பாகவே ஒத்துவருகிறது. பால்மாவை சரியான அளவுப் பரிமாணங்களில் கரைக்கத் தவறினால் இத்தகைய செறிவுப் பொருத்தம் அமைந்து வராது.

பால்மாவை கரைக்கும்போது கரைக்க உபயோகிக்கப்படும் பாத்திரம், உபகரணங்கள், நீர் என்பன மிகத் தூய்மையாக - நோய்க்கிருமிகள் அற்றதாக - இருத்தல் வேண்டும். வசதி குறைந்த நிலையிலுள்ள பெரும்பாலான தாய்மார்களால் இத்தகைய தேவைகளைப் பூர்த்திசெய்ய முடிவதில்லை. விளைவு - தூய்மையாகத் தயாரிக்கப்படாத மாப்பாலை அருந்தும் குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் முதலான பல நோய்கள் ஏற்படுகின்றன. ஆனால், தாய்ப்பாலோ தாயின் மார்பகத்தில் இருந்து நேரடியாகக் குழந்தையின் வாயினுள் செல்வதால், இடையில் எவ்வித மாசும் கலக்க வாய்ப்பில்லை.

மேலும், தாய்ப்பாலானது குழந்தையின் உடல் வெப்பநிலைக்கு உகந்த வெப்பத்திற் சுரக்கப்படுகின்றது. ஆனால், மாப்பாலைக் குழந்தைக்கு ஏற்ற சூட்டில் தயாரித்துப் புகட்டுவதில் சிரமம் நிறைய உண்டு.

தாய்ப்பாலில் நோய்க்கிருமிகளை எதிர்த்துப் போராடும் வஸ்துக்கள் உள்ளன. ஆகவே, தாய்ப்பால் அருந்தும் குழந்தைகள் நோய்க் கிருமிகளுக்கான எதிர்ப்புச் சக்தியைப் பெறுகின்றன. இதனால், அக் குழந்தைகளுககுத் தொற்றுநோய்கள் மிகமிக அரிதாகவே ஏற்படுகின்றன. அதேவேளை, மாப்பாலைக் குடித்துவரும் குழந்தைகளை தொற்று நோய்கள் தொடர்ந்தும் கூடுதலாகவும் தாக்குகின்றன.

### தாய்ப்பால் ஊட்டும் முறை

தாய் சௌகரியமாக - வசதியாக அமர்ந்திருக்க வேண்டும். குழந்தையும் அவ்வாறே சிரமமின்றி நல்ல நிலையில் அமரச் செய்யப்பட வேண்டும். தாய் அமர்ந்திருக்கும் நிலை சரியாக இருந்தால்தான், பால் மார்பகத்தில் இருந்து தங்குதடையின்றி ஒழுங்காகச் சுரக்கும்.

உணர்வு பூர்வமாகக் குழந்தையை அணைத்து - நேரமெடுத்துக் குழந்தைக்குப் பாலூட்ட வேண்டும். பாலூட்டும் போது, பால் சுரந்து குழந்தையின் மூக்கினுள் சென்றுவிடாதபடி அவதானமாக இருக்கவேண்டும்.

ஒருபக்கத்தில் பால் குடித்து, முழுமையாக முடிந்த பின்பே மறுபக்கத்தில் ஊட்ட வேண்டும். ஓராண்டுக்காயினும் தாய்மார் தம் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுத்தல் வேண்டும். அதன்பின்னர் குழந்தைக்கு ஏற்ற உப உணவுகளை அளிக்கலாம். பாலூட்டும் தாய்மார் ஊட்டச்சத்துள்ள உணவு வகைகளைத் தாம் உண்ணுவது மிகவும் அவசியம்.

### நன்மைகள்

தாய் - சேய் உறவின் ஆத்மார்த்த உணர்வுகளும், மன எழுச்சிகளும் ஓர் அன்னை தன் குழந்தைக்குத் தாய்ப்பாலூட்டும் போதுதான் பூரணத்துவம் அடைகின்றன. அதுமாத்திரமன்றி, தாய் - சேய் இருவருமே உணர்வு ரீதியான ஒரு திருப்தியையும் (Emotional Satisfaction), புரிந்துணர்வையும் (Mutual Understanding) இதன்மூலம் அனுபவிக்கின்றனர் - அடைகின்றனர். தாய்ப்பால் ஊட்டு



வதனால் அம்மாவிற்கும் பிள்ளைக்கும் இடையே ஏற்படும் இந்த உளவியற் பிணைப்பானது (Psychological Bonding) பிற்காலத்தில் அன்பு - பாசம் - பண்புமிக்க தலைமுறையைத் தோற்றுவிக்கப் பெரிதும் துணை புரிகிறது.

ஒரு தாய் தன் குழந்தைக்கு ஒழுங்காகத் தாய்ப்பாலூட்டி வரும்போது, அக்காலகட்டத்தில் அவ்வன்னை மீண்டும் கருத்தரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் - சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவாகவே உள்ளன. எனவே, தாய்ப்பாலூட்டல் இயற்கை முறையான குடும்பக் கட்டுப்பாட்டையும் ஓரளவுக்கு நல்குகிறது.

தம் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டாத தாய்மார்களுக்கே பிற்காலத்தில் மார்பகப் புற்றுநோய் (Breast Cancer) ஏற்படுகிறது என்று மருத்துவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகவே, தாய்ப்பாலூட்டல் உடல் ஆரோக்கியத்திற்கும் துணை புரிகின்றது என்று தெரிகிறது.

### மகத்துவம்

தாய்ப்பால் மிகவும் தூய்மையானது - குழந்தைக்குப் பசி எடுத்தவுடன் உடனடியாக வழங்கக்கூடியது - நோய் எதிர்ப்பு ஆற்றல் உடையது - குழந்தையின் வயிற்றில் எளிதாக சமிபாடடையக் கூடியது - சிக்கனமானது - தயாரிப்புச் செலவும் நேர விரயமும் அற்றது - எளிமையானது - சத்துமிக்கது. இத்தனை சிறப்பு மிக்கதாகத் தாய்ப்பால் விளங்குவதனால்தான் மகப்பேற்றியல் மருத்துவர்கள் 'தரணியில் சிறந்தது தாய்ப்பாலே' என்று வலியுறுத்தி வருகின்றனர்.

எஸ்.ரஞ்சன் செல்வகுமார்
வவுனியா

நாளைய உலகை ஆக்கும் இன்றைய சிறுவர்களின் உடலையும், உளத்தையும் ஆரோக்கியமாகத் திகழச்செய்வது அமுதூட்டும் அன்னையர் கையில் உள்ள அரும்பெரும் பணியாகும். எனவே, ஒவ்வொரு தாயும் தன் குழந்தைக்குத் தன்னால தாய்ப்பால் புகட்ட முடியும் என்ற தன்னம்பிக்கையையும், ஆர்வத்தையும் தன் உள்ளத்தில் வளர்த்திட வேண்டியது அவசியமாகும். ★

உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு

யுனிசெவ் அனுசரணையுடன்

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்**

முன்னெடுக்கும்

# மாபெரும் பரிசுப் போட்டிகள்

## சுவரொட்டி ஓவியப் போட்டி

தலைப்புக்கள்: ☞ எய்ட்ஸைத் தடுப்போம்.

☞ எய்ட்ஸினால் அழியும் மானிடம்

☞ எய்ட்ஸும் எதிர்காலமும்

*இப்போட்டிகள் யாழ். மாவட்டத்தில் 3 இடங்களில் நடைபெறும்.*

யாழ்ப்பாணம் -

☆ வேம்படி மகளிர் கல்லூரி (வலிகாமம் உட்பட)

சாவகச்சேரி -

☆ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

நெல்லியடி -

☆ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

காலம்: **23.11.2003**

நேரம்: **10.00 - 11.00** மணிவரை

### விதிமுறைகள்:

☆ யாழ். மாவட்டத்திலுள்ள 14 - 25 வயது வரையுள்ள எவரும் பங்குபற்றலாம்.

☆ போட்டியாளர்கள் தங்கள் பெயர், வயது, முகவரி, பால், தொழில், பி.செ.பிரிவு, கல்வி வலயப் பிரிவு போன்ற விவரங்கள் அடங்கிய படிவத்தினை **20-11-2003 வியாழக்கிழமைக்கு** முன்பாக எமக்குக் கிடைக்குமாறு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கவும்.

☆ பாடசாலை மாணவராயின் மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களுடன் தங்கள் பாடசாலையின் பெயர், கல்வி கற்கும் தரம் என்பனவற்றையும் குறிப்பிடவேண்டும்.

☆ விவரங்களை எமக்கு அனுப்பியவர்கள் மட்டும் தரப்பட்டுள்ள இடங்களில் குறிப்பிட்ட தினத்தில் தங்களுக்கு வசதியான பரீட்சை மையங்களில் பங்குபற்றவும்.

☆ கடித உறையின் இடது மேல் பக்கத்தில் "எய்ட்ஸ் தினம்" எனக் குறிப்பிடவும்.

### கட்டுரையூடான வினாவிடைப் போட்டி

இன்று (13.11.2003) வியாழக்கிழமை வெளியாகியிருக்கும் "உயிர்கொல்லி எய்ட்ஸை உலகிலிருந்து விரட்டுவோம்" எனும் கட்டுரையில் இருந்து 14.11.2003 வெள்ளிக்கிழமை (நாளைய பத்திரிகையில்) 15 வினாக்கள் வெளிவிடப்படும். அவற்றிற்கான விடைகளை இக்கட்டுரையிலிருந்து தெரிவு செய்து எழுதி விடைத்தாளை 20.11.2003 வியாழக்கிழமைக்கு முன்பதாக எமது தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

☆ இப்போட்டியில் யாழ். மாவட்டத்திலுள்ள 14வயதிலிருந்து 25 வயதுக்குட்பட்ட அனைவரும் பங்குகொள்ளலாம்.

☆ போட்டியாளர்கள் தங்கள் பெயர், வயது, முகவரி, பால், தொழில், பிரதேச செயலக பிரிவு, கல்வி வலயப் பிரிவு போன்ற விவரங்களை தங்கள் விடைத்தாளுடன் இணைத்து அனுப்பவேண்டும்.

☆ பாடசாலை மாணவர்களாயின் மேற்கூறப்பட்ட விடயங்களுடன் பாடசாலையின் பெயர், தரம் என்பவற்றை இணைக்க வேண்டும்.

☆ கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "எய்ட்ஸ் தினம்" எனக் குறிப்பிடவும்.

உங்கள் விடைகளோ/ஓவியப் போட்டிக்கான விவரங்களோ வந்து சேரவேண்டிய முகவரி:

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்**
**106, 4ஆம் குறுக்குத் தெரு,**
**யாழ்ப்பாணம்.**

(26-15-16) (C31249)

குறிப்பு:-
**T.R.R.O, Unicef** நிறுவனத்தில் நிரந்தரமாகவோ/தற்காலிகமாகவோ பணிபுரிபவர்கள் இப்போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

## மணி விழா

வலி.தெற்கு,நவ.13

சமூக சேவையாளரும் இணுவில வாசியுமான து.சிவராசாவின் மணி விழா இன்று வியாழக்கிழமை மாலை நான்கு மணிக்கு இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் விழாக்குழுத் தலைவர் க.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக நடனத் துறைத் தலைவர் கலாநிதி சபா.ஜெயராசா, உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் உட்பட பல பிரமுகர்கள் பாராட்டுரை நிகழ்த்த உள்ளனர். (ம-152)

## புகைத்தலை கட்டுப்படுத்த புதிய சட்டம்

கொழும்பு, நவ.13

புகைத்தலைக் கட்டுப்படுத்த புதிய சட்டம் உருவாக்கப்படும். இது தொடர்பாக உலக சுகாதார நிறுவனம் உதவி வழங்கும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் சுகாதார சேவைகள் அமைச்சர் பி.தயாரத்ன.

மகரகமவில் புற்றுநோய் வைத்தியசாலையின் அமைப்பு வேலைகளுக்கான அடிக்கல் நடும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு புற்றுநோயாளர்களுக்கு வருடாந்தம் 3 கோடி ரூபாவைச் செலவு செய்து வருகிறது. இந்திய அரசின் உதவியுடன் கொழும்பில் மற்றுமொரு புற்றுநோய் வைத்தியசாலை கட்டப்படவுள்ளது.

அத்துடன், காலியில் கட்டப்படும் புற்றுநோய் வைத்தியசாலை இன்னும் சில மாதங்களில் திறந்து வைகைகப்படவுள்ளது. வடக்கில் குடத்தனை வைத்தியசாலை யுத்தத்தால் அழிக்கப்பட்டது. அதனையும் வெகுவிரைவில் புனரமைத்து திறந்து வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது-என்றார் அமைச்சர். (ஒ-5)

## சேதமடைந்த மின் கம்பங்களால் அபாய நிலை

கரவெட்டி,நவ.13

வடமராட்சியில் சில பகுதிகளில் மின்சார விநியோகத்திற்காக முன்னா நடப்பட்ட மரக் கம்பங்கள் சேதமுற்று சரிந்து விழும் நிலையில் உள்ளன. இந்த மின் கம்பங்களுக்கு அருகே தற்போது புதிய கம்பங்கள் நடப்பட்டு மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், சேதமுற்ற மரக் கம்பங்கள் சரிந்து புதிய மின் இணைப்புகள் மீது விழும் அபாயம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொலிகண்டி மற்றும் வல்வெட்டித்துறைக்கு இடைப்பட்ட பகுதிகளில் அதிக எண்ணிக்கையான பழைய மின்கம்பங்கள் சேதமுற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-70)

## மேலதிக நேரம் நூலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

கொக்குவில் பொதுநூலகம் வழக்கமான நேரத்தை விட மேலதிகமாக கூடுதல் நேரம் திறக்கப்படுகிறது. தற்போது இந்த நூலகம் இரவு 8.00 மணிவரை திறக்கப்படுகிறது. ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதியே நல்லூர் பிரதேசசபை இதற்கான ஏற்பாட்டினைச் செய்துள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவடையும் வரையிலும் இரவு 8 மணிவரை நூலகம் திறக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.13

ரிஷி காளான் சம்பந்தமான முக்கிய கருத்தரங்கொன்று இன்று பிற்பகல் 4.30 மணிக்கு சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் அதிபர் த.கற்தணசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

ரிஷி காளான் நிறுவன சுன்னாகம பிரதேச களஞ்சியப் பொறுப்பாளர் சபா. புஷ்பநாதனின் ஏற்பாட்டில் இடம்பெறும் இக்கருத்தரங்கில் ரிஷி காளான உற்பத்தி எவ்வாறு நோய்களைக் குணமாக்கும் என்பது பற்றி டி.எக்ஸ்.என். நிறுவன கண்டோமா வைத்திய நிபுணத்துவ ஆலோசகர் பாக்டர் உமாபதி சிற்சபேசன் கருத்துரைகளையும், வைத்திய ஆலோசனைகளையும் வழங்கவுள்ளார். (ஜ-5)


## வாடகை வீடு தேவை

நெல்லியடி நகர் பருத்தித்துறை வீதியில் நகருக்கு அண்மித்த இடத்தில் மூன்று அல்லது நான்கு அறை கொண்ட வசதியான வீடு ஒன்று அலுவலக உபயோகத்திற்காக உடன் தேவைப்படுகின்றது.


கடிதம் மூலமாகவும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: க.துரைரத்தினம்
கந்தையா வீதி, சாவகச்சேரி.
தொலைபேசி: 0777 941119

(24534) (21-15-13)


## இதயச் சுமைகளுடன் ஈராண்டு அஞ்சலி

தோற்றம் 1935 - 12 - 27



மறைவு 2001 - 11 - 13

அமரர்

### இராமலிங்கம் செல்லத்துரை

*ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ அன்பு முகம் கண்டு*
*ஈரவிழி காயாமல் இதயச் சுமையுடனே*
*ஊமைகளாய் உழலுகின்றோம் உமை நினைந்து உருகுகிறோம்*
*சஞ்சலத்தால் எமது நெஞ்சம் தடுமாறித் துடிக்குதைய்யா!*
*உம் பிரிவால் எம் உள்ளம் உடைந்து நொறுங்கிப் போனதைய்யா!*
*என் செய்வோம் என் செய்வோம் என்று மனம் தேறி.*

கண்ணன் கழலடியில் களித்து அமைதிபெறப் பிரார்த்திக்கும்:

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரன்.**

(34-15-13-21)

நிரந்தர முகவரி:
*மல்லாகம், யாழ்ப்பாணம்.* (24616)

தற்காலிக முகவரி:
*கனகபுரம், கிளிநொச்சி.*

## 6ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### செல்வன் செல்லையா கிரிதரன்

(கிரி, மயூரன்)

| உதயம் பலாலியில் | அஸ்தமனம் ஜேர்மனியில் |
| --- | --- |
| 03-09-1969 | 19-05-2003 |

*துணிவே துணையாய் பாரெங்கும்*
*பறந்து திரிந்தவனே!*
*உன்னை சிறையில் கோழை வெள்ளையன்*
*வஞ்சனையால் கொன்றொழித்தனரே!*

உன் பிரிவால் என்றென்றும் வாடும்:

**தந்தை, சகோதரங்கள்.**

(34-21-13-15)

தற்காலிக முகவரி:
S.S.செல்லையா,
*கரம்பொன் மேற்கு,*
*ஊர்காவற்றுறை.* (24413)

நிரந்தர முகவரி:
S.S.செல்லையா,
"ஸ்ரீ பவனம்",
*பலாலி மத்தி, பலாலி.*

## உடதலவின்ன படுகொலைகள் வழக்கு:

# சந்தேகநபரை அடையாளம் காட்டுவதற்கு பயமாக இருக்கிறது என்று சாட்சி கூறினார்

### தெல்தெனிய நீதிமன்ற நீதிவான் சாட்சியம்

அடையாள அணிவகுப்பின்போது அடையாளம் காட்டவந்த சாட்சியான தௌபீக் முகமட் சிபான், சந்தேக நபரை அடையாளம் காட்டுவதற்குத் தனக்குப் பயமாக இருக்கிறது என்று கூறினார்.

உடதலவின்ன படுகொலைகள் விசாரணை கடந்த திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றில் நடைபெற்றபோது சாட்சியமளித்த தெல்தெனிய நீதிமன்ற நீதிவான் திருமதி இனோஜா பிரீதி ரணசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பயப்பட வேண்டாம், தகுந்த பொலீஸ் பாதுகாப்பு உமக்கு இருக்கிறது" எனக் கூறியபின்பே சந்தேக நபரான ரஞ்சித் விஜயரட்ணவை சாட்சி தொட்டு அடையாளம் காட்டினார் என்று நீதிவான் மேலும் தெரிவித்தார்.

சாட்சியை பதில் சொலிசிட்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ குறுக்கு விசாரணை செய்தார்.

இனோஜா பிரீதி ரணசிங்க தமது சாட்சியத்தின் போது தெரிவித்ததாவது:-

சந்தேக நபர்கள் ஆறுபேருக்கும் ஒரு அடையாள அணிவகுப்பு 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி நடைபெற்றது. தெல்தெனிய நீதிமன்றத்தின் விசேட அறையொன்றில் இந்த அடையாள அணி வகுப்பு நடைபெற்றது. நீதிமன்ற அதிகாரிகளைத் தவிர ஏனையோர் அனைவரையும் அந்த அறைக்கு வெளியே அனுப்பிவிட்டு அணிவகுப்பு ஆரம்பமாகியது.

முதலாம், இரண்டாம் சந்தேக நபர்களான ரஞ்சித் விஜயரட்ண, சுனில் சந்திர டி சில்வா ஆகியோரை முதலாவது சாட்சியான அப்துல் அசீஸ் முகம்மட் பிர்தவுஸ் அடையாளங்காட்டினார். முதலாவது சந்தேக நபர் அடையாள அணிவகுப்பில் 11ஆவது இடத்தில் காணப்பட்டார். சாட்சி அவரைத் தொட்டு அடையாளம் காட்டினார்.

சந்தேக நபர்கள் பொதுமக்கள் காணாதவாறு மூடப்பட்ட வாகனத்தில்தான் நீதிமன்றத்திற்குக் கொணடு வரப்பட்டார்கள். அடையாள அணிவகுப்பு நடைபெற்ற அறையின் யன்னல்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

மூன்றாவது சாட்சியான அப்துல் மாலிக் 11 ஆவது இடத்தில் இருந்த சந்தேக நபரை அடையாளம் காட்டி "இவர்தான் ரிஸ்பான் என்பவருக்கு வெடிவைத்தவர்" என்று கூறினார்.

நீதிவான் மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

அடையாள அணிவகுப்புக்கு பல்லேகல இராணுவ முகாமிலிருந்து 60 இராணுவச் சிப்பாய்கள் கொண்டு வரப்பட்டனர் என்றும் நீதிவான் தமது சாட்சியத்தின்போது தெரிவித்தார்.

# கைக்குண்டுத் தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் பலி!

கொழும்பு,நவ.13

குருநாகல், வல்லவை பொலீஸ் பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார்; இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரில் ஒருவர் கைக்குண்டு வீச்சை மேற்கொண்டவர் என்றும் - மற்றைய நபர் பொலீஸ உத்தியோகத்தர் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களைக் கைதுசெய்வதற்காகப் பொலீஸார் சென்றவேளையிலேயே இந்தக் கைக்குண்டு வீச்சு இடம்பெற்றதாக வட மேல் மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபர் அசோக ரட்ணவீர தெரிவித்தார்.

இந்தக் கைக்குண்டு வீச்சு இடம்பெற்ற இடத்திலேயே பொலீஸ் கான்ஸடபிள் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

# மணல் தட்டுப்பாட்டால் பாடசாலை கட்டட வேலைகள் பல பாதிப்பு!

### ஒதுக்கப்பட்ட நிதி திரும்பும் அபாயம்

இந்த ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து பாடசாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கான கட்டட வேலைகளை மணல் தட்டுப்பாட்டினால் பூர்த்திசெய்ய முடியாமல் இருப்பதாக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா தெரிவித்தார். இதனால் இந்த வருடத்துக்கென ஒதுககப்பட்ட நிதி திரும்பிவிடும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

சங்கானைக் கோட்டத்திலுள்ள பல பாடசாலைகளுக்கு இந்த ஆண்டுககான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களினால் புதிய கட்டடங்களை அமைப்பதற்கெனவும் புனரமைப்பு வேலைகளுக்கெனவும் பல லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு முடிவடைவதற்குள் இந்த வேலைகள் முடிவடைந்தால் மட்டுமே இந்த நிதியைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

எனினும் குடாநாட்டில் நிலவிய மணல் தட்டுப்பாட்டினால் வேலைகள் முடிவடையாமல் இழுத்தடிபட்டு வருகின்றன. இதனால், ஒதுக்கீடு செய்யப்பட்ட பல லட்சம் ரூபா நிதி திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

மணல் தட்டுப்பாட்டை நீக்க சகல தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-175)

## 1998ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் பதிவுசெய்த

# பல்கலை. வெளிவாரி மாணவரை பதிவுகளை புதுப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பிரிவில் 1998 ஆம் ஆண்டுக்கு முன்னர் பதிவுசெய்த மாணவர்கள் தங்களது பதிவுகளைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கலைமாணி, வணிகமாணி மற்றும் நுண்கலைமாணி ஆகியவற்றில் 1998 ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் பதிவுசெய்த மாணவர்களையே பதிவுகளை புதுப்பித்துக் கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகின உதவிப் பதிவாளர் எஸ்.கே.பிரபாகரன் கேட்டுள்ளார்.

நுண்கலைமாணி மாணவர்களுக்கான பரீட்சைகள் விரைவில் நடைபெறவுள்ளதனால் மாணவர்கள் தங்கள் பதிவுகளை உடனடியாகப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும் எனவும் -

தவறுவோர், பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

புதுப்பித்தலுக்கான பதிவுக் கட்டணமாக 750 ரூபா செலுத்தவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# திரிசங்கு சொர்க்கத்தில் இலங்கை வர்த்தகத்துறை

**~ கிருபன் ~**

இலங்கை வர்த்தகர்கள் கடந்த சிலநாள்களாகத் திரிசங்கு சொர்க்கத்தில் சிக்கித் திணறி தவிக்கிறார்கள்.

யுத்தத்தால் சீரழிக்கப்பட்ட வர்த்தகச் செயற்பாடுகள், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் வளர்ச்சி அடைந்தே வந்தன. ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தற்போதைய எதிர்பாராத நடவடிக்கைகளால் தாம் மீண்டும் பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடுமோ? என்ற அச்சத்தில் வர்த்தக சமூகத்தினர் உள்ளனர்.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வரவு - செலவுத்திட்டம் எப்போது தாக்கலாகும், எத்தகைய திட்டங்கள், வரிகள், சலுகைகள் வர்த்தகத்துறைக்கு அறிமுகமாகும் என்று புரியாத நிலையே நிலவுகிறது. இதே வேளை, பங்குச்சந்தை ஏற்கனவே வீழ்ச்சிகாணத் தொடங்கிவிட்டது. மீண்டும் சீராக மகிழ்ச்சிக்குரிய வகையில் வளர்ச்சியடைந்து வந்த சுற்றுலா போன்ற துறைகள் ஜனாதிபதியின் நடவடிக்கைகளால் நிச்சயமற்ற நிலையில் தத்தளிக்கின்றன.

நாடாளுமன்றம் இடைநிறுத்தப்பட்ட விடயமும், 3 அமைச்சுகளை ஜனாதிபதி தன் வசம் எடுத்துக்கொண்டார் என்பதும் வர்த்தக சமூகத்தினருக்கு சற்றுத் தாமதமாகத்தான் - ஆனால் மிக ஆழமாக உறைத்துள்ளது. இதனால்தான் பொதுமக்களும் தனியார் துறையினரும், சர்வதேச சமூகமும் தேசத்தின் நலனைக் கருத்திற்கொண்டு இரண்டு அரசியல் கட்சிகளையும் இணைந்து செயற்பட வற்புறுத்துமாறு வர்த்தக சமூகத்தினர் கோருகின்றனர்.

இது தொடர்பாக, தேசியவர்த்தக சம்மேளனத்தின் தலைவர் அசோக குணசேகர கருத்துக் கூறுகையில் தெரிவித்ததாவது:-



ஜனாதிபதியின் நடவடிக்கை நாட்டின் ஒவ்வொரு முக்கிய தொழில் துறையையும் பாதிக்கும். நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைக் குழப்புவதற்கான தருணம் இதுவல்ல. நிச்சயமற்ற நிலையிலுள்ள இலங்கைப் பொருளாதாரத்தை அடிப்படையாக வைத்து ஜனாதிபதி தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இலங்கையின் பொருளாதார நிலை குறித்து வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் நிச்சயமற்றதான ஒரு நிலையே காணப்படுகின்றது. இந்தப் புதிய குழப்ப நிலையால் இலங்கையில் முதலீடுகளைப் புதிதாகவோ, மேலதிகமாகவோ மேற்கொள்ள முதலீட்டாளர்கள் முன்னரைவிட அதிகமாகச் சிந்திக்கின்றனர் - என்று அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கையால் பங்குச்சந்தை 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது. வளர்ந்து வரும் நாடொன்றில் இந்த வீதத்திலான பங்குச்சந்தை வீழ்ச்சி கவலைக்குரிய ஒன்றாகும். ஜனாதிபதியின் அதிரடிநடவடிக்கையின் முன்னர் சமாதானச் சூழ்நிலை காரணமாக பங்குச்சந்தை ஸ்திரமான ஒரு நிலையில் இருந்து வந்ததை வர்த்தக சமூகத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாட்டில் நிலவும் அரசியல் குழப்பங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றால், நிச்சயமற்ற நிலை தொடர்ந்தால், பங்குச்சந்தை பெரும் வீழ்ச்சியைக் காணும் என்றும் குறிப்பாகச் சுற்றுலாத்துறை கடுமையான பாதிப்பை எதிர்கொள்ளும் என்றும், வர்த்தகத் துறை கவலை கொண்டுள்ளது.

இந்த ஆண்டிற்கான பொருளாதார வளர்ச்சி 6 வீதமாகவும், அடுத்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி 6.5 வீதமாகவும் இருக்கும் என்று மத்திய வங்கி முன்னர் கூறியிருந்தது. ஆனால், தற்போது இது எப்படிச் சாத்தியமாகும் என்ற சந்தேகம் எழ வாய்ப்பேற்பட்டுள்ளது. கடந்த 5 ஆம திகதி புதன்கிழமை நாட்டின் தற்போதைய அரசியல் ஸ்திரமின்மைக்குப் பகிரங்கமான அந்த நாளில் அனைத்துப் பங்குச் சுட்டெண்களும் 12.98 வீதமாக காணப்பட்டன. சமீப காலத்தில் இதுவே மிகக்குறைந்தளவு எனக் கூறப்படுகிறது. பங்குகளை வாங்குவது குறித்து அச்சநிலை நிலவுகிறது.

இந்தநிலை தொடர்ந்தால் பொருளாதாரம் மிக மோசமாக பாதிக்கப்படும் என்று முதலீட்டுச் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். அரசியல் கட்சிகள் குறுகிய இலாப நோக்கங்களை கைவிட்டு செயற்படுவதே நாட்டின் அபிவிருத்திக்கு ஒரே வழியாகும்.

# பொருளாதாரத்தில் வளர்ச்சியென இலங்கை மத்திய வங்கி கூறுகிறது

அரசு மேற்கொண்ட பூர்வாங்கத் திட்டத்தின் பிரகாரம் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வருவதாக இலங்கை மத்திய வங்கி கூறுகிறது.

பெரும் முதலீட்டுப் பொருளாதாரத்தில் காணப்படும் போட்டிகள் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதை எடுத்துக்காட்டுவதாகவும் மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டது.

மத்திய வங்கியின் நாணயக் கொள்கை மதிப்பீட்டில் இத்தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த விடயம் குறித்து மத்திய வங்கி தெரிவித்துள்ளதாவது:-

பணவீக்கம் வீழ்ச்சிகண்டுள்ள நிலையில், விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகள் தொடர்ந்து வளர்ச்சி அடைந்துவருகின்றன.

கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் வருடாந்த சராசரி வளர்ச்சி செப்ரெம்பரில் 3.1 சதவீதமாக இருந்தது. அது கடந்த மாதம் 2.7 சதவீதமாகக் குறைந்தது. பணவிநியோகம் மற்றும் தனியார் துறைகளுக்கு கடன் வழங்கும் நடவடிக்கைகள் வளர்ச்சிகண்டு வருகின்றன.


ஏற்றுமதி இந்த வருடத்தில் ஜனவரிமாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரையிலான காலப்பகுதியில் 11 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளது. அதேநேரம் இறக்குமதி 9 சதவீத வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. ஒக்ரோபர் மாதக் கடைசிப் பகுதியில் ரூபாவின் பெறுமதி ஸ்திரம் அடைந்தது - என்று மத்திய வங்கி தெரிவித்தது. (ஓ-5)



தீபாவளித் தினத்தன்று மக்கள் வங்கிக் கிளைகளில் 10ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையினை ஒரு வருட காலத்துக்கு சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்த வாடிக்கையாளர்களுக்கு அழகிய தீப விளக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளை முகாமையாளர் திருமதி தவமணிதேவி கணேசலிங்கம், வாடிக்கையாளர் ஒருவருக்கு தீபவிளக்கை அன்பளிப்புச் செய்வதை படத்தில் காணலாம். (ஐ-9)

## தொழில் வளம்



# புனித யாத்திரை செல்வதற்கு மக்கள் வங்கி வாய்ப்பளிக்கும்

### பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

தனது வாடிக்கையாளர்களுக்கு, புனித யாத்திரை செல்வதற்கான வாய்ப்பை மக்கள் வங்கி வழங்க உள்ளது.

- இவ்வாறு மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ். சிவபாதவிருதயர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்த ஆண்டுமுதல் மக்கள் வங்கி தனது வாடிக்கையாளர்களுக்குப் பல புதிய சலுகைகளையும், சேவைகளையும் வழங்கவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 60 வயதிற்கு மேற்பட்டவர்களான மூத்த குடி மக்களுக்கு 8 சதவீத வட்டியுடன் கூடிய இரண்டு வருட நிலையான வைப்பு, அவர்களுக்கு 6 வீத வட்டியுடன் கூடிய சேமிப்பு கணக்கு, பயிர் அழிந்த விவசாயிகளுக்கான கடனுதவி, கடன்களுக்கு குறைந்தளவு வட்டி ஆகிய சேவைகளை வழங்கும்.

அத்துடன், இவ்வருட முடிவில் அதாவது எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி மக்கள் வங்கியில் ஒரு லட்சம் ரூபாவை சேமிப்பு கணக்கிலோ அல்லது நிலையான வைப்பிலோ வைத்திருப்பவர்கள் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படுவார்கள். அவ்வாறு தெரிவுசெய்யப்படுபவர்கள் இந்தியாவில் உள்ள புனித ஸ்தலங்களான வேளாங்கண்ணி, புட்டபர்த்தி, திருப்பதி ஆகிய புனித ஸ்தலங்களுக்கு புனித யாத்திரை செல்வதற்கான விமானப் பயணச்சீட்டுக்கள் பரிசாக வழங்கப்படும். இதேசமயம் அவர்கள் அங்கு செல்ல விரும்பாதவிடத்து 50 ஆயிரம் ரூபா ரொக்கத் தொகை வழங்கப்படும் - என்றார் அவர். (ஓ-8)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

*கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட*

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228


யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(சி-31109)

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)


உ

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1970 | 1995 |
| 10 | 11 |
| 24 | 11 |

செல்வன் **தர்மலிங்கம் பாலச்சந்திரன்**

**திதி: 13.11.2003 (சதுர்த்தசி)**

அழியாது உன் நினைவு ஆண்டுகள் எட்டு ஆனபோதும்
மண்ணுக்குள் சென்றாலும் கண்ணுக்குள் வாழ்கிறாய்
நீங்காது உன் நினைவு எம் நெஞ்சை விட்டு எந்நாளும்
வேண்டுகின்றோம் என்றென்றும் இறைவனிடம் உன் சாந்திக்காக...

நி.மு:- *நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.*
த.மு:- *கோப்பாய் தெற்கு, கோப்பாய்.*

உமது பிரிவால் நினைந்துருகும்:
- குடும்பத்தினர்.

(24605)(34-21-13-16)

# உயிர் கொல்லி....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பு பிரிவினர் (**STD Clinic**), அக்குருதியை பரிசோதித்து தொற்று ஏற்பட்டுள்ளதா, இல்லையா என சம்பந்தப்பட்டவருக்கு மட்டுமே இரகசியமாக அறிவிப்பார்கள்.

பின்னர் அவர்களுக்கு தொற்று இனங்காணப்படுமிடத்து மருத்துவ ஆலோசனைகளும், உளவளத்துணையும் பெற்றுக்கொடுக்கப்படும்.

**நோயாளர் பராமரிப்பு**

Hiv தொற்றுக்குள்ளானவரை முற்றாக குணப்படுத்த (கிருமியை அழிக்க) இதுவரை எந்தமருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, நாம் தொற்றைப்பெறாது விழிப்புணர்வோடு இருப்பதே அவிசியமானது.

எய்ட்ஸ் நோயாளர் ஒருவர் எமது சமூகத்தில் இனங்காணப்பட்டால் அவரை நிச்சயம் பராமரிக்க வேண்டும்.

- தொற்றுள்ளவரது உணர்வுகளை மதித்தல்.
- அவரை ஏற்றுக்கொள்ளுதல்.
- எதிர்காலத்தை சரியான பாதையில் திட்டமிட்டுக் கொடுத்தல்.
- மருந்து வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- சாதாரண நோயாளியைப் போல் கவனமாகப் பழகுதல்.
- அவரது தேவைகளை நிறைவேற்றுதல்.
- உளத்தாக்கத்திலிருந்து விடுபட வழிசமைத்தல்.
- மனதில் நம்பிக்கை ஊட்டுதல்.

என்பனவற்றினூடாக அவரைப் பராமரித்தல் அவருக்கும் அவர் சார்ந்த சமூகத்திற்கும் நன்மை அளிப்பதாகும்.

"எனவே எய்ட்ஸ் பற்றித் தெரிந்து கொண்டு ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவோமாக!"

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த

**திரு.பொன்னன் கனகரத்தினம்**

அவர்கள் நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பெற்று 10.11.2003 திங்கட்கிழமை மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் யாழ். ஆனைக்கோட்டை வல்லியப்பர் கோயில் பரிபாலன சபைச் செயலாளரும் சிறந்த சமூக சேவையாளரும் ஆவார். அவரின் சேவை தொடர இறைவன் அருள் வேண்டி மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கதிரேசு அன் சன் ஸ்தாபனத்தார்

(24642)(35-13-16-21)


# கல்வியியலாளன்

**M.Ed., B.Ed., Dip.in.Edu., N.Dip.in.Tr.** மற்றும் ஆசிரிய வாண்மை மேம்பாட்டுக்கான புதிய சிந்தனைகளின் வெளியீடாக அமைந்துள்ளது.

பல்வேறு துறைசார் புலமையாளர்களின் 25 ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டது.

பிரதி ஒன்றின் விலை - 250/=

தொடர்புகளுக்கு:

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

(24635)(34)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**பொன்ராசா ஜெயக்குமார்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13.06.1978 | 14.10.2003 |

*அன்புடனும் பண்புடனும் வளர்ந்தாய்*
*– இன்று*
*அரைவாசியில் எம்மை விட்டு மறைந்தாய்*
*– என்றும்*
*உம் நினைவுடனே தவிக்கின்றோம்.*

முருகன் வீதி,
திருநெல்வேலி.

- குடும்பத்தினர்.

(C31254)(34-13-21-16)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| ஆதிபாதம் | அந்தம் |
|---|---|
| 06 | 14 |
| 03 | 10 |
| 1929 | 2003 |

**திருமதி நாகபிள்ளை பொன்னுத்துரை**

**(கனகம்மா)**

திங்கள் ஒன்று சென்றாலும்
தீராது எம் துயரம்
அம்மா என்றழைக்க எமக்கினி யாருமில்லை!
எம் அழுகை உம் காதில் கேட்கவில்லையா?
காலமெல்லாம் கடமை செய்து காத்து வந்தீர் எம்மை!
உம் கடமை முடிந்ததென்று சென்றுவிட்டீரோ?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*தற்போதைய முகவரி*
இல. 40/2, கோவில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

*நிரந்தர முகவரி*
வேலணை மேற்கு,
வேலணை - 07

தங்கள் பிரிவால் வாடும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(35-15-16-21)

(24643)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை

**செல்வி மெறிற்றா** அவர்களின் அன்புத் தந்தையாரான

**ஞானப்பிரகாசம் லீனஸ்ரட்ணம்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காகப் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் சங்கம்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(24630)(34-21-13-16)

# ஊர்காவற்றுறை பிரதேசசபை

## மீன் சந்தைகள், மாட்டிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2004

ஊர்காவற்றுறை பிரதேசசபை எல்லைக்குள் இருக்கும் மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01.01.2004 தொடக்கம் 31.12.2004 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் 25.11.2003 ஆம் திகதி 12.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினமே பி.ப.2.00 மணிக்கு கேள்விச் சபையால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணத்தில் கேள்விக்காரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் 24.11.2003 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஊர்காவற்றுறை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் கீழ்க்குறிப்பிடப்பட்ட கேள்வி வைப்புப்பணம் கேள்விப் படிவக் கட்டணம் ஆகியவற்றை பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மெலிஞ்சிமுனை, நாரந்தனை மாட்டு இறைச்சிக்கடைகளை எமது சபையின் அனுமதியுடன் சுகாதார திணைக்களத்தின் சிபார்சுக்கிணங்க கேள்விக்காரரே தமது செலவில் அமைக்க வேண்டும்.

குறிப்பு:

1. ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக்கடை மாதாந்த வாடகை 150/- ரூபாவுடன் அதற்குரிய வற்வரி சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.
2. தங்களால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு புறம்பாக 20% வற்வரியாகச் செலுத்துதல் வேண்டும்.
3. கேள்விப் பத்திரத் தொகையுடன் அதற்குரிய 20% வற்வரி செலுத்தப்பட வேண்டும்.

| இல. | குத்தகை விவரம் | கேள்விப் பத்திர பணம் (மீளளிக்கப்படாதது) | கேள்விப்பத்திரப் பிணைப்பணம் (மீளளிக்கக்கூடியது) | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01. | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக்கடை இல. - 1 | 200.00 | 2000.00 | 50000.00 |
| 02. | ஊர்காவற்றுறை மாட்டிறைச்சிக்கடை இல. - 2 | 200.00 | 1500.00 | 40000.00 |
| 03. | ஊர்காவற்றுறை மீன்சந்தை | 150.00 | 1250.00 | 35000.00 |
| 04. | நாரந்தனை மீன்சந்தை | 100.00 | 600.00 | 15100.00 |
| 05. | புளியங்கூடல் மீன்சந்தை | 100.00 | 500.00 | 5000.00 |
| 06. | காரைநகர் பழைய கண்டி மீன்சந்தை | 100.00 | 600.00 | 15000.00 |
| 07. | காரைநகர் வேம்படி மீன்சந்தை | 100.00 | 600.00 | 15000.00 |
| 08. | மெலிஞ்சிமுனை மாட்டிறைச்சிக்கடை | 150.00 | 1000.00 | 25000.00 |
| 09. | நாரந்தனை மாட்டிறைச்சிக்கடை | 150.00 | 1000.00 | 25000.00 |

ஊர்காவற்றுறை பிரதேசசபை,
ஊர்காவற்றுறை.
11.11.2003

கு.கணேசலிங்கம்,
செயலாளர்,
ஊர்காவற்றுறை பிரதேசசபை.

(சி-31256) (25-21-13-16)

# தந்தையின் அடியுதையிலிருந்து தாயை காப்பாற்றும்படி கோரி சிறுமி முறையீடு!

## தந்தையைக் கைதுசெய்த பொலீஸார் எச்சரித்தபின் விடுவித்தனர்

தெல்லிப்பழை,நவ.13

தனது தந்தையின் அடி, உதை யிலிருந்து தன் தாயாரைக் காப்பாற் றும்படி கோரி 10 வயது பாடசா லைச் சிறுமி ஒருத்தி சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு செய்தார். கடந்த சனிக்கிழமை இந்தச் சம்ப வம் இடம்பெற்றது.

கடந்த சனிக்கிழமை காலை சுன்னாகம் பொலீஸ் நிலையத் திற்கு வந்த புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த இந்தச் சிறுமி, தனது தந்தையாரின் அடியிலிருந்து தன் தாயைக் காப்பாற்றும்படி பொலீ ஸாரிடம் அழுதபடி முறையிட்டுள் ளார்.

தினமும் குடித்துவிட்டுவரும் தந்தை, உணவுக்குக் கூட தமக்கு காசு தருவதில்லை என்றும் - ஏதே னும் கேட்டால் தன் தாயைக் கையா லும், காலாலும் அடிப்பது வழமை என்றும் - பொலீஸாரிடம் கூறிய அந் தச் சிறுமி, அன்றும் குடித்துவிட்டு வந்த தந்தை தன் தாயை மிருகத் தனமாக தாக்குவதால் அவரிடமி ருந்து தன் அம்மாவைக் காப்பாற்று மாறு கோரி அழுதார் என்றும் - பொலீஸார் கூறினர்.

சிறுமியின் முறைப்பாட்டைக் கேட்ட பொலீஸார் சிறுமியுடன் அவ ளது வீட்டிற்கு விரைந்தனர். அங்கு குறித்த சிறுமியின் தந்தையைக் கைதுசெய்த அவர்கள் சுன்னாகம் பொலீஸ் நிலையத்திற்கு அவரைக் கொண்டு சென்றனர். அங்கு விசா ரணை நடத்திய பின்னர் இனிமேல் இவ்வாறு நடந்துகொள்ளவேண்டாம் என தந்தையை எச்சரித்து விடுவித் தனர். (ம-150)

# சட்டவிரோத மின் பாவனை வலி.மேற்கில் அதிகரிப்பு

வலி.மேற்கு,நவ.13.

வலிகாமம் மேற்குப் பிரதேசத் தில் சட்டவிரோத மின்பாவனை அதி கரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகி றது. இதனைக் கட்டுப்படுத்த நட வடிக்கை எடுக்குமாறு இலங்கை மின்சார சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகப் பொறுப்பதிகாரி பொ.சண்முகானந்தசிவம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடை பெற்ற வலி.மேற்கு பிரதேச ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் செயலக மாநாட்டு மண்ட பத்தில் பிரதேச செயலர் தலைமை யில் நடைபெற்றது. பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயப் பட்டது. திணைக்களங்களின் அதி காரிகள், கிராம அலுவலர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி கள் உட்பட இன்னும் பலர் கலந்து கொண்டனர்.

சட்டவிரோத மின்பாவனையை கட்டுப்படுத்த கிராமங்கள் தோறும் கிராம அலுவலர், பொது அமைப்புக் களின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட குழுக்களை அமைக்கவேண் டும் என சிபாரிசு செய்யப்பட்டது. சட்ட விரோத மின்பாவனையால் ஏற்படு கின்ற உயிர் இழப்பு மற்றும் இன்னல் கள் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சிப் பிரசுரங்களை விநி யோகிப்பது என்றும் - அதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டது. (ம-175)

# யாழ். கல்வி வலய ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ். கல்வி வலயத்துக்கு உட் பட்ட பாடசாலை மாணவர்களின் ஓவியக் கண்காட்சி யாழ். கனகரத் தினம் மத்திய மகாவித்தியாலயத் தில் (ஸ்ரான்லிக் கல்லூரி) நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட் டுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை வரை இந்தக் கண்காட்சி தொடர்ந்து நடைபெறும்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப் பாய் கோட்டங்களைச் சேர்ந்த பாட சாலைகளில் கல்வி கற்கும் சுமார் 400 மாணவர்களின் ஓவியங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வருடாந்தம் வலய மட்டத்தில் நடத்தப்படும் இந்தக் கண்காட்சியில் தரம் 4 முதல் தரம் 13 வரையான மாணவர்களால் வரையப்பட்ட ஓவி யங்கள் உள்ளன.

யாழ். கல்வி வலயப் பணிப் பாளர் ப.விக்னேஸ்வரன் கண்காட் சியை ஆரம்பித்துவைத்தார்.

பல்வேறு பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர்கள் இந்தக் கண்காட் சியைப் பார்வையிட்டு வருகின்றனர்.

மாணவர்களிடையே சித்திர பாடம் மீதான ஆர்வத்தை அதிகரிக்கும் வகையில் இந்தக் கண்காட்சி வரு டாந்தம் நடத்தப்படுகிறது என்று சித் திரபாட ஆசிரிய ஆலோசகர் நா.சுந் தரலிங்கம் தெரிவித்தார். (ம)



யாழ் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் ஓவியக் கண்காட்சி கனகரத்தினம் மத் திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்று வருகிறது. பாடசாலை மாணவர்கள் கண்காட்சியை பார்வையிடு வதைப் படங்களில் காணலாம். *(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# விதிகளுக்கு மாறாக பொருள்கள் விற்ற 4 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

தெல்லிப்பழை,நவ.13

நுகர்வோர் பாதுகாப்புச் சட்ட விதிகளுக்கு அமைவாக பொருள் களை விற்பனை செய்யாத நான்கு வர்த்தகர்கள் மீது பொதுச் சுகாதார பரிசோதகர்களால் மல்லாகம் நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

கலப்படம் செய்த நல்லெண் ணையை விற்பனைக்காக வைத்திருந் தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தெல்லிப்பழை மற்றும் சுன்னாகத்தைச் சேர்ந்த இரு வர்த்தகர்களுக்கெதிரா கவும் -

பொருளை இனங்காட்டும் லேபிள் இல்லாத மலத்தியோன் பக்கெற்று களை விற்பனைக்காக வைத்திருந் தமைக்காக சங்கானை வர்த்தகர் ஒரு வருக்கு எதிராகவும் -

அனுமதி பெறாது ஐஸ்கிறீம் தயாரிப்பில் ஈடுபட்டமைக்காக வர்த் தகர் ஒருவருக்கு எதிராகவும் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள் ளன.

மல்லாகம் நீதிமன்றம் விசார ணைக்காக இந்த வர்த்தகர்களுக்கு அழைப்பாணை அனுப்பிவைத்துள் ளது. (ம-150)

# அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி புலிகளைச் சீண்டினால் தக்க பதிலடி

## அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவிப்பு

மட்டக்களப்பு,நவ.13

தென்னிலங்கையில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பிரதமர் ரணில் தலைமையிலான அரசுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் பாரிய குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. இதனால், சண்டை மீண்டும் தொடங்குமா? என்று பலர் கேட்கின்றனர். புலிகளைச் சீண்டினால் அடிகொடுக்கத் தயாராக இருக்கும் போது சிரித்துக்கொண்டு வேலை செய்வதுதான் எமது நோக் கம்.

- இவ்வாறு தெரித்தார் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி தரமேஷ்.

விடுதலைப் புலிகளின் பொருண் மிய மேம்பாட்டுப் பிரிவின் ஏற்பாட் டில் மட்டக்களப்பு, கிரடியனாறு மகா வித்தியாலயத்தில் 'பசுமை' காலாண் டுச் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப் பாளர் க.நிசாம் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.

தனது உரையில் தளபதி தரமேஷ் மேலும் கூறியதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும், ஜனாதிபதிக்கும் இடை யில் பாரிய குழப்பநிலை ஏற்பட்டுள் ளது. இதைப்பற்றி நாம் அலட்டிக் கொள்ளவில்லை. ஏனென்றால், நாங் கள் மிகவும் பலமாக உள்ளோம்.

யுத்தம் ஓய்ந்துள்ள இந்நிலை யில், மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த அனைவரும் உழைக்க வேண்டும்.

உலகநாடுகளை எடுத்துக்கொண் டால் ஆறு மாதங்கள் மட்டுமே தொழில் செய்யும் நாடுகள் பொரு ளாதார ரீதியில் முன்னேறியுள்ளன.

எம்மிடம் போதிய வளம் உண்டு. எமது கிராமப்புற மக்களிடையே விவ சாயம், போஷாக்கு குறித்த அறிவு குறைவாகவே காணப்படுகின்றது. இந்நிலையைப் போக்கவேண்டும் - என்றார். (ம-5)

## ஜி.சீ.ஈ. பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

வலி.தெற்கு,நவ.13

இவ்வருடம் டிசெம்பர் மாதம் முத லாம் திகதி ஆரம்பமாக உள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சைக்குரிய அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று இம் மாதம் 17ஆம் திகதி காலை கோப் பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இவ்வறிவுறுத்தல் கூட்டத்தில் பங்குபற்றுமாறு இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர் கள், பரீட்சை நிலைய மேற்பார்வை யாளர்கள், நிரந்தர நோக்குநர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர். (ம-152)

# புலிகளின் வரைவு இந்தியாவை நேரடியாகப் பாதிக்குமாம்

## தமிழ்நாட்டு அரச சேவைத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,நவ.13

"விடுதலைப் புலிகள் முன்வைத் திருக்கும் இடைக்கால நிர்வாக வரைவு இந்தியாவை நேரடியாகப் பாதிக்கும் எனவே, இந்த விடயத்தை ஒதுக்கிவிடமுடியாது".

அகில இலங்கை லிகிதர் சங்கம் ஒழுங்குசெய்திருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ் நாடு அகில இந்திய அரச சேவைச் சங்கத்தின் தலைவர் எம்.ஆர்.அப் பன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலியில் நடைபெற்ற இக்கூட்டத் தில் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் முன்வைத் திருக்கும் இடைக்கால நிர்வாக வரைவு குறித்து இந்திய அரசியல் கட்சிகள் விமர்சித்து வருகின்றன.

இந்த விடயம் தொடர்பாக நாம் உன்னிப்பாக அவதானித்து வருகி றோம். இனப்பிரச்சினையைப் பேச் சுக்கள் மூலமே தீர்க்கவேண்டும் என் பதில் - எமக்கு எவ்வித கருத்து முரண்பாடும் இல்லை.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டதன் பின் னர் இந்திய மக்கள் மிகவும் விழிப் பாகவுள்ளனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின் உருவாக் கப்பட்ட வடக்கு - கிழக்கு இணைந்த நிர்வாகத்தை விடுதலைப் புலிகள் நிராகரித்தனர். 1987 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த நிர்வாகத் தில் குறைபாடுகள் இருந்திருக்கலாம். ஆனால், அதை பேச்சின் மூலம் தீர்த்திருக்கலாம்.

தமிழ்நாட்டிலும் இவ்வாறான பிரச் சினைகள் உள்ளன. ஆனால், அந் தப் பிரச்சினைகள் மத்திய அரசுடன் பேசித் தீர்வுகாணப்படுகிறது.

அதேபோல், புலிகளும் இந்தப் பிரச் சினைகளை இலங்கை அரசுடன் பேசித் தீர்த்திருக்கலாம். ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதே எமது கொள்கையாகும் - என்று அவர் கூறினார்.

# நாடாளுமன்றைக் கூட்டினால் மட்டுமே தேசிய அரசு குறித்துப் பேச முடியும்

## அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

தேசிய அரசு அமைப்பது குறித்து கலந்துரையாடுவதற்குமுன் ஜனாதி பதி நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டுமென காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பலாத்காரமாக அமைச்சுப் பொறுப்புகளைப் பொறுப்பேற்றது மட்டுமன்றி நாடாளுமன்றத்தை ஒத்தி வைத்துவிட்டு தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கு அழைப்பு விடுப்பது வேடிக்கையாகவுள்ளது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக மக்கள் பிரதமர் ரணில் தலைமையிலான அரசுக்கு ஆணை வழங்கியுள்ளனர். அதனால், சமா தானமா? யுத்தமா? என்பதைத் தீர் மானிக்கமுடியாத நிலையில் ஜனாதி பதியுடன் தேசிய அரசு ஒன்று குறித் துப் பேச்சு நடத்தமுடியாது.

எனவே, ஜனாதிபதி உடனடி யாக நாடாளுமன்றத்தைக் கூட்டி, நாடாளுமன்றம் எதனை முன்னெடுத் துச்செல்லவேண்டும் என்பதனைத் தீர்மானித்த பின்னரே, அந்தக் கூட்ட மைப்புக் குறித்து அதனுடன் தொடர்பு டையவர்களோடு பேசமுடியும் எனினும், பிரதமர் ரணில் தலைமையிலான அரசு ஒருபோதும் சமாதான வழியை விட்டு வேறு எந்தத் திசைக்கும் திரும் பிச் செல்லாது - என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித் தார்.


## கோட்டைப் பகுதி மக்களுக்கு!

ஏ-9 தரை வழிப்பாதை ஊடாக குடாநாட்டுக்கு வருகைதந்து மீளக் குடியமர்ந்துள்ள யாழ். கோட்டைப் பகுதி மக்களுக்கு (ஜே/81) அகதி களுக்கான ஐ.நா.தூதரகத்தினால் நாளை வெள்ளிக்கிழமை வீட்டுப் பாவனைப் பொருள்கள் வழங்கப்பட வுள்ளன.

எனவே, நாளைகாலை 9.30 மணிக்கு ஜே/81 கிராம அலுவலர் பணிமனைக்கு வருகை தந்து பொருள்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கிராம அலுவலர் பி.பாக்கியராஜா கேட்டுள்ளார். (ம-10)

# சாயி சிந்தனை

## நிரந்தர ஆபரணங்கள்



இன்று பக்தர்கள் பல வகையான புனித நூல் களைப் படிக்கலாம். அறிவுரைகளைக் கேட்கலாம். ஆனால், மனம் மட்டும் மாறாமல் அப்படியே இருக் கிறது. இப்புனித நூல்கள், அறிவுரைகள் எல்லாம் ஆபரணங்களைப் போல அவற்றை வெறிதே அணிந்துகொள்வதால் மட்டும் ஆனந்தம் கிடைப்பதில்லை. ஆனந்தம் உங்களுக்குள்ளேயே இருக்கிறது. அதனை நீங்கள் உணரவேண்டும். விலையுயர்ந்த நகைகள் எல்லாம் இரும்புப் பெட்டகத்தில் வைத்துப் பூட்டப்பட்டிருப்பதைப் போல இவ்வுலகில் ஆத்மதத்துவம் பாதுகாக்கப்படுகிறது. உங்களது தேகத்தி லேயே பல வகையான விலையுயர்ந்த அணிகலன்களை இறைவன் வைத்திருக்கின்றார். இதனைப் புரிந்துகொள்ள நீங்கள் எந்த முயற்சியும் எடுப்பதில்லை. "அடப் பைத்தியக்காரா! எதற்காக இவ்வளவு தாழ்மை யான, அற்பத்தனமான ஆசைகளை உன்னுள்ளே உருவாக்கிக் கொள் கிறாய். நீ உனது ஆசைகளை விட்டுவிட்டு உன்னை என்னிடத்தில் அர்ப்பணித்தாலே போதுமானது. நான் உனக்கு விலையுயர்ந்த அணிகலன் களை அளிப்பேன்" என்று இறைவன் கூறுகின்றார்.

கடவுள் உனக்கு அளவற்ற அத்வைத ஆனந்தத்தை அளிக்கத் தயாராக இருக்கும்போது அளவுக்குட்பட்ட ஆனந்தத்தை ஏன் தேடுகிறாய்? அற்பத்தனமான விஷயங்களை இறைவனிடம் கோராதே! உன்னை இறைவனிடம் அர்ப்பணித்து விடு. பிறகு இறைவன் உனக்கு அனைத்தை யும் தருவார். இறைவனது இடையறாத அருளுக்கு நீ தகுதியுடையவனாக ஆகவேண்டுமென்றால், உனது நம்பிக்கை முதலில் உறுதிப்பட்டு, பின்னர் வளரவேண்டும். அறிவற்றவன் என்ன படித்தாலும் தன்னையே புரிந்துகொள்ள மாட்டான். அளவுக்குட்பட்ட அவனது அறிவைக் கொண்டு வீணான வாதங் களில் இறங்குவான். அதனால் எப்போதும் முழுமையான ஞானத்தைப் பெறவேமுடியாது. *(ஆதாரம்: சனாதன சாரதி)*

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பலசரக்குக் 'கடைக்குத் தேவையான நல்ல நிலையிலுள்ள தளபாடங்கள், 15Kg, 500Kg, Avery தராசு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 316, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (Sun Computer உள்புறம்) T.P.: 222 5208. (24641)

### வீடு வாடகைக்கு தேவை

நகர்ப்பகுதி பாடசாலையில் கற்பிக்கும் தம்பதியினருக்கு வீடு வாடகைக்குத் தேவை. (நல்லூர், கந்தர்மடம், திருநெல்வேலி, கல்வியங்காடு பகுதிகளில் Annex-பகுதியாக இருத்தல் விரும்பத்தக்கது) தொடர்பு: திரு குசிறி கணேஷ். T.P.226-3112. (24627)

### திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன. உங்கள் பிள்ளைகளின் திருமண சேவைக்கு எம்முடன் நேரில் தொடர்பு கொள்ளவும். த.சிவானந்தன், பிரபல சோதிடர், 264, பலாலி வீதி, கந்தர்மடம (பேபி போட்டோ முன்பாக). (24607)

1967 ஆம் ஆண்டு, செவ்வாயற்ற, M.B.B.S. Doctor மணமகனிற்கு Doctor, Engineer, Accountant மணமகள் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 101/1, ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப்புளியடி, (K.K.S. வீதி) யாழ்ப்பாணம். கடிதம் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம். (24648)

1961, உத்தரட்டாதி செவ்வாய் 4, U.K. Engineerக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை. விரைவில் வரவுள்ளார். விவாகரத்துப் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். சீதனம் முக்கியமில்லை. தொடர்பு: துரைவிமலா, இலகு திருமண சேவை, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம். (24580)

# தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி இறுதிப் பரீட்சை சனியன்று!

வலி-தெற்கு,நவ.13.

உடுவில் கல்விக் கோட்டத்தினரால நடத்தப்பட்டு வந்த தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சைகளின் இறுதிப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00மணிக்கு குறிப்பிட்ட சில பாடசாலைகளில் வைத்து நடத்தப்படவுள்ளது.

ஏழாலை மகாவித்தியாலயம், இராமநாதன் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, கந்தரோடைத் தமிழ்க்கந்தையா வித்தியாசாலை, மயிலணி சைவ வித்தியாலயம், ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், ஏழாலை சைவ மகாஜனா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் இப்பரீட்சை நடைபெறும்.

இப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஏழாலை மகாவித்தியாலயத்திலும், இராமநாதன் கல்லூரியிலும் இம்மாதம் 17ஆம் திகதி நடைபெறும் எனவும் -

உடுவில் கோட்டத்தில் இப் பரீட்சைக்கு தோற்றவுள்ள 834 மாணவர்களுள் குறிப்பிடத்தக்க புள்ளிகளுக்கு மேல் எடுப்பவர்களை பாராட்டி பரிசுகளும் வழங்கப்படவிருக்கின்றது எனவும்- உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன அறிவித்துள்ளார். (ம-152)

# புலமைப் பரிசில் மாதிரி பரீட்சை

வலி.தெற்கு,நவ.13

யாழ்ப்பாண மாவட்டத்தில், இம்முறை நடைபெறவுள்ள ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற உள்ள பாடசாலை மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்துகலாசார அமைச்சின் அனுசரணையுடன் யாழ்ப்பாணக் குடாநாட்டு பாடசாலைகள் அனைத்திலும இப்பரீட்சை நடைபெறவுள்ளது.

பொதுப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களே இப்பரீட்சைக்குத தோற்றமுடியும். அத்துடன், பொதுப் பரீட்சை நடைபெறவுள்ள பரீட்சை நிலையங்களிலேயே இப்பரீட்சையையும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பரீட்சை மேற்பார்வையாளர்கள் வினாத்தாள் பொதிகளை 16ஆம் திகதி காலை தமது வலயக் கல்விப்பணிப்பாளரின் பிரதிநிதிகளிடம் இருந்து பெற்றுக்கொண்டு விடைத்தாள்களை மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. (ம-152)

## உடுவில் கோட்ட சைவத் திருமுறை விழா

வலி.தெற்கு,நவ.13

உடுவில் கல்விக் கோட்ட சைவத திருமுறை விழா இம்மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

உடுவில் கல்விக்கோட்ட உதவிக கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன தலைமையில் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் இவ் விழா நடைபெறும்.

சைவத்திருமுறை விழாவின் ஆரம்பத்தில் நாயன்மார்களின் திருமுறை ஏடுகள், சுவடிகள், படங்கள் என்பன கந்தரோடை ஸகந்தவரோதயக் கல்லூரியில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

இவ்விழாவையொட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட நீதிச் செய்யுள் மனனப்போட்டி, திருமுறை பாராயணம், பண்ணிசை போட்டி மற்றும் தோரணம் செய்தல், மாலை கட்டுதல், கோலம் போடுதல் போன்ற தொண்டுபடும் செயன்முறைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசுகளும் இவ்விழாவின் போது வழங்கப்படவுள்ளன. (ம-152)


## படிவம்

ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் தற்போது க.பொ.த. (உயர்தர) வகுப்பில் பயிலும் மாணவர்கள் புலமைப் பரிசிலுக்காக விண்ணப்பிப்பதற்குரிய படிவம் விற்பனைக்குண்டு.

விண்ணப்ப முடிவுதிகதி 01-12-2003

பாரதி பதிப்பகம்,

130, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.



## பருத்தித்துறை, முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடுவப்பணிமனை மேல்மாடிக் கட்டட திறப்புவிழா அழைப்பு




பருத்தித்துறை பல நோ.கூ.சங்கத்தின் நடுவப்பணிமனை மேல்மாடிக் கட்டடம் நாளை (14.11.2003) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு வரும் சுபவேளையில் (புதிய நேரம்) சங்கத் தலைவர் திரு.ந.சிவஞானசுந்தரம் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

ஆகவே அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் இவ்வைபவத்தில் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

பருத்தித்துறை. (சி-31258) (24-13-21)


## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ ப.கணேசரத்தின சர்மா

அளவெட்டி, கும்பளாவளையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ ப.கணேசரத்தின சர்மா அவர்கள் நேற்று முன்தினம் (11.11.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தேஜேவதியின் அன்புக் கணவரும் ஹம்சத்வனி (ஆசிரியை, திருகோணமலை), சாருமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பா.குமாரசுவாமி ஐயர் (ராஜன் - மின்சாரசபை, திருமலை), பா.சந்திரமோகன (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமாமனாரும் ஹரிப்பிரியா, அபயங்கன், சகாஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.11.2003) புதன்கிழமை திருகோணமலை இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை அனைது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி இல. 026-22-20514
026-22-24574

43, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.

க.சுரேந்திரசர்மா
(பெறாமகன்)

(24651) (26-13-21)


## விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி
## தரம் 1, தரம் 6
## புதிய மாணவர் அனுமதி - 2004

மேற்படி வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. காரியாலயத்தில் படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து 25.11.2003இற்கு முன் சமர்ப்பிக்கவும்.

தரம் 6,7 இல் ஆங்கில மொழி மூல வகுப்புகளுக்கு அனுமதி உண்டு.

~ அதிபர்.

(C/31257)(35-21-16-13)


## இவர்களுக்கு எமது நன்றிகள்

எங்களது இதய தெய்வமான வேலணை மேற்கு

திருமதி

### சு.நா.வேலுப்பிள்ளை தங்கம்மா

அவர்களின் 13.10.2003 அன்றைய மறைவின் பின்னர் அன்று முதல் இன்று வரை சகல வழிகளிலும் எமக்குத்துணை நின்ற எமது இல்லத்தின் உரிமையாளர் திரு.திருமதி ஏ.எஸ்.அந்தோனிப்பிள்ளை அன்ரன் தம்பதியினருக்கும் (222, 224 ஸ்ரான்லி வீதி, அன்ரோ எலக்ரிக்கல்ஸ், டயானி இன்டஸ்றீஸ் - உரிமையாளர்), (இல.1, சோமசுந்தரம் அவென்யூ. சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்) மற்றும் திரு.திருமதி பீற்றர் தேவதாசன் (பாபு) தம்பதியினருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கவிஞர் வேலணை வேணியன்,
தலைவர்,
அகில இலங்கை கண்ணதாசன் மன்றம்
(பெறாமகன்) (24647)(26-21-13-16)

தங்கள் நன்றியுள்ளவர்களான
திருமதி தி. தவமணி (மகள்),
திருமதி வை.சுசீலா (மகள்),
திரு.தி.சாம்பசிவம் (அவுஸ்திரேலியா),
திருமதி ஜெயரூபி சாம்பசிவம் (அவுஸ்திரேலியா) (பேரன், பேர்த்தி)

## பாராட்டி/வாழ்த்துகின்றோம்

எமது சங்கத்தின் தலைவர்



திரு.வீ.எஸ்.தியாகராசா
அவர்களும்
(மருதங்கேணி, தாளையடி)

எமது சங்கத்தின் நெறியாளர்



திரு.க.ஆனந்தமூர்த்தி
அவர்களும்
(நாகர்கோவில் வடக்கு நாகர்கோவில்)

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிவான் திருமதி எஸ். நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் 12.11.2003இல் யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்களாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இவர்கள் எமது சங்கத்தின் ஆரம்ப உறுப்பினர்களும் முதலாவது நெறியாளர் குழுவின் உறுப்பினர்களாவதுடன் இன்றும் தலைவர், நெறியாளராய் செயற்பட்டு வருகின்றனர். இவர்களது சமூகசேவை அளப்பரியது. இவர்களது சமூகசேவை இன்னும் தொடரவும் மென்மேலும் சிறக்கவும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுவதுடன் இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பணியாளர்களும், பணிப்பாளர்களும்,
வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்.

மருதங்கேணி,
தாளையடி.

(C/31259)(34-13-21-16)

## இணுவை மைந்தனின் அறுபதாவது அகவை நிறைவு



## மணிவிழா வாழ்த்து
### 13.11.2003

தென் இணுவைப் பதியுறையும்
தேவன் கணேசன் பதம்
சென்னிமிகப் பணிந் தேத்தும்
செம்மல் சிவராசா
தன் மனையாள்
லோகநாயகி யோடு
புத்திரரும் கூடி
பன்னெடுங் கால மெலாம்
பார் போற்ற வாழியரே!

காலம் : இன்று (13.11.2003) வியாழக்கிழமை மாலை 4 மணி.
இடம் : ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபம், இணுவில்.
தலைவர்: க.தேவராஜா (வணிகத்துறைத் தலைவர் யாழ். பல்.கழகம்)

வாழ்த்துபவர்கள்:-
இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்.
இணுவில் கந்தசுவாமி கோயில்.
(அடியார்கள்)

யா/இணுவில் இந்துக் கல்லூரிச் சமூகம்.
யா/ இணுவில் மத்திய கல்லூரிச் சமூகம்.
இணுவில் பொது நூலகம் - சனசமூக நிலையம்.
திரு.நெறிய தமிழ்மறைக் கழகம்.
இணுவில் தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்.

(C/31255)



இந்தியா - ஆஸ்திரேலியா - நியூஸிலாந்து இடையிலான முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நேற்று இடம்பெற்ற ஆஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர் கில்கிறிஸ்ட் சதம் அடித்த மகிழ்ச்சியில்...

# மிகச்சிறந்த வீரராக வரவேண்டுமானால் ராகுல் திராவிட்டைப் பின்பற்றுங்கள்!

## சச்சின் டெண்டுல்கர் அறிவுரை

மிகச் சிறந்த கிரிக்கெட் வீரராக வரவேண்டுமானால் இந்திய அணியின் தூணாக இருக்கும் திராவிட்டைப் பின்பற்ற வேண்டும் என்று சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

வேதம் ஜெய்சங்கர் என்ற விளையாட்டு விமர்சகர் எழுதிய திராவிட் வாழ்க்கை வரலாறு பற்றிய புத்தகம் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இந்த விழாவில் பேசிய சச்சின் கூறுகையில்-

"இளம் வீரர்களின் சரியான முன்மாதிரி ராகுல் திராவிட். அனைவரும் பின்பற்ற வேண்டிய எடுத்துக் காட்டானவர் அவர். நாங்கள் அனைவரும் திராவிட்டின் வழியையே பின்பற்றி வாழ முயற்சி செய்து வருகின்றோம்.

திராவிட் ஒரு வலுவான துடுப்பாட்ட வீரர். சர்வதேச அளவில் மிகச் சிறந்த வீரர்களில் திராவிட்டும் ஒருவர். அவரைப் பார்த்து உண்மையிலேயே நான் மிகவும் வியந்து போயிருக்கிறேன். 1994- 95 இல் ராஜ்கொட்டில் முதன் முதலாக திராவிட்டைப் பார்த்தேன்.

அப்போது எனது நண்பரான அமோல் மஜீம்தார், திராவிட் பற்றி என்னிடம் கூறினார். "கர்நாடகத்தைச் சேர்ந்த இந்த வீரரைப் பாருங்கள். இவர் நிச்சயம் ஓட்டங்களைக் குவிப்பார். அதுமட்டுமன்றி மிகப்பெரிய அளவிலும் வருவார்" என்று மஜீம்தார் என்னிடம் கூறினார்.

அப்போது நான் அவரது விளையாட்டைப் பார்க்க வேண்டும் என்று கூறினேன். ஆனால், இன்று ஒட்டுமொத்த உலகமே அவரைப் பார்த்து வருகின்றது என்று பலத்த கரகோசத்துக்கு மத்தியில் சச்சின் கூறினார்.

திராவிட்டின் அர்ப்பணிப்பு, தியாகம் இரண்டிலும் நான் மிகவும் வியந்து போயுள்ளேன். இந்திய அணியின் உபதலைவரான திராவிட் மிகவும் உண்மையானவர்; மிகவும் நேர்மையானவர் எனவும் சச்சின் பாராட்டினார்.

ஆனால், சச்சினைப் பார்த்த பின்புதான் கிரிக்கெட் உலகில் பெரிய அளவில் வரவேண்டும் என்று தாம் திட்டமிட்டதாக திராவிட் குறிப்பிட்டார்.

இது குறித்து திராவிட் கூறுகையில் -

"எனக்கு இன்றும் நன்றாக ஞாபகமிருக்கிறது 13 அல்லது 14 வயது இருக்கும் என நினைக்கிறேன், நான் பெங்களூரில் இருந்து கட்டாக் சென்று பள்ளி அளவிலான கிரிக்கெட் போட்டியில் விளையாடினேன். அதிக ஓட்டங்களைக் குவித்தேன்.

"இதனால், நான் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரர் என்று நினைத்துக் கொண்டேன். ஆனால், மும்பையில் இருந்து வந்த திறமை நிறைந்த சச்சினைப் பார்த்தேன்; வியந்தேன்.

"அதன் பிறகுதான் தீர்க்கமான முடிவுக்கு வந்தேன். தொடர்ந்து கிரிக்கெட் விளையாட வேண்டும், சிறந்த வீரராக வரவேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டேன்" என்று கூறினார்.

'ராகுல் திராவிட் ஏ பயோகிராபி' என்ற புத்தகத்தை டெல்லியைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளது.

# பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கியதில் தவறில்லை!

## சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் கூறுகிறது

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கியதில் தவறில்லை. ஆனால், ஆரம்பக் கட்டத்தில் அவ்வணிக்கு நாம் மேலும் உதவிகளைச் செய்திருக்க வேண்டும்.

- இவ்வாறு சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி) பிரதம நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட் கூறியுள்ளார்.

2000 ஆம் ஆண்டு நவம்பரில் பங்களாதேஷ் அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்டது. அதன் பின் 26 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய பங்களாதேஷ் அணி, ஒரு போட்டியிலும் வெற்றி பெறவில்லை. இறுதியாக விளையாடிய 46ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் பங்களாதேஷ் தோல்வியுற்றுள்ளது.

இந்நிலையில், பங்களாதேஷ் அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்டது தவறு என்று சிலர் விமர்சிக்கின்றனர்.

இது தொடர்பாக மல்கம் ஸ்பீட் கருத்துத் தெரிவிக்கையில்:-

அவர்களுக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கியதில் தவறு இல்லை. ஆனால், ஆரம்ப கட்டத்தில் அவர்களுக்குச் சொந்த மண்ணில் அதிக போட்டிகளில் விளையாடும் வாய்ப்பை வழங்கியிருக்க வேண்டும்.

அடுத்த இரு வருடங்களில் டெஸ்ட் அல்லது ஒருநாள் போட்டியொன்றில் பங்களாதேஷ் அணி வென்றால் நாம் திருப்தியடைவோம்.



2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் இரண்டாவது சுற்றுக்குத் தெரிவாகுவதை இலக்காகக் கொண்டு பங்களாதேஷ் அணி செயற்பட வேண்டும் - என்றார்.

ஐ.சி.சி.தலைவர் இஷான் மானி கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் பங்களாதேஷ் அணி சிறப்பாக விளையாடியது. எனினும், அதன் பின்னர் அவ்வணி திடீரென வீழ்ச்சியடைந்துவிட்டது. 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணப் போட்டிகள் பங்களாதேஷுக்கு மேலும் பல வசதிகளை வழங்கும் - என்றார்.

# இங்கிலாந்து அணியுடனான கிரிக்கெட் போட்டிகள்: மத்திய துடுப்பாட்ட வரிசையே கவலைக்குரியது!

## ஹஷான் திலகரட்ன தெரிவிப்பு

இங்கிலாந்து அணியுடனான போட்டிகளில் பங்குபற்றவுள்ள இலங்கை அணியின் மத்திய வரிசைத துடுப்பாட்டமே கவலைக்குரியது.

- இவ்வாறு இலங்கை டெஸ்ட் அணியின் தலைவர் ஹஷான் திலகரட்ன நேற்றுமுன்தினம் பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற மேற்கிந்திய சுற்றுலாவின் பின்னர் இலங்கை அணி இதுவரை போட்டிகளில் பங்குபற்றவில்லை. தற்போது இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டிகளுக்கு இலங்கை அணி தயாராகி விட்டது என திலகரட்ன கூறுகிறார்.

அவர் மேலும் கூறுகையில் -

"இங்கிலாந்து அணி முன்னணி துடுப்பாட்ட வீரர்களையும் பந்து வீச்சாளர்களையும் கொண்டுள்ளது.

"ஆனால், சொந்த மண்ணில், சொந்த ரசிகர்களுக்கு முன்னிலையில விளையாடுவது இலங்கை அணிக்கு அனுகூலமானதாகும்.

"இவ்விரு அணிகளுக்கிடையிலான கடந்த இரு தொடர்களில் இங்கிலாந்து சிறப்பாக விளையாடி வெற்றிபெற்றது.

"எமது குறைபாடுகளை இனம் கண்டு திருத்திக்கொண்டால் நாம் கடுமையாகப் போராடலாம்.

"எமது மத்திய வரிசை சற்றே பலவீனமாகவுள்ளது என்பதை நாம் அறிவோம். களத்தடுப்பிலும் நாம் முன்னேற வேண்டும். இவ்விடயங்களில் நாம் தீவிர கவனம் செலுத்துகிறோம்.

"தரவரிசை குறித்து அலட்டிக் கொள்ளவில்லை. ஓரணியாக சிறப்பாக விளையாடினால் தரவரிசையில் முன்னேற முடியும்" - என்றார்.

இதேவேளை -

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இன்று இலங்கைக்கு வரவுள்ளது.

## விளையாட்டு

இங்கிலாந்து அணி நேற்றுவரை பங்களாதேஷில் போட்டிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய கிரிக்கெட் அணிவீரர் ஜவகல் ஸ்ரீநாத் ஓய்வுபெற்றார்

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஜவகல் ஸ்ரீநாத் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

பெங்களூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில இத்தீர்மானத்தை அறிவித்தார் ஸ்ரீநாத்.

34 வயதான ஸ்ரீநாத், கடந்த வருடம ஜூன் மாதம் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். எனினும், அணித் தலைவர் சௌரவ் கங்குலியின் வேண்டுகோளையடுத்து அவ்வருடம் ஒக்ரோபரில் நடைபெற்ற மேற்கிந்திய அணியுடனான டெஸ்ட் தொடரில் அவர் பங்குபற்றினார்.

பின்னர் இவ்வருட ஆரம்பத்தில் உலகக் கிண்ணத் தொடரில் 16 விக்கெட்டுகளை வீழ்த்தி பாராட்டுப் பெற்றார்.

எனினும், அதன்பின் ஜவகல் ஸ்ரீநாத் போட்டிகளில் பங்குபற்றவில்லை. முழங்காலில் ஏற்பட்ட காயமே இதற்குக் காரணம்.

ஆஸ்திரேலிய சுற்றுலாவுக்கான இந்திய அணி விவரம் அறிவிக்கப்படுவதற்கு இரு நாள்களுக்கு முன்னா ஸ்ரீநாத் தனது ஓய்வை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

67 டெஸ்ட் போட்டிகளில் 226 விக்கெட்டுகளையும் (சராசரி 28.08),



229 ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் 315 விக்கெட்டுகளையும (சராசரி 28.08) ஸ்ரீநாத் வீழ்த்தியுள்ளார்.

ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆகக் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய வீரர் ஸ்ரீநாத் ஆவார்.

கபில்தேவ் மாத்திரமே ஸ்ரீநாத்தை விட அதிக டெஸ்ட் விக்கெட்டுகளை (434) வீழ்த்திய வீரர் ஆவார்.

1997 இல் வலது தோள்மூட்டில் ஏற்பட்ட காயம் காரணமாக ஸ்ரீநாத்தின் கிரிக்கெட் வாழ்க்கை அத்துடன் முடிவடைந்துவிட்டது எனக் கருதப்பட்டது. ஆனால், 8 மாதகாலத்தின பின்னர் முழுப்பலத்துடன் திரும்பி வந்த ஸ்ரீநாத் பல சிறந்த பந்து வீச்சுக்களைப் பெற்றார்.

1999 இல் கொல்கத்தாவில் நடைபெற்ற பாகிஸ்தானுடனான டெஸ்டில் 86 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை வீழ்த்தியமையே டெஸ்ட் போட்டியொன்றில் ஸ்ரீநாத்தின் சிறந்த பந்து வீச்சுப் பெறுமதியாகும்.

147 முதல்தரப் போட்டிகளில் பங்குபற்றிய அவர், 533 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

தனது ஓய்வு குறித்து ஸ்ரீநாத் கூறுகையில் -

"நான் உறுதியாக இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளேன். எனது கிரிக்கெட் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் அணித்தலைவர் கங்குலி எனக்கு மிகவும் ஆதரவளித்தார். அணித்தலைவரிடமிருந்து இவ்வாறான நம்பிக்கை தரும் செயற்பாடுகளையே வீரர் ஒருவர் எதிர்பார்ப்பார்.

"3 உலகக்கிண்ணப் போட்டிகளிலும் பாகிஸ்தானைத் தோற்கடித்தமையே எனது 12 வருடகால கிரிக்கெட் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்வுகளாகும்" - என்றார்.

ஸ்ரீநாத்தின் ஓய்வு தொடர்பாக கங்குலி கருத்துத் தெரிவிக்கையில் -

"ஸ்ரீநாத் நீண்டகாலமாக இந்திய கிரிக்கெட் துறைக்குச் சேவையாற்றினார். அவரின் உடல் நிலை எந்தளவுக்கு இருக்கிறது என்பதை அவரே தீர்மானிக்கமுடியும்" - என்றார்.

(ம)

# இந்தியாவுடன் மோதுவதற்குரிய சக்திகள் எம்மிடம் இருக்கின்றன

## இன்ஸமாம் உல்ஹக் தெரிவிப்பு

"இந்திய அணியுடன் மோதுவதற்குத் தேவையான 'சக்திகள்' எம்மிடம் இருக்கின்றன. எவரும் எம்மைக் குறைத்து மதிப்பிடக்கூடாது."

- இவ்வாறு பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் இன்ஸமாம் கூறியுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் இந்திய அணி, பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமென இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

இவ்விரு அணிகளுக்கிடையில் 3டெஸ்ட், 7ஒருநாள் போட்டிகளை நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

இப்போட்டிகள் தொடர்பாக இரு தரப்பினரும் இப்போதே கருத்துக்களைத் தெரிவிக்க ஆரம்பித்து விட்டனர்.

இது தொடர்பாக பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்ஸமாம் உல்ஹக் நேற்றுமுன்தினம் கூறுகையில்-

"எவரும் எம்மைக் குறைவாக மதிப்பிடக்கூடாது. தென்னாபிரிக்க அணியுடனான தொடரில் நாம் வென்றோம். இது நாம் முன்னேறி வருகிறோம் என்பதைக் காட்டுகிறது.

"இந்தியாவுக்கு டெண்டுல்கர், திராவிட், கங்குலி ஆகியோர் இருக்கின்றனர் என்றால் எம்மிடம் சொஹைப் அக்தர், மொஹமட் சமி ஆகியோர் உள்ளனர். எனவே, சமபல அணிகளுக்கிடையிலான போட்டிகளாக இவை அமையும்" - இவ்வாறு இன்ஸமாம் கூறினார்.

இந்திய அணி சுமார் 15 வருடங்களின் பின்னர் பாகிஸ்தானில் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ளமை குறித்து இன்ஸமாம் கூறுகையில் -

"இது ஒரு நீண்ட, அளவுக்கதிகமான காத்திருப்பு. குறைந்த பட்சம் இரு வருடங்களுக்கு ஒரு தடவையேனும் இரு அணிகளும் மோத வேண்டும் என விரும்புகிறேன்.

"நான் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பல மில்லியன் கணக்கானோர இந்திய - பாகிஸ்தான் அணிகள் மிக விரைவாக மோதவேண்டும் என விரும்புகின்றனர். இப்போதே பலர் எம்முடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்திய அணியை நாம் தோற்கடிக்க வேண்டும் எனக்கூறி வருகின்றனர்" - என்றார்.



# சுவாமி விவேகானந்தர் ஜயந்தி தினத்தையொட்டிய ஆன்மீக எழுச்சி வாரம் கவிதை, கட்டுரை, பேச்சு போட்டிகள் - 2004

1. கீழ்ப்பிரிவு : தரம் 6 முதல் தரம் 8 வரை
2. மத்தியபிரிவு : தரம் 9 முதல் 11 வரை
3. மேற்பிரிவு : உயர்தரம்

சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் கடித மூலமாகவோ / நேரடியாகவோ சேர்ப்பிக்கவும்.

*அனுப்ப வேண்டிய முகவரி :*

செயலாளர், சுவாமி விவேகானந்தர் நற்பணி மன்றம்,
86, பொற்பதி வீதி,
கொக்குவில்.

விண்ணப்ப முடிவு திகதி : 23.11.2003

பெறுமதிமிக்க பரிசில்கள் உண்டு.

- சுவாமி விவேகானந்தர் நற்பணி மன்றம்.

*கொக்குவில்.*

(சி-31266) (31-12-18)



## யாழ்.நகரில் முதல் தடவையாக I.L.O இன் வியாபார முயற்சிக்கான பயிற்சித் திட்டங்கள்

## உங்களுக்கான பயிற்சித் திட்டங்கள் ஆரம்பமாகின்றன

*தொழில் இல்லையா? என்ன தொழிலை ஆரம்பிப்பது? எப்படி ஆரம்பிப்பது? கவலையை விடுங்கள். இவ்வினாக்களுக்கு விடை பகிர்கின்றது I.L.O இன் பயிற்சித் திட்டங்கள். இதனை I.L.O நிறுவனத்தின் யாழ். மாவட்ட பங்காளி நிறுவனமான சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் யாழ். மாவட்டத்தில் நடத்துகின்றது.*

❑ **GYB-** உங்கள் தொழிலுக்கான யோசனைகளை உருவாக்கல் உங்களிடம் உள்ள வளம், அறிவு என்பன வற்றை அடிப்படையாகக் கொண்டு என்ன தொழில் முயற்சியை ஆரம்பிக்கலாம் என்பது பற்றிய பயிற்சி.

**காலம்: 18,19,20 -11-2003**

காலை 8.30 - 4.30 வரை, தொடர் 03 தினங்கள்

❑ **SYB-** உங்கள் தொழிலை ஆரம்பித்தல் 21-11-2003 - 25-11-2003 வரை காலை 8.30 - 4.30 வரை தொடர் 05 தினங்கள்.
உங்கள் சிந்தனையில் உள்ள தொழிலை எவ்வாறு ஆரம்பிப்பது பற்றிய பயிற்சி.

**இடம: மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை பயிற்சி மண்டபம்.**

மேற்படி இப்பயிற்சிகளை பெறவிரும்புவோர் 17-11-2003ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்து 17-11-2003 அன்று நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுமாறு கேட்கப்படுகின்றீர்.

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம்
மூளாய், சுழிபுரம்.

(24656) (21-18-17-31)



## கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் தெற்கு கிராம அலுவலர் திரு.சி.தயாபரன் அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னப்பு சின்னத்துரை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தயா நகைப் பூங்கா
213C, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-31263) (25-31-18-12)



## நன்றி நவிலல்

திருமதி

### பிளசம் குணமணி அடைக்கலம்

அவர்களது மறைவுச் செய்தி அறிந்து, எம்முடன் இணைந்து துயர் பகிர்ந்துகொண்ட அன்பர்களுக்கும் தந்தி, தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மலர் வளையங்களைத் தனிமையாகவும், குழுக்களாகவும் வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும் மேலும் இறுதி ஆராதனை திருப்பலியில் எம்முடன் இணைந்துகொண்டு அவரது ஆத்மசாந்திக்கு ஆசீர்வேண்டி இறைஞ்சிய அனைத்து அருட்தந்தையர், அருட்சகோதரர், அருட்சகோதரியர் யாவருக்கும் அனைத்துப் பொது நிலையினர், ஸ்தாபனத் தலைவர் ஏனைய பெரியோர்களுக்கும் எல்லா வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்த அயலவர்களுக்கும் மற்றும் நண்பர்கள், உற்றார், உறவினர் யாவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*இல. 111, டேவிற் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

- குடும்பத்தினர்.

(24657) (25-31-18-12)


## அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ். மாவட்டத்தில் உள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இருநாள் செயலமர்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி முதல் நல்லை ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

இந்துகலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் நடைபெறும் இச்செயலமர்வு முற்பகல் 8.30மணி முதல் 5மணி வரை நடைபெறவுள்ளது.

நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், வேலணை, சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி ஆகிய எட்டு பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் இச் செயலமர்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

சமய தத்துவங்கள், வழிபாட்டு அம்சங்கள் பற்றிய விரிவுரை வகுப்புக்கள், பண்ணிசை, மாலை கட்டுதல், கோலம் போடுதல் மற்றும் கந்த புராண படன பயிற்சி என்பன பற்றி பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதுடன் விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

(ம-5)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.13

எல்லைப்படை மாவீரர்கள் நினைவாகத் தமிழீழ விளையாட்டுத்துறையினால் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் நடத்தப்படும் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ யாழ்ப்பாணம் வளர்மதி விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம்.

☆ பருத்தித்துறை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் ஏழாலை கண்ணகி விளையாட்டுக்கழகம்.

இந்தச் சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் பருத்தித்துறை சிவானந்தா விளையாட்டுக்கழகம் 4:1 என்ற கோல்கணக்கில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகத்தையும் -

யாழ்ப்பாணம் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம், அராலி ஏ.எஸ். விளையாட்டுக்கழகத்தை 9:0 என்ற கணக்கிலும் வெற்றிகொண்டன; அடுத்த சுற்று ஆட்டத்திற்கும் தகுதி பெற்றன.

(ம-5-86)

## கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.13

பூபாலசிங்கம் ஞாபகார்த்தமாக திருநெல்வேலி முடமாவடி ஞானவைரவர் விளையாட்டுக்கழகம் நடத்தும் கரபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 7மணிமுதல் கழக ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ இரவு 7மணி புத்தூர் கலைமதி வி.க.அணி எதிர் சிறுப்பிட்டி ஜனசக்தி வி.க.அணி.

☆ இரவு 7.30மணி யாழ். ஐங்கரன் வி.க. 'பி' அணி எதிர் ஆவரங்கால் சர்வோதய வி.க.அணி.

## அதிபர் கூட்டம்

தென்மராட்சி,நவ.13

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான விஷேட கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(எ-117)

## வழங்கல் கட்டளை பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.13

கடந்த செப்ரெம்பர் மாதத்திற்கான, நிவாரணப் பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகளை யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியில் பெற்றுக்கொள்ளுமாறு சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமும் கேட்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதத்திற்கான நிவாரண விநியோகத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரதியை இதன்போது செயலக புனர்வாழ்வு பகுதியில் சமர்ப்பிக்குமாறும் யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

(எ-4)


## இலங்கை மின்சார சபை சாவகச்சேரி மின் அத்தியட்சகர் அலுவலகம்

### இடம்மாற்றம்

மீசாலையில் இயங்கிவந்த இந்த அலுவலகம், தற்போது சாவகச்சேரி, கச்சாய் வீதியில் இயங்குகிறது என்பதை அப்பிரதேச மக்களுக்கு அறியத்தருகிறேன்.

இந்த அலுவலகத் தொலைபேசி இல. 060-22122218

மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேசம்.

(C-31269) (32-31-18-12)



## கூறுவிலை கோரல்

### இலங்கை மின்சார சபை, யாழ். பிரதேச அலுவலகம் மின்மார்க்கங்களிலுள்ள மரம், செடி, கொடிகளை வெட்டி அகற்றுதல்

யாழ். குடாநாட்டிலுள்ள சகல மின்மார்க்கங்களிலும் இடையூறாகவுள்ள மரம், செடி, கொடிகளை அகற்றுவதற்கான கூறுவிலைகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இவ்வேலை சம்பந்தமான விவரங்களையும், கூறுவிலைக்கான விண்ணப்பப்படிவங்களையும் மீளளிக்கப்படாத கட்டணமாக, ரூபா 100/= பெறுமதியான 'பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை, கொழும்பு' என்ற பெயரில் பெறப்பட்ட காசுக்கட்டளையைக் கொடுத்து 2003.11.17ஆம் திகதி காலை 9 மணிதொடக்கம் மாலை 3 மணிவரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களிலுள்ள இலங்கை மின்சார சபை மின் அத்தியட்சகர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த மின் அத்தியட்சகர் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.

| | |
|---|---|
| *சுன்னாகம் -* | *மின்சார சபை வளாகம், சுன்னாகம்.* |
| *காங்கேசன்துறை -* | *மின்சார சபை வளாகம், சுன்னாகம்.* |
| *யாழ். மாநகர சபைப் பகுதி -* | *125, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.* |
| *பருத்தித்துறை -* | *மாலிசந்தி, நெல்லியடி.* |
| *வட்டுக்கோட்டை -* | *பிரதான வீதி, சித்தன்கேணி.* |
| *சாவகச்சேரி -* | *கச்சாய் வீதி, சாவகச்சேரி.* |
| *யாழ். பராமரிப்பு -* | *குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.* |

பூர்த்திசெய்யப்பட்ட படிவங்களில் இரு பிரதிகளில் மூலப்பிரதியை வேறாகவும் இணைப்பிரதியை வேறாகவும் கடித உறையிலிட்டு, உறையில் இடதுபக்க மேல் மூலையில் கூறுவிலையின் பெயர், முடிவு திகதி என்பவற்றைக் குறிப்பிட்டு 2003.11.21ஆம் திகதி காலை 10 மணிக்கு முன்பதாக நீங்கள் படிவங்களைப் பெற்றுக்கொண்ட அலுவலகத்தில் நேரடியாகச் சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். கிடைக்கப்பெற்ற கூறுவிலைகள் எனது அலுவலகத்தில் 24.11.2003 காலை 10.00 மணியளவில் திறக்கப்படும்.

தாமதமாகவோ அல்லது எமது அலுவலகங்களால் வழங்கப்படாத பத்திரங்களில் வழங்கப்படும் கூறுவிலைகளோ நிராகரிக்கப்படும்.

யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம். (சி-31268) (30-31-18-12)

மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேசம்.



## மரண அறிவித்தல்

### இராமநாதன் ஜெயசிங்கம்
### J.P.U.M. - Commisioner of authority
(பிரசித்த சட்டத்தரணி)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், 36, சந்தனமாதா வீதி, பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட சட்டத்தரணியும் முன்னாள் தபாலதிபருமாகிய இராமநாதன் ஜெயசிங்கம் அவர்கள் 10.11.2003 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இராமநாதன் (நெடுந்தீவு மரண விசாரணை அதிகாரி (J.P.), - திருமதி ஞானம்மா இராமநாதன் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னப்பு நாயகம் (ஓய்வுபெற்ற அதிபர்) - அகத்தா தம்பதிகளின் அருமை மருமகனும் திருமதி இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற செல்வி சோபனா, துஷ்யந்தன் (புனர்வாழ்வு அமைச்சு), செல்வி அஞ்சனா (ஆசிரியை), செல்வி கீத்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி வதனா துஷ்யந்தன் (Canada) அவர்களின் அன்பு மாமனாரும் திருமதி புஸ்பவதி (இளைப்பாறிய அதிபர்), ஜீவரத்தினம் (ஓய்வுபெற்ற தபாலதிபர், Canada), திருமதி பாக்கியலீலா (விரிவுரையாளர், Monash University, Australia), ஜெயராஜா (ஆசிரியர், Australia), காலஞ்சென்ற ஜெயபாலன் (P.M.), ஜெயசீலன் (Chemist, Canada), காலஞ்சென்ற பத்மராணி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி புஸ்பராணி (France), மரியசேகரம்பிள்ளை (பொறியியலாளர், தொலைத்தொடர்பு, Australia), திருமதி கமலராணி சௌந்தரநாயகம் (ஆசிரியர், சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்), செல்வநாயகம் (Surveyor, Canada), திருமதி விமலராணி (London), முருகேசு (இளைப்பாறிய P.T.I., India), திருமதி சோதி (Australia), நீக்கிலாப்பிள்ளை, திருமதி றஞ்சினி சௌந்தரநாயகம் (உப அதிபர்), திருமதி றஜித்தா (Canada), ஜெயா ஆரோக்கியநாதர் (London), காலஞ்சென்ற P.M.J. அன்ரனி (A.D.E.), திருமதி அரியமலர் (ஆசிரியர், Canada), M.R.I. செருபீம் (சிரேஷ்ட அரச வழக்கறிஞர், Australia), திருமதி நிர்மலதேவி (ஆசிரியர், Australia), திருமதி இரட்ணேஸ்வரி (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), திருமதி குணசீலி (Canada) ஆகியோரின் அன்புமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 15.11.2003 சனிக்கிழமை காலை 10 மணியளவில் பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டபின் நல்லடக்கத்திற்காக கொழும்புத்துறை சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

*36, சந்தனமாதா வீதி,*
*பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.*
*T.P.222 2300.*

தகவல்:
குடும்பத்தினர்.

(24658)(34-31-18-12)

## யாழ். - கொழும்பு சொகுசு வான் சேவை

யாழ்ப்பாணத்திலிருந்து.....
காலை 6.30 மணி முதலாக
முற்பகல் 11.30 மணி வரைக்கும்.

**ஞானம்ஸ்** ரெக்ஸ்ரைல்ஸிலிருந்து
வான் சேவை தொடங்குகின்றது!

வவுனியா ~~750.00~~ ரூ.600/=
யாழ்.-கொழும்பு ~~1000.00~~ ரூ.850/=

உங்கள் ஆசனப் பதிவுகளை நீங்களே நேரடியாக
உடனே செய்துகொள்ளலாம்.

**YOGAS TRAVELS**
**யோகாஸ் ரவல்ஸ்** 18A, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்.
021 222 3918
021 222 5679
0777 273799
இங்கும் பதிவுசெய்யலாம்: அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. 060 2213454.

(C-31272) (12-17-31)



## பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

எமது ஸ்தாபனத்தின் 45ஆம் வருடப் பூர்த்தியை முன்னிட்டு 5% - 50% விலைக்கழிவு இம்மாதம் 15.11.2003 - 31.01.2004 வரை பாடசாலை. பல்கலைக்கழக பாடப்புத்தகங்களுக்கு வழங்கப்படும்.

★ இப்பொழுது பாடசாலை தவிர்ந்த ஏனையவர்களுக்கும் பீன்ஸ் கணக்கு குற்றிகள் வழங்குகின்றோம். இன்றே விஜயம் செய்யுங்கள்.

★ மாணவர்களுக்கான பாடசாலை, பல்கலைக்கழக பாடப்புத்தகங்கள், புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், பெயின்ற் வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருள்களுக்கான மூலப் பொருள்கள், அழி பொருளகள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள், அலுவலக அலுமாரி, அலுவலக மேசைகள், பயில் அலுமாரி, கம்பியூட்டர் மேசைகள், புத்தக றாக்கைகள், ஆய்வு கூட இரசாயன பொருள்கள், ஆய்வு கூட உபகரணங்கள், O.H.P. புறஜெக்ரர் மற்றும் *அறிவுஅமுது*, *அந்திவானம்* பதிப்பகங்களின் பதிப்புகள், வெளியீடுகள் யாவும் நீங்களே தெரிவுசெய்து பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் :

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,**
**212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(சி-31264) (31-12-17)


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு நடத்தும் சமய அறிவுப் போட்டி - 2003

எமது குழுவினால் வழமை போன்று இவ்வருடமும் நடத்தப்படவுள்ள மேற்படி போட்டிக்கான பரீட்சை எதிர்வரும் 16.11.2003ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு (புதிய நேரம்) பின்வரும் 25 நிலையங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

*வடமராட்சி வலயம்*

- ★ யா/வட. இந்து மகளிர் கல்லூரி
- ★ யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
- ★ யா/கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி

*தென்மராட்சி வலயம்*

- ★ யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
- ★ யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
- ★ யா/மட்டுவில் கமலாசனி வித்தியாசாலை

*யாழ்ப்பாண வலயம்*

- ★ யா/இந்து மகளிர் கல்லூரி
- ★ யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை
- ★ யா/நல்லூர் இந்து மகளிர் பெண்கள் பாடசாலை

*வலிகாம வலயம்*

- ★ யா/கோக்குவில் இந்துக் கல்லூரி
- ★ யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
- ★ யா/இராமநாதன் கல்லூரி
- ★ யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி
- ★ யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
- ★ யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
- ★ யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

*தீவக வலயம்*

- ★ யா/நயினாதீவு மகா வித்தியாலயம்.
- ★ யா/வேலணை மத்திய கல்லூரி
- ★ யா/ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்.மகா வித்தியாலயம்
- ★ யா/காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்
- ★ யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்
- ★ யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்
- ★ யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்
- ★ யா/சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம். வேலணை
- ★ யா/மண்டைதீவு மகா வித்தியாலயம்

மேற்படி போட்டிக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் தவறாது பரீட்சைக்குத் தோற்றி தமது திறமைகளை வெளிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மாணவர்கள் தமக்கு வசதியான எந்தவொரு நிலையத்திலும் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

**சைவசமய விவகாரக் குழு,**
**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.**

(சி-31273) (31-12-17)

## மூளைக்காய்ச்சல் தடுப்பூசி

வலி.கிழக்கு,நவ.13

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள குழந்தைகளுக்கு இரண்டாம் கட்டமாக ஜப்பான் மூளைக்காய்ச்சல் நோய்க்கு எதிரான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமையும், நாளைமறுதினம் சனிக்கிழமையும் இப்பகுதியில் உள்ள மருந்தகங்களில் வைத்து தடுப்பூசி ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக தடுப்பூசி ஏற்றப்பட்டபோது தமது ஒரு வயது முதல் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இம்மருந்தைக் கொடுக்கத் தவறியவர்கள் இச்சந்தர்ப்பத்தை தவறாது பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை இத்தடுப்பூசி வழங்கப்படவுள்ள நிலையங்கள் வருமாறு:-

நாளை வெள்ளிக்கிழமை புத்தூர் மத்திய மருந்தகம், அச்சுவேலி கிராமசபை, உரும்பிராய் மத்திய மருந்தகம், கொக்குவில் கிராம அபிவிருத்தி நிலையம், கட்டப்பிராய் கிராம அபிவிருத்தி நிலையம், சிறுபபிட்டி கிராம அபிவிருத்தி நிலையம் ஆகிய இடங்களிலும்-

நாளைமறுதினம் சனிக்கிழமை கோப்பாய் மகப்பேற்று நிலையம், நீர்வேலி கிராம அபிவிருத்தி நிலையம், அச்செழு கிராம அபிவிருத்தி நிலையம், கொக்குவில் மத்திய மருந்தகம், கோண்டாவில் மத்திய மருந்தகம், திருநெல்வேலி கிராம அபிவிருத்தி நிலையம், ஊரெழு கிராம அபிவிருத்தி நிலையம் ஆகிய இடங்களிலும்-

தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

(எ-9-180)


### லஷ்மி சினிமா இணுவில்



இன்று முதல்
விஜய், ரீமாசென், வடிவேல் (இரு வேடம்), அசில்வித்தியார்தி, மோனிகா இன்னும் பலர் நடிப்பில்
**பகவதி**
புதிய நேரம் 10.30, 2.30, 6.30.
(சி-31260)

### நாகம்ஸ் சுன்னாகம்



3ஆவது வெற்றி வாரம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் வெளியாகிய இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண், விவேக் நடித்த
தினசரி காட்சிகள் :
11.00. 3.00. 7.00. (பு.நே.)
(C/31060)(12)

### லிபேட்டி அச்சுவேலி



ஞாயிறு வரையும்
பிரசாந்த், ஷாலினி, மணிவண்ணன், ஜனகராஜ் நடித்த
**பிரியாத வரம் வேண்டும்**
காட்சி நேரம்: 3.00, 7.00.
(C/31234) (12)

### ராஜா யாழ்ப்பாணம்

விக்ரம், சூர்யா, லைலா, சிம்ரன் நடித்த
**பிதாமகன்** (கடைசிவாரம்)



காட்சிகள் :
10.30, 2.30, 6.30
இரவு 9.30 இற்கு **XXX**
(C-29904) (30)

### நிறைஞ்சனாஸ்

சரத்குமார், தேவயானி நடித்த
**ஒருவன்** (ரீவல்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
**AMERICAN BEAUTY**



## மேற்பார்வையாளர் தேவை

1.சுத்திகரிப்பு மேற்பார்வையாளர்
(Public Health Engineering Supervisor)

தகுதியானவர்கள் உடன் அலுவலகத்திற்கு சமுகம் தரவும்.

**கிளீன்வெல், 866, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.** (24663)(36-17-12-31)


## துயர்பகிர்கிறோம்

எமது பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த
கோப்பாய் தெற்கு யா/260 கிராம அலுவலரான
திரு.சின்னத்துரை தயாபரன் அவர்களின அன்புத் தந்தையாரான

**சின்னப்பு சின்னத்துரை**
(இராசவீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்)

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*நலன்புரிச்சங்கம்*
*பிரதேச செயலகம், கோப்பாய்.*
பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்
(36-12-17-31)

## கண்ணீர் அஞ்சலி



எமது மதிப்புக்குரிய
**திருமதி ஆறுமுகம் பரமேஸ்வரி**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

*அச்செழு, நீர்வேலி.*
மோகன்ராஜ், மதனி, நவராஜ் (பெறாமக்கள்).
(24666) (12-17-31)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆறுமுகம் பரமேஸ்வரி

அச்செழுவைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் பரமேஸ்வரி 09.11.2003 ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் (முன்னாள் மாவட்ட முகாமையாளர், இலங்கை மின்சாரசபை) அவர்களின் அன்பு மனைவியும் கனகராஜ் (லண்டன்), லோகினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஷ்ணானந்தி (லண்டன்), வசந்தராஜா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமியாரும் தர்சன், சோபிதா, சாயிரா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், மகேஸ்வரன், இராமநாதன், சங்கரப்பிள்ளை மற்றும் நடராசா ஆகியோரினதும் சகோதரியும் காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், சரஸ்வதி, செல்வரட்ணம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2003) வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முகவரி:*
***Mr.&Mrs. Vasantharaja***
***23, Gilligans Court,***
***Rowville Vic 3178,***
***Australia. T.P.:0061 397556393.***

தகவல்:
வே.நடராசா (சகோதரன்)
விதானை வளவு,
அச்செழு, நீர்வேலி.
(24665) (31-12-17)

### திருமதி பிறேமதாசா மேரி யோசேப்பின்
(ஓய்வுபெற்ற மருத்துவமாது - யாழ். மாநகரசபை)

அரியாலை, நெடுங்குளம் வீதியைச் சொந்த இடமாகவும் இல. 4. கச்சேரி கிழக்கு ஒழுங்கையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற யாழ். மாநகரசபை மருத்துவமாது திருமதி பிறேமதாசா மேரி யோசேப்பின் அவர்கள் நேற்று (12.11.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிறேமதாசாவின் அன்பு மனைவியும் தயாவதி, ரஞ்சன் என்று அழைக்கப்படும் நவரட்ணம், சந்திரரட்ணம், ராஜன் என்று அழைக்கப்படும் அனுரா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீபன், தேவிகா, கலாவதி, லஷ்மி ஆகியோரின் அன்பு மாமியாரும் டிலாந்தன், கோபிநாத், பிறேம்நாத், வாசுகி, மயூரி, துளசி, பிறேம்ராஜ், தயாளினி, கீர்த்தனா, நீருயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2003) வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.4, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,*
*சுண்டுக்குளி.*

தகவல்:
அ.ஸ்ரீபன்
(மருமகன்).
(24664)(31-12-17)

## நல்லூர் பிரதேச சபை
### 2004ஆம் ஆண்டுக்கான சந்தைகள், இறைச்சிக்கடைகள், கேள்விப்பத்திரம் வழங்கும் கால எல்லை நீடித்தல்

மேற்குறிப்பிட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் படிவம் வழங்கும் கால எல்லை கீழ்க்கண்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

அது சம்பந்தமான விவரங்களை 06.11.2003 நமது ஈழநாடு, 05.11.2003 உதயன், 04.11.2003 தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் பார்வையிடலாம். மேலதிக விவரங்களை நல்லூர், கொக்குவில் பிரதேச சபை உப அலுவலகங்களிலும் பிரதேச சபைத் தலைமை செயலகத்திலும் காரியாலய நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர விநியோகம் | 19/11/2003 | புதன்கிழமை | 12.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி | 21/11/2003 | வெள்ளிக்கிழமை | 10.00 மணிவரை |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | 21/11/2003 | வெள்ளிக்கிழமை | 2.00 மணி |

*பிரதேச சபை தலைமைச் செயலகம்,*
*நல்லூர்.*

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர், நல்லூர் பிரதேச சபை.

(சி-31267)(36-12-17-31)

# தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து பிரதமர்–கூட்டமைப்பினர் கலந்துரையாடல்

கொழும்பு,நவ.13

தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தலைவர்கள் நேற்று பிரதமரைச் சந்தித்து தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை தொடர்பாகக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது, பாதுகாப்பு அமைச்சு தனது அரசிடமிருந்து பறிக்கப்பட்ட பின்னர் சமாதான உடன்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்ல தன்னால் முடியாது எனப் பிரதமர், கூட்டமைப்பினிடம் விளக்கியுள்ளார் என்று கூறப்படுகிறது.

அமைச்சரும் பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ், அமைச்சர்களான மிலிந்த மொறகொட, கரு ஜயசூரிய, லொக்குபண்டார, மஹிந்த சமரசிங்க மற்றும் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் பிரதமருடனான சந்திப்பில் கலந்துகொண்டனர்.

கூட்டமைப்பின் சார்பில் ஆர்.சம்பந்தன் தலைமையில் எம்.பிக்களான அ.விநாயகமூர்த்தி, செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சமாதான முன்னெடுப்புகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு முக்கியமானது. அது அரசிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கும்போது சமாதான முன்னெடுப்பை மேலும் முன்னோக்கி நகர்த்த முடியாது என்றும் பிரதமர் விளக்கினார்.

"அரசுக்கான கூட்டமைப்பின் ஆதரவு முற்றுமுழுதாக சமாதான முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டது. பிரதமரின் சமாதான முயற்சிகளுக்கு கூட்டமைப்பின் ஆதரவும் தொடர்ந்தும் உண்டு. சமாதான முயற்சிகள் முறிவடையாமல் அவற்றை முன்னெடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசின் பொறுப்பு என்று கூட்டமைப்பினர் பிரதமரிடம் எடுத்துக் கூறினர்.

(ஐ)

# கருத்தொருமித்துச் செயற்படுமாறு ஜனாதிபதியை தேரர்கள் வலியுறுத்து

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கலுக்கு ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து முடிவு காணாவிட்டால் நாடு பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என பேராசிரியர் பெல்லன்வல விமலரத்ன தேரர் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் விடுத்த செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

மூன்று பௌத்த பீடங்களைச் சேர்ந்த தேரர்கள் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இச்சந்திப்பின் போது ஜனாதிபதி தான் முன்வைத்திருக்கும் உத்தேச நல்லிணக்க அரசு யோசனை குறித்து தேரர்களுக்கு விளக்கமளித்தார்.

நல்லிணக்க அரசு அமைப்பது தொடர்பாக தாம் மகிழ்ச்சி கொள்வதாக அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

சந்திப்பின் பின்னர் பேராசிரியர் பெல்லன்வெல விமலரத்ன தேரர் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி தான் மேற்கொண்ட நடவடிக்கை பற்றி முன்கூட்டியே அரசுக்கு தெரிவிக்காத காரணத்தால் தான் இந்த நெருக்கடி நிலை தோன்றியுள்ளது. அது போல அரசும் தனது நடவடிக்கை பற்றி முன்கூட்டியே அறிவிக்கத் தவறிய சந்தர்ப்பங்களும் உண்டு. வெவ்வேறு கொள்கைகளுடன் செயற்படுவதால் இந்தச் சிக்கல்நிலை தோன்றியுள்ளது.

இந்த நாட்டு அரசமைப்பு ஜனாதிபதிக்கு அதிக அதிகாரத்தை வழங்கியுள்ளது. தனக்கிருக்கும் அதிகாரத்தின்படி ஜனாதிபதி செயற்பட்டுள்ளார். இருந்தபோதிலும் நாட்டின் நிலை கருதி ஜனநாயக ரீதியில் அவர் செயற்பட வேண்டும்

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ஐ)

# ஜனாதிபதி கூறியதை அரசு கவனிக்கவில்லை அதனாலேயே மூன்று அமைச்சுகள் கையேற்பு!

## நோர்வே குழுவுடனான சந்திப்பில் கதிர்காமர்

கொழும்பு,நவ.13

சமாதான முயற்சிகளை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காகவே ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றார். கடந்த சில மாதங்களாகவே சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் முக்கிய விடயங்கள் குறித்து ஜனாதிபதி அரசுக்கு எடுத்துரைத்தார்.

ஆயினும், அரசு அவற்றைக் கவனத்தில் எடுக்கவில்லை. எனவே தான் ஜனாதிபதி இவ்வாறான தீர்மானமொன்றை மேற்கொண்டார்.

ஜனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் மற்றும் விசேட சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரை நேற்றுமுன்தினம் சந்தித்து நடத்திய பேச்சின் போதே லக்ஷ்மன் கதிர்காமர் இவற்றைத் தெரிவித்தார்.

கதிர்காமர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி எடுத்துள்ள இந்த நடவடிக்கையால் சமாதான முயற்சிகள் பாதிப்படையும் என்று அரசு தெரிவிப்பது அர்த்தமற்றதாகும். பொய்யான குற்றச்சாட்டுகள் மூலம் சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஜனாதிபதி குறித்து பிழையான அபிப்பிராயம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கிறது. புலிகள் அமைப்பினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகளில் ஏற்றுக்கொள்ள முடியாத பல விடயங்கள் இருக்கின்றன. அந்த யோசனைகளில் முஸ்லிம் மக்கள் குறித்து எந்தக் கவனமும் செலுத்தப்படவில்லை - என்றார்.

## ஜனாதிபதி - 'நுஆ' கலந்துரையாடல்

கொழும்பு,நவ.13

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்கும் தனது யோசனை தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகளையும் அமைப்புக்களையும் சந்திக்கவிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா அந்த வகையில் நேற்று பிற்பகல் தேசிய ஐக்கிய முன்னணியின் (நுஆ) தலைவர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

நுஆவின் தலைவி பேரியல் அஷ்ரப், சிரேஷ்ட உப தலைவர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, செயலாளர் சேகு இஸ்டீன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதிக்கு உதவியாக அவரது வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் சந்திப்பில் பங்குபற்றினார்.

(ஐ)

## ஜனாதிபதி - பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தித்தே வந்ததால் நண்பகல் 11.30 மணியளவிலேயே பேச்சு ஆரம்பமானது.

இப்பேச்சின்போது, விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு நடத்தும் பொறுப்பை ஜனாதிபதி முற்றுமுழுதாகக் கையேற்கவேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார் எனத் தெரியவருகிறது. ஆனாலும் ஜனாதிபதி அதற்குத் திட்டவட்டமான பதில் எதனையும் கூறவில்லை என்றும் அறியவந்தது.

ஜனாதிபதியால் பறிக்கப்பட்ட பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை ஆகிய அமைச்சுக்களை உரிய அமைச்சர்களிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரதமர் இச்சந்திப்பில் எழுப்பவில்லை எனவும் அறியப்படுகிறது.

இம்மூன்று அமைச்சுக்களையும் தான் பொறுப்பேற்க வேண்டியதற்கான காரணங்களை ஜனாதிபதி சந்திரிகா, பிரதமரிடம் விளக்கிக் கூறினார் எனத் தெரிகிறது. பெருமளவு நேரம், ஜனாதிபதி அளித்த விளக்கத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஐ.தே.முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளை அடுத்த வாரத்தில் அழைத்துப் பேச்சு நடத்தவிருப்பதாகவும் ஜனாதிபதி பிரதமரிடம் தெரிவித்திருக்கிறார்.

இச்சந்திப்பில் பிரதமருடன் அவரது செயலாளர் பிரட்மன் வீரக்கோன் மட்டும் கலந்துகொண்டார். ஜனாதிபதியுடன் அவரது செயலாளர் டபிள்யூ.ஜே.எஸ்.கருணாரத்னவும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட இயக்குநர் நாயகமுமான மனோ தித்தவெலவும் கலந்துகொண்டனர்.

(ஐ-8)

# வாகனங்களைக் கடத்தி புலிகளின் பகுதிக்குள் விற்பனை செய்துவந்த மூவர் ஹட்டனில் கைது!

கொழும்பு,நவ.13

வாகனங்களைக் கடத்தி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டுசென்று விற்பனை செய்தவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூவரை ஹட்டன் பொலீஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

ஹட்டன் பொலீஸாரினால் ஹட்டன் நகரில் நேற்று மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த நபர்கள் வாகனங்களைக் கடத்தி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டு சென்று அவற்றை அங்கு விற்பனை செய்து வந்துள்ளனர் என்றும் -

இதுவரை இவர்கள் ஐந்து பெறுமதியான வாகனங்களைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டு சென்று விற்பனை செய்துள்ளனர் என்றும் -

இந்த நபர்களுக்கு உதவி செய்தவர்கள் மட்டக்களப்பு மற்றும் பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு தமிழர்கள் என்றும் - ஹட்டன் பொலீஸார் தெரிவித்தனர்.

(எ)

## திருகோண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வருகிறது.

இவர்களில் இருவர் திருகோணமலையில் வைத்து கைதுசெய்யப்பட்டவர்களாவர். தப்பிச்சென்ற நால்வரையும் தேடி பொலீஸார் தேடுதலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவடியில் மக்களின் போக்குவரத்துக்கான ஏற்பாடுகளில் இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டுமென படை அதிகாரிகளிடம் அமைச்சர் வலியுறுத்தினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்பின்னர், வவுனியா அரச செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலும் அமைச்சர் கலந்துகொண்டார். (ஐ-8-164)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த நோர்வேக் குழுவினர், நேற்று மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் ஆலோசனை நடத்திவிட்டு இன்று காலை கிளிநொச்சி செல்கிறார்கள். அங்கு அவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்திக்க இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹெல்கிஸன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. சமாதான முயற்சிகள் சம்பந்தமான சில கடுமையான நிலைப்பாடுகளை இன்றைய பேச்சின்போது விடுதலைப் புலிகள் தெரிவிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதமர் ரணில், ஜனாதிபதி சந்திரிகா ஆகியோரை நேற்று நோர்வேக் குழுவினர் சந்தித்தபின்னரே புலிகளுடனான இன்றைய சந்திப்பு நடைபெறுகின்றது. (ஐ)

# அன்புவின் நினைவு நிகழ்வுகள் வன்னியில் நேற்று நடைபெற்றன

கிளிநொச்சி,நவ.13

பூநகரி 'தவளை' நடவடிக்கையில் வீரகாவியமான லெப்.கேணல் அன்புவின் 10ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று வன்னியில் உள்ள அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பொது ஈகச்சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றிவைத்தார்.

லெப். கேணல் அன்புவின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரை மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுஷா ஏற்றினார். சோதியா படையணியின் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

இளநிலை, முதுநிலை அதிகாரிகளுக்கு மூத்த தளபதி பொட்டு அம்மான் சான்றிதழ்களையும், பரிசில்களையும் வழங்கினார். அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரி - அதிகாரிகள் பற்றி கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கருத்துரை வழங்கினார். பின்னர் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் ஆசிரியர்களுக்கு மணலாறு கட்டளைப் பணியக சிறப்புத்தளபதி கேணல் பால்ராஜ் பால்ராஜ் பரிசில்களை வழங்கினார்.(எ-8)

## நோயாளரை ஏற்றிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகுச் செல்லவிருந்த நோயாளர்களில் பாலசுப்பிரமணியம் தனகராசா (வயது42 - காரைநகர்), சின்னத்தம்பி இராசேந்திரம் (வயது 47 - உடுப்பிட்டி, இமையாணன்) ஆகிய இருவரும் காயமடைந்தனர். இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

குருநாகலில் இருந்து நயினா தீவுக்கு யாத்திரை செல்வதற்காக பஸ்ஸில் வந்த பயணிகளில் ஐவர் காயமடைந்தனர்.

அந்த பஸ்ஸின் சாரதியான ரேதுகாமி ரன்பண்டா (வயது 48 - குருநாகல்) மற்றும் ஐயரத்தின நீலம்மா (வயது 69), ஜி.பிரியங்குகா (வயது 24), கிரேசி மாலதி (வயது 42), பீ.சில்வா நெட் (வயது 60 - மொறட்டுவ) ஆகிய ஐவருமே காயமடைந்தனர். இவர்களும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

(ஐ-6-15-139)


நீங்கள் விண்ணப்பித்து விட்டீர்களா?

IIS IIS IIS IIS IIS IIS IIS



கணனிக் கல்விக்கான புலமைப் பரிசில்திட்டம் -2004

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பமுடிவு திகதி : 15/11/2003

டிசம்பரில் O/L பரீட்சையும்
ஏப்ரலில் A/L பரீட்சையும்
எடுக்கவிருக்கும் மாணவர்களே!

உங்கள் பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையுள்ள காலத்தைப் பயனுள்ளதாக்குவதற்கு, IIS இன் புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் கணனி உலகில் இணைந்து கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
IIS, 100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



வடமராட்சி, யாழ். - கொழும்பு
பயணிகள் வான் சேவை

நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஆசனப் பதிவு செய்யலாம்.
வாடிக்கையாளர் கட்டணம் 900/=

ஜெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்
கொடிகாமம் வீதி, நெல்லியடி. தொ.இ.021-226-3500

JEYA COMMUNICATION, COLOMBO-13
Tel:01-2478444, 01-2478443, 0777-271478

லொறி மூலம் பொருள்களை அனுப்பலாம்.



NEW SCIENCE CENTRE

மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்.

A/L 2005
INORGANIC CHEMISTRY

sat., sun. 11.00 - 12.00 a.m.

BY: அன்பழகன்



பாராட்டி வாழ்த்துகிறார்கள் லாலா சோப் ஸ்தாபனத்தார்



அச்வேலி வடக்கு J/285 கிராம சேவை
உத்தியோகத்தராகிய
உயர்திரு. இராமன் யோகராசா
அவர்கள் சமாதான நீதிவானாக
நியமிக்கப்பட்டதையிட்டு, இதய சுத்தியோடு
மனமுவந்து வாழ்த்துகிறார்கள்.

உரிமையாளர்,
லாலா சோப் தொழிற்சாலை, அச்சுவேலி.


# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பு சின்னத்துரை

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு சின்னத்துரை 11.11.2003 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2003) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜ வீதி, கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
சி.தயாபரன்(மகன்)
(கிராம அலுவலர் - கோப்பாய் தெற்கு)

(24668) (22-14-18)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.11.2003இல்